சங்கு நூல்கள்—11 விலை 4 அணா.

மகா தியாகம்

மகாத்மாவின் உபவாஸ சரித்திரம்



சுதந்திரச் சங்கு காரியாலயம்
திருவல்லிக்கேணி, சென்னை.
1933


மகா தியாகம்

மகாத்மாவின் உபவாஸ சரித்திரம்

"சுதந்திரச்சங்கு" காரியாலயம்
திருவல்லிக்கேணி, சென்னை
1933

விஷய அடக்கம்

		பக்கம்
முன்னுரை	...	1
உபவாஸத்தின் காரணம்	...	3
" அருட் ஜோதியே வழிகாட்டு "	....	8
சபத சாஸனம்	....	12
மன வேதனை	....	28
தேச மக்களின் தவிப்பு	....	30
சமரஸ முயற்சி	....	34
தியாக அக்கினியில் குதித்தல்	....	39
மகா தியாகம்	....	43
கருமேகங்கள்	....	47
வெற்றி	....	57
எரவாடா ஒப்பந்தம்	....	66
உபவாஸம் முடிந்தது	....	69
வாழ்க காந்தியம்	....	77


நண்பர்களே !
எனது பசியைப்பற்றி எனக்குக் கவலை யில்லை. ஆனால், எனது குழந்தைகள் பசியால் தவிக்கின்றன. அவைகளுக்குக் கஞ்சி வார்த்துக் காப்பாற்றுங்கள். . .
I WISH THEY WERE IN OUR HOUSE, DADOO
OLD GENERATION
YOUNG INDIA
PERSONL REGARD
கதர்
கைத்தறி
கிராமக் கைத்தொழில்

டாபுவின் குழந்தைகள்

முன்னுரை

1932-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 13-ந்தேதி காலை. "சாகும் வரையில் பட்டினி கிடப்பேன்" எனக் காந்திஜி விரதம் பூண்ட செய்தி காட்டுத் தீ போல் பாரத நாடு முழுதும் பரவியது. அது கேட்டு முப்பத்தைந்து கோடி இந்திய மக்களும் திடுக்கிட்டுப் போயினர். அந்த உபவாஸப் பேரலை இங்கிலாந்தின் கரையையும் போய் மோதியது; வெகு தூரத்திலுள்ள அமெரிக்கா தேசத்திலும் அதன் எதிரொலி கேட்கப்பட்டது. முதலில் உலக மக்கள் இச் செய்தியைக் கேள்வியுற்றதும் ஆச்சரிய மடைந்தனர்; பலர் இதனை நம்பவுமில்லை. "சாகும் வரை பட்டினியா! இதென்ன புதுமையாகவும், அற்புதமாகவு மிருக்கிறதே!" என்று அவர்கள் எண்ணினர். உலகம் ஆழ்ந்திருந்த பிரமிப்பில், மகாத்மாவின் உபவாஸ விரதத்தின் தத்துவத்தையும், அதன் உத்தேசத்தையும் அதனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இங்குமங்கு முள்ள நாக்கு நீண்ட பேர்வழிகள் சிலர் இந்த உபவாஸத்தைப் பற்றி உதாசினமாகவும், ஏளனமாகவும் பேசினர். "இம்மாதிரி சாவை மாலை யிட்டு வரவேற்பவரும் உலகில் உண்டா? அட பைத்தியமே" என்று ஏசினர் சிலர். ஆனால் அந்த வாரம் முடிவதற்குள்ளாகவே அற்புதமான செய்திகளை நாம் கேள்வியுற நேர்ந்தது.

காந்திஜியின் உயிரை ஆண்டவன் காப்பாற்ற வேண்டுமென இங்கிலாந்தில் பல மாதா கோயில்களிலும் பிரத்யேகமாகப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. வானளாவி நிற்கும் ஹிமய மலையிலிருந்து, நீலக் கடலைத் தொட்டு அணைக்கும் குமரி முனை வரையிலும், ஸிந்து மாகாணத்திலிருந்து அஸ்ஸாம் வரையிலும் உள்ள முப்பத்து முக்கோடி ஜனங்களைக் கொண்ட இந்திய ஜாதியை துயரமும், அச்சமும், நடுக்கமும், வேதனையும், ஏக்கமும் அப்படியே கவ்விக் கொன்

டன். இவற்றினின்றும் விடுபட்டெழுந்ததும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பு சுக்கல் சுக்கலாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்ததையும், பல்லாண்டுகளாகப் பலம் பெற்றிருந்த தீண்டாமை என்னும் கோட்டையின் சுவர்கள் இடித்துத் தரை மட்டமாக்கப் பட்டிருந்ததையும் பாரத மக்கள் கண்டனர்; இடிந்து விழுந்த சுவற்றின் கல்லையும், மண்ணையும் அள்ளி, அப்புறப் படுத்தும் மும்மரமான வேலையில் வலுவு கொண்ட, சுறு சுறுப்பான கைகள் ஈடுபட்டிருந்தன; இதனைக் கண்ணுற்று மக்கள் மகிழ்வெய்தினர்.

இத்தகைய உபவாஸத்தை இதற்கு முன்னர் உலகம் கண்டதே யில்லை. இப்பொழுது நெருக்கடியான நிலைமை தீர்ந்து விட்ட போதிலும், திடீரென ஏற்பட்ட அந்த உபவாஸத்தின் அற்புதத் தன்மையைக் குறித்து இன்றும் உலகம் வியந்து கொண்டிருக்கின்றது; இத்தகைய உபவாஸத்தில் காந்திஜி இறங்கியது நியாயமா, அல்லவா என்று இன்னமும் பலர் தங்களுக்குள் வாதித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தத் தெய்வீக உபவாஸத்திற்குக் காரணமா யிருந்த மனோ வேதனையின் முழுக் கதையும் வெளி யிடப்படும் வரையில் சந்தேகப் பேர்வழிகள் காத்துக் கொண்டுதானிருக்க வேண்டும். இன்று மகாத்மாவுடன் அந்தக் கதையும் எரவாடா மத்திய சிறையின் மதில்களுக்குப் பின்னே சிறை பட்டுக் கிடக்கின்றது!

மகா தியாகம்

உபவாஸத்தின் காரணம்

காந்திஜி இத்தகைய கடுமையான உபவாஸத்தில் இறங்க வேண்டிய காரண மென்ன என்பதை நாம் ஆராய வேண்டுமாயின், கடந்த வருஷம் லண்டன் நகரில் நடந்த இரண்டாவது ஸர்வ கக்ஷி மகாநாட்டுச் சரித்திரத்தைக் கவனிக்க வேண்டும். ஆஹா! அந்த மோசம் மிகுந்த நாடகத்தில் எவ்வளவு தந்திரமும், எவ்வளவு சூழ்ச்சியும் தாண்டவ மாடின? பரிபூரண சுயேச்சையைத் தவிர வேறொன்றையும் இந்தியா ஏற்றுக் கொள்ளாது என்பதை மகாநாட்டில் ஆரம்பத்திலேயே காந்திஜி அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டார். அரசியல் அமைப்பு சம்பந்தமான சில்லரை விஷயங்களைப் பற்றி ஓயாமல் விவாதம் செய்ய இடம் கொடுத்துக் கொண்டு, தங்களுடைய கருத்து இன்னதென்பதை வெளி யிடாமல் ஏமாற்றி வரும் கவர்ன்மெண்டின் கொள்கையை மகாத்மா கண்டித்தார். மகாநாட்டிற்கு வந்திருந்த பலரும் அதைப் பக்மாகக் கண்டித்தும், காக்ஷிகள் ஒன்றன் பின் ஒன்றாக மாறிக் கொண்டிருந்தனவே யன்றி, உருப்படியான காரியம் எதுவும் நிறைவேறவே யில்லை. கடைசியில் சிறுபான்மையோர் ஸப் கமிட்டியின் கூட்டம் நடக்க வாரம்பித்தது. தங்களுக்குள் உள்ள சண்டை, சச்சரவுகளை மகாநாட்டில் விவாதித்து அதைக் கண்டு உலகம் எள்ளி நகை யாடும்படியாக விட காந்திஜி விரும்ப வில்லை. ஆகவே மகாநாட்டை ஒத்தி வைத்து, இவ் விஷயங்களை அந்தரங்கமாக ஆலோசித்து, முடிவு செய்யலாமென அவர் பிரேரித்தார். அவர் தலைமை வகித்து இந்த லவிவாங்களை நடத்த வேண்டுமென அழைக்கப்பட்டார்.

தம்மைப் பிடித்துக் கொள்ள கூண்டு தயாராக வைக்கப்பட்டிருந்ததையும், காக்ஷிகளின் வெறும் மாயத் தன்மையையும் அவர் கண்டு கொண்டார். இருந்தாலும் சோதனையை எதிர்த்து நிற்க அவர் நிர்மானித்தார்.

வகுப்பு வார்க்கியில் ஊறிக் கிடந்த பல பேர்வழிகளை வேண்டுமென்றே அரசாங்கம் பிரதிநிதிகளாகப் பொறுக்கி வைத்துக் கொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான வாக்காளருக்கும் இவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமலிருந்தது. ஜாதி வேற்றுமைத் தீக்கு எண்ணெய் வார்க்கவும், வகுப்புப் பேயின் ஆட்டத்திற்கு உடுக்கை யடிக்கவுமே இந்தப் "பிரதிநிதிகள்" இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர். ஒரு காரியமும் செய்ய வொட்டாமல் தடுக்க இவர்களுக்கு நன்முகப் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்களும் நல்ல பிள்ளைகளாக இதையே செய்து வந்தனர்.

இந்நிலைமையில் தான், சட்ட சபைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சில ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமென்ற உரிமை காந்திஜியின் முன்பு வற்புறுத்தப்பட்டது. மற்ற வகுப்புகள் ஒப்புக் கொண்டால் தாழ்த்தப் பட்டவர்களுக்குச் சில ஸ்தானங்கள் அளிக்கப்படுவதைப் பற்றி மகாத்மா கவலை கொள்ள வில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியான டாக்டர் அம்பேத்கரிடமும் அவர் இம்மாதிரியே சொன்னார். ஆனால் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் தங்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வளவு இவ்வளவு ஸ்தானங்கள் வேண்டுமென்று ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டிருந்தனர்; இதன் நடுவே வீக்கிய வகுப்பினர் தங்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டனர். இச் சண்டைக்கு நடுவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு ஸ்தானங்கள் கொடுப்பதென்பதைத் தீர்மானிப்பது அசாத்தியமாகவிருந்தது. உடனே அவர்களின் பிரதிநிதியான டாக்டர் அம்பேத்கர் தங்களுக்குத் தனித் தொகுதி வேண்டுமென்றும், தங்களுக்கென பிரத்யேகமாக ஸ்தானங்

கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்றும் கூச்சல் போடக் கிளம்பி விட்டார். சிறுபான்மையோர் ஒப்பந்தம் என்று ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் திடீரென உண்டாகி விட்டதல்ல. காங்கிரஸ் சரியான படி நடந்து கொள்ளாவிட்டால், ஐரோப்பியர்கள், முஸல் மான்களுடனும், இதர சிறு பான்மை வகுப்புக்களுடனும் சேர்ந்துகொண்டு காங்கிரஸை எதிர்த்துப் போராடுவர் என்று வங்காள ஐரோப்பியர் கோஷ்டியைச் சேர்ந்த மிஸ்டர் வில்லியர்ஸ் ஏற்கனவே இந்தியாவில், ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனல் 1931-ம் வருஷம், நவம்பர் மாதம், 13-ந் தேதியன்று, சிறு பான்மை சப் கமிட்டிக் கூட்டத்தில் பிரதம மந்திரி, உத்தியோக தோரணையில் இந்த ஒப்பந்தத்தையும், தாழ்த்தப் பட்டவர்களின் தனித் தொகுதிக் கோரிக்கையையும் ஆசீர்வதித்த பொழுது தான் புதரில் மறைந்திருந்த பாம்பைக் காந்திஜி கண்டார்.

ஹிந்துக்களான தாழ்த்தப்பட்ட சகோதரர்களை ஹிந்துக்களின் தொகுதியிலிருந்து பிரித்து விடும் யோசனை மகாத்மாவுக்குப் பிடிக்கவில்லை; அது விஷமத் தன்மை வாய்ந்த தென்பதையும், அதில் பெருத்த ஆபத்துக்கள் அடங்கி யிருக்கின்றன வென்பதையும் அவர் தமது ஞான திருஷ்டியால் அறிந்து கொண்டார். ஆகவே எப்படியாவது, என்ன செய்தாவது, தமது உயிரைக் கொடுத்தாவது அந்த யோசனையை மண்டையி லடிக்க அவர் தீர்மானித்தார். அவர் பேசிய ஒரு பேச்சு இன்றும் நமது செவிகளில் ரீங்கார மிட்டுக் கொண்டிருக்கிறது. அச்சமயத்தில் தமது மனத்துயர் அனைத்தையும் அவர் வார்த்தைகளாக அப்படியே கொட்டி விட்டார். அவ் வார்த்தைகள் தான் என்ன? "மற்ற சிறுபான்மை வகுப்புகள் தனித்தொகுதி கோருவதன் அர்த்தத்தை நான் அறிந்து கொள்ள முடியும். ஆனல் "தீண்டத் தகாதவர்களி"ன் சார்பில் தனித் தொகுதி கோரப்படுவது எனக்கு கத்தியைக் கொண்டு என் சதையைத் தாண்டிப்பது போன்றிருக்கிறது. அது என் ஹிருதயத்தையே பிளக்கின்றது. அந்த யோசனையின் அர்த்தம் என்ன? நிரந்தரமாக ஒரு பகுதியினரைப்

பிரித்து வைப்பதுதான். இது நியாயமா? இந்தியாவிற்கு ஸ்வதந்திரம் கிடைக்காமல் போனாலும் போகட்டும். ஆனால் ஏழைப் பஞ்சமர்களின் ஜீவாதாரமான நலனை மட்டும் நான் விற்க மாட்டேன். இந்தியாவிலுள்ள அத்தனைத் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் நான் ஒருவன்தான் பிரதிநிதி............ வேண்டுமானால், இதைச் சோதிக்க விரும்பினால் என்னை இந் தியாவில் நிறுத்தி வைத்து ஓட்டு எடுத்துக் கொள்ளுங்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஓட்டுக்கள் எனக்குத்தான் அதிகமாக விழும்; நான்தான் தெரிந்தெடுக்கப் படுவேன். தனித் தொகுதியும், தனிப் பிரதிநிதித்துவமும் கூடவே கூடாது என்றும், அதனால் பயனெதுவும் கிட்டாதென்றும் பாரத நாடு முழுதும் பிரசாரம் செய்து நிரூபிப்பேன்."

தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் விஷயத்தில் சீக்கியர்களுடனும், முஸ்லீம்களுடனும், தாழ்த்தப்பட்ட மக்களை இணைப்பது சரியானதல்ல என்று கூறி அவர் பேசியதாவது: "ஸீக்கியர்கள் எந்தெந்தக் காலத்திற்கும் ஸீக்கியர்களாகவே யிருக்கலாம்; முஸ்லீம்களும் அப்படியே; ஐரோப்பியர்களும் அப்படித்தான்; ஆனால் "தீண்டத்தகாதவர்கள்" என்றென் றும் தீண்டத் தகாதவர்களாகவே இருப்பார்களா? 'தீண்டத் தகாதவர்கள்' என்ற ஒரு ஜாதி இந்தியாவில் இருப்பதற்கு அவர்கள் வெட்கப்பட வேண்டியதில்லை; அதற்காக வெட் கப்பட வேண்டியவர்கள் வைதீக ஹிந்துக்களே; ஹிந்து மத சீர்திருத்தக்காரர்களில் பலர் இன்று இவ் வுண்மையை உணர்ந்திருக்கிறார்கள் என்பதையும், இந்த மாசை அகற்ற அவர்கள் கங்கணம் கட்டிக்கொண் டிருக்கின்றனர் என்பதை யும் இக்கச் சமிட்டியும், உலகம் முழுதும் அறிந்து கொள்ளட் டும். எங்களுடைய வாக்காளர் ஜாபிதாவிலும், ஜன சங்கி யைப் புத்தகங்களிலும் தீண்டத் தகாதவர்களைத் தனி வகுப் பாகப் பிரித்து எழுத நாங்கள் விரும்பவில்லை. ஹிந்து மதம் செத்துப் போனாலும் போகட்டும்; தீண்டாமை உயிருடனி ருக்கக் கூடாது. தனிப் பிரதிநிதித்துவ மளிக்கும் முறை ஹிந்து மதத்தையே பிளவு படுத்துவதாகும் என எச்சரிக்கை செய்கிறேன். தீண்டத்தகாதவர்கள் இஸ்லாமிய மதத்திற்கோ

அல்லது கிறிஸ்தவ மதத்திற்கோ மாற்றப் படுவதைக்கூட நான் ஸகித்துக் கொள்ள முடியும். ஆனால் கிராமந்தோறும் ஹிந்துக்களையே இரண்டு பிரிவாகப் பிரித்து விட்டால் அதனால் எண்ணிறந்த பிளவுகள் உண்டாகி, ஜாதிக் கலகங்கள் ஏற்பட்டு, ஹிந்து மதம் அழிந்து போவதை என்னால் ஸகிக்க முடியாது. அதனால் ஹிந்து மதத்திற்கும் லாபமில்லை; தாழ்த்தப் பட்டவர்களுக்கும் லாப மில்லை. இந்தியாவிலுள்ள எல்லாத் தீண்டத்தகாத மக்களின் சார்பிலும் அம்பேத்கர் அவர்கள் பேசி, புதிய உரிமையை வற்புறுத்தியது சரியானதல்ல. தீண்டத் தகாதவர்களின் பிரச்னையை நான் எனது உயிரைப்போல் பிரியமாகப் பாவித்து வருகிறேன். அந்த ஏழைகள் தான் எனது உயிர். இந்த உலக சக்ராதிபதத்தையே எனக்கு அளித்தாலும் நான் அந்த மக்களின் உரிமையை விற்க ஒப்புக் கொள்ள மாட்டேன்............தீண்டத் தகாதவர்களின் ராஜீய உரிமைகளைப்பற்றி வாதாடுகிறவர்களுக்கு இந்தியாவின் நிலைமையைப்பற்றி ஒன்றுமே தெரியாது; இந்திய சமூகம் இன்று எப்படி அமைந்திருக்கிற தென்பதும் அவர்களுக்குத் தெரியாது. தனித் தொகுதி என்று கூறி, தீண்டத்தகாதவர்களைப் பிரித்து வைப்பதை நான் ஒப்புக் கொள்ளவே முடியாது. என் பிராணி யுள்ளவரை அந்த யோசனையை நான் எதிர்த்தே தீருவேன். நான் ஒருவனாகவே நின்றாலும் சரி, என் உயிரையும் தியாகம் செய்து அதை நான் எதிர்க்கத் தயாரா யிருக்கிறேன் என்பதை அழுத்தமாகச் சொல்லுகிறேன்."

தாழ்த்தப்பட்ட வர்களுக்குச் சட்ட சபைகளில் பிரதிநிதித்துவ மிருக்கக் கூடாதென்பது மகாத்மாவின் கக்ஷியல்ல. சரியான வகையில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டு மென்பதே அவரது கருத்து; அதிலேயே அவர் ஆவல் கொண்டார். ஆனால் சர்க்கார் அம்மக்களைப் பிரித்து விடுவது அவரது மனதில் சுருக்கெனத் தைத்தது. தனித் தொகுதிக்குப் பதிலாக வேறு ஏதாவது யோசனைகளை வெளியிட்டால் அவற்றைப் பரிசீலனை செய்யத் தாம் தயாராக விருப்பதாக அவர் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களுக்கு

அறிவித்தார். ஆனல் யாதொரு யோசனைகளும் அவருக்குக் கிடைக்க வில்லை. இங்ஙனம் கிடைக்காததற்கு எத்தனையோ சக்திகள் காரணமாக விருந்தன.

" அருட் ஜோதியே வழி காட்டு "

1931-ம் வருஷம், டிஸெம்பர் மாதம், 28-ந் தேதியன்று காந்திஜி பம்பாய் வந்து சேர்ந்தார். காரியக் கமிட்டியின் கூட்டம் அதே இடத்தில் 31-ந் தேதி கூடுவதாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இங்கிலாந்திலிருந்து தமது தாய் நாட்டிற்குத் திரும்பி வரும்போதுகூட ஏழைப் பஞ்சமர் களைப் பற்றியே மகாத்மா எண்ணிக் கொண்டு வந்தார். பாதுகாப்புகள், சமஸ்தானப் பிரச்னை முதலிய வற்றை விரைவில் தீர்த்து வைத்தோ அல்லது தகுந்த தலைவர்களிடம் அவற்றைப் பற்றிய பரிசிலனையை விட்டு விட்டோ, தாம் வகுப்புப் பிரச்னையையும், முக்கியமாகத் தாழ்த்தப் பட்டவர்களின் பிரதிநிதித்துவ விஷயத்தையும் தீர்த்து வைக்க வேண்டு மென்ற மன உறுதியுடனேயே காந்திஜி கப்பலை விட்டிறங்கினர். ஆனல் இவ் வேலையில் அவர் உடனே ஈடுபடுவதினின்றும் சில சம்பவங்கள் அவரைத் தடுத்தன. இந்திய மண்ணில் கால் வைத்தாரோ இல்லையோ,பண்டித ஜவஹர்லால்நேருவையும்,ஸ்ரீயுத ஷெர்வானியையும், அவர்கள் பம்பாய் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்காகச் சென்று கொண்டிருக்கையில் அலஹாபாத்தில் சர்க்கார் கைது செய்து விட்ட செய்தி அவரது காதில் விழுந்தது. அது கேட்டு அவர் திடுக்கிட்டார்; மனங் கலங்கினர். இன்னும் நாட்டின் நாலா பக்கங்களிலும் நடைபெற்ற சம்பவங்களையும் அவர் கவனிக்க வேண்டி யிருந்தது.

இது ஒருபுற மிருக்க, தாழ்த்தப்பட்ட மக்களை தமது மனதிலிருத்திக் கொண்டே அவர் வந்து சேர்ந்தார் என்று நாம் மேலே குறிப்பிட்டோம். பம்பாயில் வந்திறங்கியதும்,

அவர் பத்திரிகா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அதன் உண்மை நன்கு புலனாயிற்று. அவர் சொன்னதாவது:—

"தாழ்த்தப்பட்ட மக்கள் என்மீது சீற்றங் கொண்டிருக்கின்றனர் எனக் கூறுவது பொய். எனது ஒவ்வொரு எலும்பும், தசையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காகவே ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏழை வாயில்லாச் சீவன்கள் வாழ வேண்டியதற்காக என் உயிரைத் தியாகம் செய்ய, முக மலர்ச்சியோடு சாக நான் தயாராக விருக்கின்றேன். நானும் ஒரு பஞ்சமன் தானே?"

இவ்வாறு பேசிய மகாத்மா, நாடெங்கும் சுற்றித் திரிந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாகத் திரட்டி, தாம் தான் அவர்களின் உண்மையான பிரதிநிதி என்பதையும், தமது கருத்துக்களே நேர்மையானவை என்பதையும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும், உலகிற்கும் எடுத்துக் காட்ட விருப்பங் கொண்டார்.

ஆனால் தங்கள் சாயம் வெளுக்கப்பட விரும்புவதைச் சர்க்கார் பார்த்துக் கொண்டிருப்பார்களா? ஆகவே காந்திஜியின் எண்ணங்கள் நிறைவேற வொட்டாமல் தடுக்க அவர்கள் தீர்மானித்து, யாதொரு காரணமும் கூறாமல், 1932-ம் வருஷம், ஜனவரி மாதம் 4-ந் தேதி யன்று, நள்ளிரவில் அவரைக் கைது செய்து, எரவாடா சிறையிலடைத்தனர். ஆம், மகாத்மாவின் ஸ்தூல சரீரம் எரவாடா சிறைக் கம்பிகளுக்குப் பின் தள்ளப்பட்டுப் பூட்டப்பட்டதென்னவோ வாஸ்தவம் தான். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணத்தில் தோய்ந்து கிடந்த அவரது சிந்தனையை அவர்கள் சிறைப்படுத்த வில்லை; அவர்களால் அதைச் சிறைப்படுத்தவும் முடியாது.

ஆகவே, இந்தியாவின் முப்பத்தைந்து கோடி மக்களின் மனதை ஆட்கொண்டுள்ள அந்த மகான், எரவாடாவின் மதில்களுக் குள்ளிருந்து கொண்டே தமது சிந்தனையை வளர்த்தார்; தாழ்த்தப் பட்டவர்களின் பிரச்னை அவரது

மனதை விட்டகலவே யில்லை. தமது காரியங்களை நிறைவேற வொட்டாமல் செய்த சர்க்காரின் சூழ்ச்சியையும் அவர் உணர்ந்தார். அமைதியான நேரங்களில், அவகாசம் மிகுந்த வேளைகளில் தாம் லண்டனில் செய்த பிரஸங்கங்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தாம் கொடுத்த வாக்குறுதிகளும் அவ்வப்பொழுது அவரது நினைவை நிரப்பின. அதிகார மமதை கொண்ட ஒரு துரைத்தனம் தமது வாழ்வின் முக்கியமான காரியத்தைச் செய்ய வொட்டாமல் தடுத்து விட்ட அநீதி ஒரு பக்கமும், அதே அதிகார வர்க்கம் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் கொடுமையும் அவரது மனதை வாட்டின. சிறைக்குள்ளிருந்து கொண்டே, பின்னர் கூறிய சூழ்ச்சியை எப்படி எதிர்ப்பதென்று அவர் யோசித்தார். ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தித்தார்; அடர்ந்த இருள் நடுவே அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் தமக்கு உற்ற வழியைக் காட்டுமாறு அனுதினமும் ஈசனை வேண்டினார்; ஆத்ம சக்தியை வளர்த்தார்; பிரார்த்தனைகளின் போது "அருட் ஜோதியே வழி காட்டு" என்னும் தமக்கு மிக்க பிரியமான கீழ்க் கண்ட கிறிஸ்து சமயப் பாடலைத் தவறாமல் பாடி வந்தார்:—

அருள் சோதியே! வழி காட்டிடு! என்னை
அழைத்துமே ஐய சென்றிடு
இருள் சூழுதே அப்பா! எங்கு நான் செல்வேன்?
இல்லம் தூரத்தி லாச்சுதே.
மருளும் உற்றன எந்தன் பாதங்கள்;
மன்னவா அருள் செய்குவாய்
பொருள் பல இனி பார்க்க வேண்டிலேன்;
போது மிந்த அநுபவம்.

"வழி எனக்கு நீ காட்டுக!" என
வந்தனை செய் தறிகிலேன்
விழி குறித்திட்ட படி யிதுவரை
வேகமாய்ச் சென்ற பாவியேன்

வழி பயம் உண்டு; ஆயினும் டம்பம்
வளர் திமிர் கொண்டு சென்றனன்
பழி மிகுந்த என் பழைய நாட்களை
பரனே! நீயு மறப்பையோ?

அகதியின்மீது ஆசி தந்திடு!
அது இங்கு வழி காட்டிடும்:
சக்தி தன்னையும், சரளைக் கல்லையும்
சர மழையையும் தாண்டுவேன்

அகற்றிடும் இருள்; அருண காலத்தில்
அமரர் புன்னகை காணுவேன்,
பகலைப் பார்த்திட ஆர்வமுற்றனன்
பரமனே வழி காட்டுவாய்!

நிர்மல சிந்தையுடன் தன் தாளினைத் தொட்டு வணங்கும், தன்னையே நெஞ்சத்தில் நினைத்து வேண்டி யழைக்கும் எந்த உண்மையான பக்தனைத் தான் ஆண்டவன் ஆட்கொள்ள மாட்டான்? ஆகவே மகாத்மாவுக்கு முன் ஒருநாள் பளிச் சென்று ஒரு வெளிச்சம் தோன்றியது; ஒரு யோசனையும் பிறந்தது; ஒரு உறுதியும் வளர்ந்தது; ஒரு பிரதிக்ஞையும் எழுந்தது; அவரது அந்தராத்மாவும் ஒரு ஆக்ஞை யிட்டது; ஆண்டவன் கட்டளை அவரது செவிகளில் விழுந்தது. உடனே அவர், மார்ச்சு மாதம், 11-ந் தேதியன்று தமது பிரார்த்தனையை முடித்துவிட்டு, இந்தியா மந்திரியான ஸர் ஸாம்யூல் ஹோருக்கு ஒரு கடிதம் எழுதினார். தாழ்த்தப் பட்டவர்களுக்கென தனிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவ தாக சர்க்கார் முடிவு செய்தால், தாம் அதற்குப்பின் உயிர் வைத்துக் கொண்டிருக்க முடியாதென்றும், ஆகவே "உயிர் போகும் வரையில் உபவாஸம்" இருக்கத் தாம் தீர்மானித்து விட்டதாகவும் அக்கடிதத்தில் மகாத்மா அறிவித்தார். முதலில் மகாத்மாவுக்கும், ஸர் ஸாம்புல் ஹோருக்கும், பிறகு மகாத்மாவுக்கும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மாக்டனல்டுக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்துகளின் விவரத்தை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

சபத சாஸனம்

ஸர் ஸாம்யூல் ஹோருக்கும், பிரதம மந்திரி ராம்ஸே மாக்டனால்டுக்கும் மகாத்மாஜி எழுதிய கடிதங்களும், அவற்றிற்கு மேற்படியார்களிடமிருந்து அவருக்குக் கிடைத்த பதில்களும் பின் வருமாறு :—

எரவாடா மத்திய சிறை,
11—3—32.

அன்பார்ந்த ஸர் ஸாம்யூல் அவர்களுக்கு,

வட்டமேஜை மகா நாட்டின் இறுதியில் சிறுபான்மையோரின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது நான் கூறிய வார்த்தைகள் தங்களுக்கு நினைவிருக்கலாம். "தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி கொடுப்பதை என் உயிரைக் கொடுத்தாவது எதிர்ப்பேன்" என நான் அப்பொழுது சொன்னேன். அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கேற்பட்ட ஒரு உணர்ச்சி மிகுதியாலோ, அன்றி சொல் அலங்காரத்துக்காகவோ நான் அவ்விதம் சொல்லவில்லை. விஷயத்தின் முக்கியத்தை நன்கு உணர்ந்தே, மனப்பூர்வமாக நான் அவ்வார்த்தைகளை வெளியிட்டேன்.

இந்தியாவுக்குத் திரும்பியதும், நான் அங்கு கூறிய படியே தாழ்த்தப் பட்டோருக்குத் தனித் தொகுதி கூடாதென்று பிரசாரம் செய்வதென எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அது ஆகாமல் போய் விட்டது.

எனக்கு அனுமதிக்கப் பட்டுள்ள சமாச்சாரப் பத்திரிகைகளிலிருந்து துரைத்தனத்தார் வகுப்புப் பிரச்னை சம்பந்தமாகத் தங்களுடைய முடிவை சீக்கிரத்தில் வெளியிட்டு விடுவார்கள் என எனக்குத் தெரிகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி ஏற்படுத்துவதென ஒரு திட்டம் வரையறுக்கப்பட்டு விட்டால் உடனே எனது சபதப்படி நான் நடந்து கொள்ள வேண்டுமென நான் எண்ணினேன். ஆயினும் முன்னெச்சரிக்கை செய்யாமல் அங்ஙனம் செய்வது

சரியல்லவென எனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அங்கு நான் பேசிய பேச்சில் அவ்வளவு பொருள் உண்டு என்பதை அவர்கள் உணருவதற்கு நியாயமில்லை யல்லவா?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி தரலாகா தென்பதற்கு நான் சொன்ன காரணங்களை மீண்டும் இங்கு சொல்லத் தேவையில்லை. என்னையும் தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவனாகவே நான் எண்ணிக் கொள்ளுகிறேன். பிறர் கக்ஷி எவ்வாறாயினும் தாழ்த்தப்பட்ட ஏழைகளின் கக்ஷி வேறானது. அவர்கள் சட்ட சபையில் பதவி வகிப்பதை நான் எதிர்ப்பவனல்ல. ஆனால் அம்மக்களில் வயது வந்தவர்களான ஆண், பெண் அனைவருக்கும் கல்வி உடமை, சொத்துரிமை ஆகிய நிபந்தனைகளின்றி ஓட்டுரிமை இருக்கவேண்டுமென்று கோருகிறேன். படிப்பு, பணம் முதலியன இல்லை என்பதற்காக ஓட்டுரிமையை எவருக்கும் மறுக்கலாகாது என்றும் நான் கருதுகிறேன். பிற ஜாதி களுக்கு ஓட்டுரிமை விஷயத்தில் என்னென்ன கட்டுப்பாடுகள் செய்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தகைய இடைஞ்சலும் இருக்கவே கூடாது. ஆனால் அவர்களுக்குத் தனித்தொகுதி ஏற்படுத்தினால் அதனால் அவர்களுக்குக் கஷ்டமே யுண்டாகும்; அதனால் ஹிந்து மதத்திற்கே ஹானி ஏற்படும். இதை நன்றாக உணரவேண்டுமானால் தற்காலத்தில் "தீண்டா" மக்கள் எவ்வாறு "மேல் ஜாதியார்" என்று சொல்லப்படுபவருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனரென்பதை உணரவேண்டும். இந்தத் தனித் தொகுதி ஏற்பட்டு விட்டால் அது ஹிந்து மதத்தையே வெட்டிப் பல பிரிவுகளாகப் பிரித்து விடும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விஷயம் எனக்கு மிகவும் முக்கியமானதாகும். அது எனக்கு மத விஷயமுமாகும். இதை நோக்குகையில் இது சம்பந்தமான ராஜீய அம்சம் எவ்வளவு முக்கியமானதா யிருந்தாலும் அது மறைந்தே போகிறது. தனித் தொகுதியினால் ஏற்படும் தார்மிக நஷ்டத்திற்கு முன்னே ராஜீய நஷ்டம் கூட அவ்வளவு பெரிதன்று. இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்

பிட விரும்புகிறேன். அதாவது நான் சிறு பையனுயிருந்த காலத்திலிருந்தே இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைப்பதில் சிரத்தை காட்டி தியாகம் செய்து வந்திருக்கிறேன். தற்புகழ்ச்சியின் நிமித்தம் நான் இதைச் சொல்லிக்கொள்ளவில்லை. அவர்கள் விஷயத்தில் எனது உணர்ச்சி எவ்விதமிருக்கிறதென்பதை நன்கு அறிய இவைகளையெல்லாம் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எத்தனையோ நூற்றாண்டுகளாக தாழ்த்தப்பட்ட வகுப்பினரை நசுக்கிவந்த 'மேல் ஜாதி' ஹிந்துக்கள் என்ன பிராயச்சித்தம் செய்து கொண்டாலும் அது போதவே போதாது என்பது எனது அபிப்பிராயம். அவர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் அவதிகளுக்குத் தனித் தொகுதி ஒருக்காலும் ஏற்ற மருந்தாகாது.

ஆகவே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அளிக்க முடிவுசெய்யும் பக்ஷத்தில் நான் பட்டினி கிடந்து இறக்க வேண்டியதுதான் என்பதை அவர்களுக்கு மிக்க மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் சிறைவாசியாக விருக்கையில் இவ்விதம் நடந்து கொள்ளுவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குத் தொந்தரவாக விருக்கு மென்பதையும், என்னைப் போன்ற ஒருவர் இவ்விதம் ராஜிய விஷயத்தில் நடந்துகொள்ள முன் வருவது பைத்தியக்காரத்தன மென்றும், இன்னும் அதைவிடக் கேவலம் என்றும் பலர் கருதக்கூடும் என்பதையும் நான் அறிவேன். ஆனல் இதற்குப் பதிலாக நான் சொல்ல வேண்டியது ஒன்றுதான். நான் அனுஷ்டிக்க விரும்பும் வழி ஏதோ ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதற்காக என்று நினைக்க வேண்டாம். அவ்விஷயம் என் உயிருக்குயிரானது. அது என் மனச் சாக்ஷியைப் பாதிக்கின்றது. ஆகவே அதை மீறி நடக்க என்னல் இயலாது.

என்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்து விட்டால் நான் உண்ணுவிரதத்தை விட்டு விடுவேன் என நினைக்க

வேண்டாம். இருந்தாலும் இப்போது எனக்கேற்பட்டுள்ள பயத்திற்கு ஆதாரமில்லாம லிருக்கக் கூடுமென்றே நம்பியிருக்கிறேன். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதி யளிக்க உத்தேசிக்கவில்லையென்றே நம்பியுள்ளேன்.

என் மனதை அலைத்து வரும் இன்னொரு விஷயத்தையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்னொரு காரணத்திற்காகவும் நான் இந்த உபவாஸ விரதத்தை மேற்கொள்ள வேண்டுமென்று என் மனம் துடி துடித்துக் கொண்டிருக்கிறது. நாட்டில் எங்கும் அடக்குமுறை கடுமையாகத் தாண்டவமாடுகின்றது. எந்த நிமிஷத்தில் அதிர்ச்சியும், உணர்ச்சியு மேற்பட்டு, நான் அதற்காக வென்று இந்தத் தியாகத்தை ஏற்பேனோ அதை என்னால் சொல்ல முடியாது. நியாய வரம்பை மீறி அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. சர்க்காரின் பயங்கரச் செயல்கள் நாட்டில் வலுத்து வருகின்றன. துரைத்தனத்தின் ஆங்கில உத்தியோகஸ்தர்களும், இந்திய அதிகாரிகளும் காட்டு மிராண்டிகளாக மாறி வருகின்றனர். சர்க்கார் "சபாஷ்" சொல்வார்கள் என்ற ஆசையால் இந்திய அதிகாரிகள் வரவர தீமை மிகுந்தவராகின்றனர். ஜனங்களிடம் சிறிதாவது இவ்வூழியர்களுக்குப் பக்தியில்லை. மனிதத் தன்மைக்குக் குறைவான முறையில் உடன் பிறந்த சகோதரர்களின்மீது அடக்கு முறைகளைச் செலுத்தி வருகின்றனர். ஜனங்கள் பயமுறுத்தப்பட்டு அடக்கப் படுகின்றனர். அவர்களின் பேச்சுச் சுதந்திரமும் அடக்கப்படுகின்றது. சட்டத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒழுங்கீனமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். நாட்டில் காலித்தனம் வலுத்து வருகின்றது. பொது ஜன சேவை செய்ய முற்பட்டுள்ள ஸ்திரீகள் தங்கள் மானத்துக்கும் பங்கம் விளைந்துவிடுமென்று பயப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் உண்டுபண்ணும் சுதந்திர உணர்ச்சியை நசுக்கவே இவையாவும் செய்யப்படுகின்றன வென்று நான் நினைக்கிறேன். சாதாரண சட்டங்களை மீறுவதைத் தடுப்பதற்காக

மட்டும் அடக்கு முறை அநுஷ்டிக்கப்படவில்லை. இவ்விஷயங்களை யெல்லாம் கவனிக்கையில் ஜனநாயகத் தத்துவம் என்பது இருப்பதாகவே தெரிய வில்லை. நான் சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்று பார்த்ததிலிருந்து உங்களுடைய ஜனநாயக தத்துவமெல்லாம் நுனிப் புல் மேயும் கதை தான் என்பதையும், முக்கியமான திட்டங்கள் யாவும் ஒரு சிலரால் பார்லிமெண்டைக் கலக்காமலே நிர்ணயம் செய்யப்படுகின்றன வென்பதையும், தாங்கள் செய்யும் காரியம் இன்னதெனச் சரியாக அறியாமலேயே அங்கத்தினர்கள் அவற்றை ஆதரித்து விடுகின்றன ரென்பதையும் நான் நன்கு தெரிந்து கொண்டேன்.

ஜன நாயகம் என்று சொல்லப்படும் ஒரு முறையில் 33 கோடிக்கு மேற்பட்ட புராதனமான ஒரு ஜன சமூகத்தின் கதிமோக்ஷத்தை நிர்ணயிக்கக் கூடிய அதிகாரம் ஒருவரிடமிருப்பதும், அந்த அதிகாரத்தை நிலை நிறுத்த அவர் நாசத்துக்கு ஹேதுவான பயங்கரத் தன்மையுடன் கூடிய எல்லா சக்திகளையும் உபயோகிப்பதும் சற்றும் பொருத்தமாக வில்லை. இதை நினைக்கையில் என் உடல் பதறுகிறது; உயிர் துடிக்கிறது.

ஏற்கனவே நமது இரண்டு தேசத்து ஜனங்களுக்குள்ளும் மனக் கசப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அடக்குமுறையினால் அந்த மனக் கசப்பு அதிகமாகியே தீரும். இந் நிலையில் பொறுப்பு மிகுந்த நான் இத் தீங்குகளை எவ்வாறு நிறுத்துவது? கஷ்டத்தை எவ்வாறு தவிர்ப்பது? சட்ட மறுப்பை நிறுத்தி விட்டால் இக் கஷ்டம் தீர்ந்துவிடுமா? ஒருக்காலும் தீராது. சட்ட மறுப்பு என்பது என்னைப் பொறுத்த மட்டில் ஒரு மதக் கோட்பாடாகும். இயற்கையிலேயே நான் ஜனநாயகத் தத்துவக் கொள்கை யுடையவன். மிருக பலத்தினால் இச்சையை நிறைவேற்றுவது என் கொள்கைக்கு நேர் விரோதம். ஆகவே பலாத்கார முறைக்குப் பதிலாகக் கையாளவேண்டிய தக்க முறை சாத்வீக எதிர்ப்பே யாகும். அவசியமான சந்தர்ப்பங்களில், நியாயமாக அந்த முறையைக் கையாள வேண்டி யிருக்கிறது. அது தன்னலத் தியாகத்தை

அடிப்படையாகக் கொண்ட தொரு முறையாகும். கஷ்டத்தைத் தானே ஏற்றுக் கொள்ளுவதும், சமயம் வந்தபோது பட்டினி கிடந்து சாவதுமே சத்தியாக்கிரகியின் வேலை. அந்த மகா தியாகத்தி லிறங்க எனக்கு இன்னும் நேரம் வரவில்லை. எனது அந்தராத்மா அத்தகைய கட்டளையை யிடவில்லை. ஆனல் வெளியே நடக்கின்ற காரியங்களைப் பற்றிப் படிக்கும்போது எனது உயிர் நிலையே ஆடிப்போகிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி தருவது பற்றி யான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை உங்களுக்குச் சொல்லா திருப்பதற்கில்லை. அத்தகைய உபவாஸ சமயம் ஒன்றை நான் ஏற்றுக் கொள்ளவும் இடமிருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் இக் கடிதம் பற்றிய விஷயங்களை நான் இரகஸ்யமாகவே வைத்திருப்பேன். ஸர்தார் வல்லபாய், ஸ்ரீயுத மகாதேவ தேசாய் முதலியவர்கள் என்னோடிருப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றனராதலால் அவர்களுக்கு மட்டும் இவ் விஷயம் தெரியும். இக் கடிதத்தைத் தங்களிஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) எம். கே. காந்தி.

இந்தியா மந்திரியின் பதில்

இந்தியா ஆபீஸ், ஒயிட் ஹால்,
13—4—32

அன்புள்ள மிஸ்டர் காந்திக்கு,

மார்ச்சுமீ 11ட யிட்டுத் தாங்கள் எழுதியனுப்பிய கடிதத்திற்கு நான் பின்வருமாறு பதிலெழுதுகிறேன். தாழ்ந்த வகுப்பினருக்குத் தனித் தொகுதி கொடுக்கும் விஷயமாகத் தமக்குள்ள பலமான உணர்ச்சியை நான் பூரணமாக அறிவேன். இவ் விஷயத்தின் உசிதா உசிதங்களை அறிந்தே நாங்கள் ஒரு முடிவு கூற உத்தேசித்திருக்கிறோம். லார்டு லோதியன் கமிட்டி தனது சுற்றுப் பிரயாணத்தை இன்னும் முடிக்கவில்லை யென்பது தங்களுக்குத் தெரியும். அக்கமிட்டியின் முடிவை நாங்கள் அறிந்து கொள்ள இன்னும் சில வாரங்கள்

பிடிக்கும். அந்த ரிப்போர்ட்டு வந்தபின், நாங்கள் மிக்க ஜாக்கிரதையாக அதைப் பரிசீலனை செய்து பார்த்து தங்களுடைய அபிப்பிராயத்தையும், தங்களைப் போன்று என்னைக் கூடிய மற்றவர்களின் அபிப்பிராயங்களையும் நன்கு கவனித்து பிறகே ஒரு முடிவு கூறுவோம். தாங்கள் எங்களுடைய நிலையிலிருந்தால் நாங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறோமோ அதைத்தான் செய்வீர்கள் என்பது நிச்சயம். கமிட்டியின் யாதாஸ்துக்காகத் தாங்கள் காத்திருந்து அது வந்த பின் அதைப்பற்றித் தீர்க்கமாக ஆராய்ந்தே ஒரு முடிவு சொல்லுவீர்கள். இது சம்பந்தமாக இரு தரப்பிலும் வெளியிடப்பட்ட அபிப்பிராயங்களையும் தாங்கள் கவனிப்பீர்கள். இதைத்தான் நாங்களும் செய்ய விருக்கிறோம். இதைத் தவிர நான் ஒன்றும் தற்சமயம் அதிகமாகச் சொல்லுவதற்கில்லை. தாங்களும் இதை விட அதிகமாக எதிர்பார்க்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

அவசரச் சட்டம் விஷயமாக நான் முன்னம் தனியாகவும், பஹிரங்கமாகவும் சொன்னதைத் தான் மீண்டும் சொல்ல வேண்டி யிருக்கிறது. கவர்ன்மெண்டின் அஸ்திவாரத்தையே தாக்கத் திட்டமாக முயற்சி நடப்பதால் அந்தச் சட்டங்களைப் பிறப்பிக்க வேண்டியது அவசியமென்பதே என் அபிப்பிராயம். இந்தியா கவர்ன்மெண்டாரும், மாகாண கவர்ன்மெண்டுகளும் தங்களுக்குள்ள விசேஷ அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யவில்லை. அவர்கள் பழிக்குப் பழி வாங்கும் தன்மையுடனோ, அளவுக்கு மீறியோ ஒரு காரியமும் நடவாமலிருக்கத் தங்களாலான முயற்சி செய்து வருகிறார்கள் என்பதும் எனக்குத் திட்டமாகத் தெரியும்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கு அவசியமான வரையிலும், பயங்கர இயக்கத்தை அடக்கவும் எங்கள் உத்தியோகஸ்தர்களையும், மற்றவர்களையும் பாதுகாக்கவுமே அவசரச் சட்டங்கள் அனுஷ்டித்து வருவோம்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) சாமியேல் ஹோர்.

பிரதம மந்திரிக்கு காந்திஜியின் கடிதம்

எரவாடா மத்திய சிறை;
18—8—32

அன்புள்ள நண்ப,

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரதிநிதித்துவ விஷயமாக நான் மார்ச்சு மாதம் 11ந்தேதி எழுதிய கடிதத்தை ஸர் ஸாமுயூல் ஹோர் உங்களுக்கும், மந்திரி சபையினருக்கும் காட்டி யிருப்பாரென்று நம்புகிறேன். அந்தக் கடிதத்தை இக்கடிதத்தின் ஒரு பாகமாக பாவித்து, இதனுடன் சேர்த்துப் படிக்க வேண்டும்.

சிறு பான்மை சமூகத்தினரின் பிரதிநிதித்துவ விஷயமாகப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள முடிவை நான் படித்துப் பார்த்து, அதைப்பற்றி வெகுவாக ஆலோசனை செய்தேன். நான் ஸர் ஸாமியூல் ஹோருக்கு எழுதிய கடிதத்தை அனுசரித்தும், சர்வகக்ஷி மகாநாட்டின் சிறு பான்மைக் கமிட்டிக் கூட்டத்தில் நான் தெரிவித்ததை யொட்டியும், என்னுடைய உயிரைக் கொடுத்தேனும் உங்களுடைய முடிவை நான் எதிர்க்க வேண்டி யிருக்கிறது. உப்பும், ஸோடாவும் சேர்ந்தோ, சேராமலோ ஜலத்தை மட்டில் பருகிக்கொண்டு உயிர் போகும் வரை பட்டினி கிடப்பதன் மூலமாகவே நான் அதை எதிர்க்கக் கூடும். இவ்விதம் நான் உபவாஸ மிருந்து வரும் காலத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தாங்களாகவோ, அல்லது பொது ஜன அபிப்பிராயத்தின் நிர்ப்பந்தத்தினலோ தங்களுடைய முடிவை மாற்றிக் கொண்டு, பொதுத் தொகுதிகளின் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும்படி வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ ஏற்பாட்டை வாபீஸ் வாங்கிக்கொண்டு விடும் பக்ஷத்தில் இந்த உபவாஸம் நின்று விடும். அந்தப் பொதுத் தொகுதி எவ்வளவு விரிவானதாக இருந்தாலும் சரியே.

மேலே குறிப்பிட்டபடி செப்டம்பர் மீ 20-ந் தேதிக்குள் அந்த முடிவைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மாற்றிக்

கொள்ளாவிடில் அன்று பகல் முதல் எனது உபவாஸம் ஆரம்பமாகி விடும். உங்களுக்குப் போதுமான அவகாசமிருக்கும்படி இந்தக் கடிதத்தின் விவரத்தைத் தந்தி மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கும்படி இங்குள்ள அதிகாரிகளை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவ்விதம் அவர்கள் செய்யாவிடினும், மிகவும் மெதுவான மார்க்கம் மூலமாக இது உங்களிடம் சேருவதற்கு வேண்டிய அவகாசத்தையும் நான் கொடுத்திருக்கிறேன்.

இந்தக் கடிதத்தையும், ஸர் ஸாம்யூல் ஹோருக்கு நான் ஏற்கனவே எழுதியுள்ள கடிதத்தையும் கூடிய சீக்கிரத்தில் வெளியிடும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் சம்பந்தப்பட்ட வரையில் நான் சிறைச்சாலை விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து வருகிறேன். என்னுடைய சகாக்களான ஸர்தார் வல்லபாய் படேல், மகாதேவ தேசாய் இவர்களைத் தவிர நான் வேறொருவருக்கும் இவைகளின் விவரங்களைத் தெரிவிக்க வில்லை. ஆனால் நீங்கள் சம்மதப்படும் பக்ஷத்தில் என்னுடைய கடிதங்கள் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு இடமேற்பட வேண்டுமென நான் விரும்புகிறேன். அதனாலேயே கூடிய சீக்கிரத்தில் இந்தக் கடிதங்களை வெளியிட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் இவ்வித முடிவைச் செய்ததற்காக வருந்துகிறேன். ஆனால் நான் தீவிர மதப் பற்றுடையவனாதலால் இவ்விதம் செய்வதைத் தவிர எனக்கு வேறு வழி யில்லை. நான் ஸர் ஸாம்யூல் ஹோருக்கு எழுதியிருந்த கடிதத்தில் தெரிவித்திருந்தது போல், உபவாச காலத்தில் சிறையில் வைத்திருக்கும் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நினைத்து, என்னை விடுதலை செய்துவிட்டாலும் என் உபவாஸம் நிற்காது. ஏனெனில் உங்களுடைய முடிவை எதிர்ப்பதற்கு எனக்கு வேறு வழி யிருப்பதாகத் தெரியவில்லை. கண்ணியமற்ற வேறு எந்த வழியிலும் விடுதலை யடையவும் நான் விரும்ப வில்லை.

என்னுடைய முடிவு தவறுனதாக விருக்கலாம். தனித் தொகுதிகளை ஏற்படுத்துவது தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கே தீங்கை விளைவிக்கக் கூடுமென்று நான் நினைப்பதும் தவறுனதாக விருக்கலாம். அவ்விதமாயின் வாழ்வின் தத்து வத்தைப் பற்றி எனக்கு இதர அம்சங்களில் இருந்துவரும் அபிப்பிராயம் சரியானதாக விருப்பதற்கில்லை. அவ்விதம் அது தவருயின் பட்டினி கிடப்பதன் மூலமாக உயிரைக் கொடுப்பது அதற்குத் தகுந்த பிராயச்சித்தமாக விருக்கும். என்னுடைய கொள்கைகளில் குழந்தைப் பிள்ளைகளைப் போல் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கும் எண்ணிலடங்கா ஸ்திரீ, புருஷர்களுக்கு இருந்துவரும் மகத்தான பளுவையும் நான் நிவர்த்தி செய்தவனுவேன். அவ்விதமின்றி என்னு டைய அபிப்பிராயம் சரியாயின்,—அது சரியென்பதில் எனக் குச் சிறிதும் சந்தேகமில்லை—சென்ற இருபத்தைந்து வரு ஷங்களாக நான் நடத்தி வந்திருக்கும் வாழ்வுத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தவனுவேன். அவ்விதம் நான் நடத்தி வந்ததால் வெற்றி ஏற்படாமலு மிருக்கவில்லை.

தங்கள் அன்புள்ள நண்பன்,
(ஒப்பம்) எம். கே. காந்தி.

பிரதம மந்திரியின் பதில்

10, டௌனிங் தெரு,
8—9—32.

அன்புள்ள மிஸ்டர் காந்திக்கு,

நான் உங்களுடைய கடிதத்தைப் பெற்று மிக்க ஆச்சரிய மடைந்தேன்; வருத்தமு மடைந்தேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் விஷயமாகக் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் முடிவினுல் ஏற்படும் நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமலேயே நீங்கள் இக் கடிதத்தை எழுதி யிருக்கிறீர் கள் என்றே நான் நினைக்க வேண்டி யிருக்கின்றது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரை என்றென்றும் ஹிந்து சமூகத்திலிருந்து ஒதுக்கி விடுவதை நீங்கள் உறுதியாக

ஆக்ஷேபித்து வந்திருக்கிறீர்கள். இதை நாங்கள் எப்பொழுதும் அறிந்திருக்கிறோம். சர்வ கக்ஷி மகாநாட்டின் சிறுபான்மைக் கமிட்டிக் கூட்டத்தில் உங்களுடைய உட்கருத்தை நீங்கள் தெளிவுபடுத்தி யிருக்கிறீர்கள். மார்ச்சு மாதம் 11-ந் தேதி ஸர் ஸாம்யூல் ஹோருக்கு நீங்கள் எழுதிய கடிதத்திலும் அதை மீண்டும் அறிவித்திருக்கிறீர்கள். ஹிந்து சமூகத்தினரில் பெரும்பாலோர் உங்களுடைய அபிப்பிராயத்தை ஆதரிக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆகவே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரதிநிதித்துவ விஷயத்தை முடிவு செய்கையில் இந்த அம்சத்தை நாங்கள் முக்கியமாகக் கவனித்தோம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் ஸ்தாபனங்கள் பலவற்றினிடமிருந்து கிடைத்திருந்த விஞ்ஞாபனங்கள் காரணமாகவும், நீங்களே ஒப்புக் கொண்டுள்ளபடி அவர்களுக்குச் சமூகத் துறையில் இருந்து வரும் பல அசௌகரியங்களை உத்தேசித்தும், சட்ட சபைகளில் கிரமமான பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அவர்களுக்குள்ள பாத்யதையைப் பாதுகாப்பது எங்களுடைய கடமையென்று நாங்கள் கருதியபோதிலும், அந்தச் சமூகத்தினரை ஹிந்து உலகினின்று பிரித்துவிடக்கூடிய காரியம் எதையும் நாங்கள் செய்யவில்லை. மார்ச்சு மாதம் 11-ந் தேதி யெழுதிய கடிதத்தில் நீங்களே சட்ட சபைகளில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படுவதில் ஆக்ஷேபமில்லை யென்று தெரிவித்திருக்கிறீர்கள். கவர்ன்மெண்டார் செய்துள்ள முடிவின்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஹிந்து சமூகத்தின் ஒரு அங்கமாகவே யிருந்து வருகின்றனர். ஹிந்து வாக்காளர்களுக்குச் சரி சமத்துவமான சுதந்திரத்துடன் அவர்கள் அந்தத் தொகுதிகளில் வோட்டுச் செய்வார்கள். ஆனால் முதல் இருபது வருஷ காலம் வரையில், ஓட்டுரிமை விஷயத்தில் அவர்கள் ஹிந்து சமூகத்தின் ஒரு அங்கமாகவே இருந்து வந்தபோதிலும், ஒருவரையறுக்கப்பட்ட பிரத்யேக தொகுதிகள் மூலமாக தங்களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும் பாதுகாத்துக் கொள்ள அவர்களுக்கு வசதி ஏற்படும். இப்

போதைய நிலைமையில் இது அவசியமென்று நாங்கள் நினைக்கிறோம். இந்தத் தொகுதிகள் ஏற்படுத்தப்படும் இடங்களிலும் ஹிந்துத் தொகுதிகளில் வோட்டுச் செய்ய அவர்களுக்கு உரிமை யில்லாமல் போய் விடாது. ஹிந்து சமூகத்தை அவர்கள் சேர்ந்தவர்கள் என்பதற்கு எவ்விதப் பாதகமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அவர்கள் இரண்டு வோட்டுகளைப் பெறுவார்கள். நீங்கள் வகுப்புத் தொகுதி என்று கூறுவதை நாங்கள் வேண்டுமென்றே அவர்களுக்கு ஏற்படுத்தாமலிருக்கிறோம். தாழ்ந்த வகுப்பினர் எல்லோரையும் பொது அல்லது ஹிந்துத் தொகுதிகளில் சேர்த்திருக்கிறோம். இதனால் மேல் ஜாதி ஹிந்துக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருடைய வோட்டுகளைக் கோரவும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேல் ஜாதியாருடைய வோட்டுகளைக் கோரவும் இடமேற்படும். இவ்விதமாக ஹிந்து சமூகத்தின் ஒன்றுபட்ட தன்மை பாதுகாக்கப் பட்டிருக்கின்றது.

ஆனால் ஜவாப்தாரியான ஆக்ஷியின் ஆரம்ப காலத்தில் சட்டசபையில் எந்தக் கக்ஷியினர் அதிகமாக ஸ்தானங்களைப் பெற்றிருக்கின்றனரோ அவர்களிடத்திலேயே அதிகாரம் மாறுமாதலால், ஜாதி ஹிந்துக்களால் பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டுக் கிடப்பவர்கள் என்று நீங்களே ஒப்புக்கொண்டிருக்கும் அந்தச் சமூகத்தினர் தங்களுடைய குறைகளையும், லக்ஷியங்களையும் வெளியிடவும் கவர்ன்மெண்டாராவது, சட்ட சபையாவது தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் தங்களுக்கு விரோதமான முடிவைச் செய்து விடுவதைத் தடுக்கவும், தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க அவர்களுக்கு உரிமையிருக்க வேண்டுமென்று நாங்கள் எண்ணினோம். அதாவது தங்களுடைய கக்ஷியைத் தெரிவித்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை யிருக்க வேண்டும். அது நியாயமானதென்பதை நிஷ்பக்ஷபாத மற்ற யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இப்போதைய நிலைமையில் எவ்வித வோட்டுச் சுதந்திர முறையிலும் அவர்கள் பிரத்யேகத் தொகுதிகளில் தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும், தங்

களுக்கு ஜவாப்தாரிகளாக விருக்கக் கூடியவர்களாகவு முள்ள பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பது சாத்தியப் படுமென்று நாங்கள் நினைக்க வில்லை. ஏனெனில் மேல் ஜாதி ஹிந்து ஓட்டர்கள் அதிகமாகவுள்ள தொகுதிகளாலேயே அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாக விருப்பார்கள்.

எங்களுடைய ஏற்பாட்டின்படி பொது ஹிந்துத் தொகுதிகளில் அவர்களுக்குள்ள ஓட்டுரிமையுடன் ஒரு வரையறைக் குட்பட்டு பிரத்தியேகத் தொகுதிகள் ஏற்படுவதால் ஆரம்பத்தில் அவர்களுக் கேற்படும் அனுகூலமானது தனித் தொகுதிகள் மூலமாக சிறுபான்மை சமூகத்தினரான முஸ்லீம்கள் போன்றவர்களுக்கு ஏற்படும் பிரதிநிதித்துவ முறையின் தர்மத்திற்கும் மாறானது. உதாரணமாக ஒரு முஸ்லிம், ஒரு பொதுத் தொகுதியில் ஓட்டுச் செய்யவோ அல்லது அபேக்ஷகராக விருக்கவோ முடியாது. ஆனால் ஓட்டுச் சுதந்திர முள்ள எந்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பொதுத் தொகுதிகளில் ஓட்டு செய்யவோ அல்லது அவைகளில் அபேக்ஷகர்களாக நிற்கவோ சுதந்திர முடையவர்களாக விருப்பார்கள். முஸ்லீம்களுக்குப் பிரதேசவாரியாக ஓட்டுத் தொகுதிகளை ஏற்படுத்தி யிருப்பதால் அவர்கள் அதிகத் தொகுதிகளில் ஸ்தானங்களைப் பெறுவதற்கில்லை. பல மாகாணங்களில் அவர்களுக்குரியதை விட அதிகப் பிரதிநிதித்துவத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். பிரத்யேகத் தொகுதிகள் மூலமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகள் குறைவாகவே யிருப்பார்கள். அவர்களுடைய ஜனத் தொகைக்குத் தகுந்த பிரதிநிதித்துவம் அவர்களுக்கு ஏற்படுவதற்காகவும் இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கவில்லை. அவர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்ட சிலராவது சட்ட சபைகளில் இருக்கவேண்டு மென்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுளது. அவர்களுக்கு எங்கும் ஒதுக்கி வைத்திருக்கும் தனி ஸ்தானங்களும் அவர்களுடைய ஜனத்தொகை விகிதாசாரத்தை விடக் குறைவாகவே யிருக்கின்றன.

பட்டினி கிடந்து உயிரை விடும் அதி தீவிரமான முறையில் இறங்க நீங்கள் உத்தேசித்திருக்கிறீர்கள் என்று தெரிகின்

றது. இதர ஹிந்துக்களுடன் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கலப்புத் தொகுதி ஏற்படும்படி செய்வதற்காக நீங்கள் பட்டினி கிடப்பதாகவில்லை. ஏனெனில், அதற்கு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஹிந்து சமூகத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காகவும் நீங்கள் பட்டினி கிடக்கப் போவதாக இல்லை. ஏனெனில் அதற்கும் இப்பொழுதே ஏற்பாடு செய்யப்பட்டுளது. பலவிதமான அவதிகளுக்குட்பட்டுக் கஷ்டப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளைத் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரம் பெறுவதைத் தடுப்பதற்காகவே நீங்கள் உபவாசமிருந்து உயிரை விடுவதாகச் சொல்லுகிறீர்கள். நீங்கள் இத்தகைய முடிவுக்கு வந்திருப்பதன் காரணத்தை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. உள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமலே இவ்வித முடிவுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றுதான் நான் நினைக்க வேண்டி யிருக்கிறது.

சிறு பான்மைப் பிரச்னை விஷயத்தில் இந்தியர்கள் இன்னும் தங்களுக்குள் ஒரு முடிவைச் செய்து கொள்ள வில்லை. அவர்கள் பொதுவாக வேண்டிக் கொண்டதன் பேரிலேயே கவர்ன்மெண்டார் தங்களுடைய இஷ்டத்திற்கும் விரோதமாக இந்தப் பிரச்னை விஷயத்தில் ஒரு முடிவைக் கூற ஒப்புக் கொண்டார்கள். அந்த முடிவை இப்பொழுது அவர்கள் வெளியிட் டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட் பட்டன்றி, அதை அவர்கள் மாற்றுவார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஆகவே கவர்ன்மெண்டின் முடிவு அப்படியே தானிருக்க வேண்டுமென்றும், பல சமூகங்களும் சேர்ந்து சமரஸமாக ஒரு முடிவைச் செய்துகொண்டு அதை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் தான், தாங்கள் தீர்க்காலோசனையின் பேரில் வெளியிட்டுள்ள முடிவை அவர்கள் தள்ளிவிட முடியுமென்றும் நான் உங்களுக்குப் பதிலளிக்க வேண்டி யிருக்கிறது.

இருந்தாலும் கவர்ன்மெண்டார் வெளியிட்டுள்ள முடி

வின் விவரங்களை மறுபடியும் ஊன்றிக் கவனித்து நீங்கள் செய்து கொண்டுள்ள முடிவுக்கு அது அவசியத்தை உண் டாக்கி யிருக்கின்றதா என்பதை யோசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) ஜே. ராம்சே மாக்டனல்டு.

காந்திஜியின் இறுதிக் கடிதம்

எரவாடா மத்திய சிறை,

9—9—32.

அன்புள்ள நண்ப,

உங்களுடைய கடிதத்தின் முழு விவரமும் தந்தி மூலம் அனுப்பப்பட்டு இன்று எனக்குக் கிடைத்தது. எல்லா விஷயங்களையும் ஒளிக்காமல் சொல்லி யிருப்பதற்காக உங் களுக்கு வந்தன மளிக்கிறேன். ஆனால் நான் உத்தேசித் துள்ள காரியத்திற்கு நீங்கள் கற்பிக்கும் கருத்து என் புத்தி யில் பட்டதே யில்லை. அங்ஙனம் நீங்கள் எண்ணுவதற்காக நான் வருந்துகிறேன். எந்த வகுப்பினருக்காகப் பேச நான் பாத்தியம் கொண்டாடி யிருக்கிறேனோ அந்த வகுப்பின் நலத்தைத் தியாகம் செய்து விடுவதற்காக உயிரை விடவும் நான் விரும்புவதாக நீங்கள் எனக்கில்லாத ஒரு விருப்பத் தைக் கற்பிக்கிறீர்கள். நான் உத்தேசித்துள்ள அதி தீவிர மான காரியமே அப்படிப்பட்ட துர் எண்ணம் கற்பிக்கப்படு வதைத் தடுக்குமென்று நான் எதிர் பார்த்தேன். இவ் விஷ யம் என்னைப்பற்றின வரையில் மத சம்பந்தமானது என உங் களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இரண்டு ஓட்டுகளைப் பெறப்போவது அவர்களைப் பாதுகாக்கவும் செய்யாது; ஹிந்து சமூகம் பிளவுபட்டுப் போவதைத் தடுக்கவும் செய்யாது. தாழ்த்தப்பட்ட வகுப்பி னருக்குத் தனித் தொகுதி ஏற்படுத்துவதானது ஹிந்து மதத்தை அழிக்கவேண்டிய என்னைத்துடன் ஒரு விஷத்தை ஊசி மூலம் செலுத்துவதற்கு ஒப்பாகும்; தாழ்த்தப்பட்ட

வகுப்பினருக்கு அது எவ்வித நன்மையையும் செய்யாது. இதுவே எனது அபிப்பிராயம்.

உங்களுக்கு எவ்வளவு அனுதாப மிருந்தாலும், இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஜீவாதாரமான இவ் விஷயத்தைப்பற்றின வரையில் சரியான முடிவுக்கு நீங்கள் வர முடியாதென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஜனத்தொகை பிரகாரம் கிடைக்கக் கூடியதை விட அதிகமாகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதை நான் ஆக்ஷேபிக்கவே மாட்டேன். ஹிந்து சமூகத்திற் குட்பட்டவர்களாக விருக்க அவர்கள் சம்மதப்படுகையில் சட்டத்தின்மூலம் அவர்களை ஒரு பிரத்தியேக சமூகமாகப் பிரித்து விடுவதைப் பற்றியே நான் ஆக்ஷேபிக்கிறேன். உங்களுடைய முடிவு நிலைத்துவிடுமானால், ஒடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் தங்களுடைய சகோதர மக்களை வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் கை தூக்கி விடுவதற்காகத் தங்களுடைய வாழ்வை அர்ப்பணம் செய்து வருகிற சீர்திருத்தக்காரர்களின் வேலை பாழ்பட்டு விடுமென்பதை நீங்கள் உணர்கிறீர்களா ?

ஆகவே, எனது விருப்பத்திற்கு விரோதமாகவே, எனது தீர்மானப்படி நான் நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிய முடிவு சம்பந்தமாக மட்டும் நான் விசேஷமாக உங்களுக்கு எழுதியிருப்பதிலிருந்து உங்களுடைய மற்ற முடிவுகளை நான் அங்கீகரிப்பதாக நீங்கள் எண்ணிவிடக் கூடாது. வேறு பல முடிவுகளும் விசேஷமாக ஆக்ஷேபிக்கத் தக்கனவா யிருக்கின்றன. ஆனால் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்னையை முன்னிட்டு பிராணத் தியாகம் செய்துகொள்ளும்படி எனது மனச்சாக்ஷி என்னைத் தூண்டி யிருப்பதுபோல் அந்தப் பிரச்னைகள் விஷயத்தில் அப்படிப்பட்ட தீவிர உணர்ச்சி எனக்கு இன்னும் ஏற்படவில்லை.

தங்கள் அன்புள்ள நண்பன்,

(ஒப்பம்) எம். கே. காந்தி.

மன வேதனை

1932-ம் வருஷம், ஆகஸ்டு மாதம் 17-ந்தேதியன்று, வகுப்புப் பிரச்னைத் தகராறு சம்பந்தமான தமது தீர்ப்பை பிரதம மந்திரி வெளியிட்டார். காந்திஜி எந்த ஆபத்தை எதிர் பார்த்தாரோ அந்த ஆபத்துக்கு அஸ்திவாரம் போடுவதாகவே அந்தத் தீர்ப்பு விளங்கியது. தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏராளமான தனித் தொகுதிகள் சிருஷ்டிக்கப்படுமென்றும், பொதுத் தொகுதிகளிலும் அந்த வகுப்பினர் அபேக்ஷகர்களாக நிற்கலாமென்றும், இந்தத் தனித் தொகுதிகளும், ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதும் இருபது வருஷ காலம் வரையில் தானிருக்குமென்றும் அத் தீர்ப்பு கூறியது. இதைக் கண்டதும் காந்திஜியின் மனம் கொதிப்புற்றுக் கிளர்ந்தெழுந்தது. 1932-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 18-ந்தேதியிட்டு அவர் பிரதம மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் இந்த அவரது மனத் துடிப்பையே நாம் காண்கிறோம். இந்த மன வேதனையே "சாகும் வரையில் பட்டினி கிடந்து" அதை எதிர்ப்பதென்ற தீவிர உணர்ச்சியை அவருக்கு ஊட்டியது. தம்முடைய இந்தக் கடிதத்தை உடனே தந்தி மூலம் பிரதம மந்திரிக்கு அறிவிக்கும்படி அவர் சர்க்காரை வேண்டிக்கொண்டார். இக்கடிதத்திற்குப் பிரதம மந்திரி செப்டம்பர் மாதம் 8-ந்தேதியன்றே பதில் எழுதியிருக்கிறார். ஆகஸ்டு மாதம் 18-ந்தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 8-ந்தேதி வரையில் காந்திஜியின் கடிதத்திற்கு என்ன கதி நேரிட்டது? அதை மடித்துத் தலையணையாக வைத்துக்கொண்டு ஸிம்லா தூங்கியதா? அது அவசரமான கடிதம் என்பதை ஏற்க பம்பாய் சர்க்கார் மறுத்து விட்டதா? தந்தி மூலமாக அறிவிக்கும்படி காந்திஜி கோரியதைப் புறக்கணித்துவிட்டு சர்க்கார் அதைச் சாதாரண தபால் மார்க்கமாக அனுப்பினார்களா? அல்லது பிரதம மந்திரியின் செக்ரடேரியட்டில் அது சௌக்கியமாக உறங்கிக்கொண்டிருந்ததா? இந்த மர்மத்தை அறிய இந்தியாவும், உலகமும் விரும்புவது மிகவும் நியாயமேயாகும்.

காந்திஜியின் கடிதத்திற்குப் பிரதம மந்திரி விடுத்த பதிலிலிருந்து நமக்கு என்ன தெரிகின்றது? காந்திஜியின் எண்ணத்தை நிறைவேற்றி வைக்க சர்க்கார் யாதொரு முயற்சியும் செய்யவில்லை. தாழ்த்தப் பட்டவர்களுக்கு இரட்டை ஒட்டுகள் தருவது அவரது எண்ணத்தைத் திருப் திப்படுத்துவதாகாது. இது ஒரு சாமர்த்தியமான சூழ்ச்சியே யாகும். தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதிகளை ஏற்படுத்தும் எண்ணமும் கைவிடப்படவில்லை. இம்மட்டோ? பிரதம மந்திரி தமது எல்லையையும் மீறி, காந்திஜிக்குக் கெட்ட எண்ணங்களை வேறு அதில் கற்பித்திருந்தார்.

ஆகவே தமது முடிவை நிறைவேற்றுவதைவிட வேறு வழி யில்லை யென்பதை மகாத்மா கண்டார். ஹிந்து மதத் தில் "ஐந்தாவது ஜாதி" ஒன்று சிருஷ்டிக்கப்படுவதை அவர் சாத்தானின் செயல் எனக் கண்டிக்கவில்லையா? தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஹிந்து மதத்தை விட்டுப் பிரிய மனமில் லாமலிருக்கையில், சட்டம் மூல்யமாக அவர்களைப் பிரிக்க ஒரு மூன்றாவது பேர்வழிக்கு என்ன அதிகார மிருக்கிறது? இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலைமை தான் என்ன? கிராமங்களில் சிதறிக் கிடக்கும் அந்த லக்ஷக் கணக்கான மக்கள் ஜாதி ஹிந்துக்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்; அவர்களால் ஒடுக்கப்பட்டு அவதியுறுகின் றனர். தங்கள் உயிர் வாழ்வுக்கு அவர்கள் ஜாதி ஹிந்துக்க ளின் முகத்தையே எதிர் பார்க்கவேண்டி யிருக்கிறது. அவர் களுடைய தாரித்திரியமோ சொல்லி முடியாது; அறியா மைக்கோ எல்லை யில்லை; அவர்கள் வசித்து வரும் நிலைமை யையும், நடத்திவரும் வாழ்க்கையையும் காண்கையில் நெஞ் சம் குமுறுகிறது. இத்தகைய அவர்களது நிலைமையை ஒரு சட்டத்தைக் கொண்டு உயர்த்தி விட முடியா தென்பதை எவரும் கண்டு கொள்ளலாம். அவர்களது முன்னேற்றத்திற் காக ஐம்பது வருஷ காலம் பாடுபட்டுள்ள காந்திஜிக்கு, ஜாதிப் பகைமையை ஒழித்துத் தள்ளும் சீர்திருத்த வேலை யில் இறங்கினால்தான் அவர்களது விமோசனத்திற்கு வழி யேற்படும் என்பது தெரியும்.

சட்டத்தை விட வழக்கமே அதிகக் கொடுமையை இழைத்து வருவதை அவர் அறிந்தார். தாழ்த்தப்பட்டவர்களின் நிலைமைக்காக ஒவ்வொரு ஹிந்துவும் வெட்கப்பட வேண்டுமென்றும், தாங்கள் செய்த பாவத்திற்காகப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர் உணர்ந்தார். தாம் எந்த லக்ஷியத்தை அடைவதற்காகப் பல வருஷங்களாக உழைத்து வந்தாரோ அந்த லக்ஷியத்தை அடைய முடியாமல் தமது வழி குறுக்கிடப்படுவதை அவர் கண்டார். பிரதம மந்திரியின் தீர்ப்பு, இந்தியாவில் ஜாதிப் பிரிவினைகளையும், ஜாதிச் சண்டைகளையும், ஜாதித் துவேஷங்களையும் அதிகமாக்கிவிடும் என அவர் எண்ணினர். ஆபத்து ஏற்பட்ட பிறகு, தீப்பிடித்துக் கொண்ட பின்னர் தாம் "சாகும் வரையில் பட்டினி கிடப்ப"தால் என்ன பிரயோஜனம் என்றும் அவர் சிந்தித்தார். முளையிலேயே இந்த ஆபத்தைக் கிள்ளி எறிய வேண்டுமெனத் தீர்மானித்தார். இந்தியாவிலுள்ள லக்ஷக் கணக்கான மக்களின் ஜீவாதார உரிமை விஷயத்தில் உண்மை விஷயங்களை அறியாத ஆங்கில ஆளும் வகுப்பினர் ஜட்ஜ்களாக உட்கார்ந்து தீர்ப்புக் கூறுவதைக் கண்டு மகாத்மா மட்டற்ற ஆத்திரமும், எரிச்சலுமடைந்தார். "சர்க்காரின் அறியாமையை அகற்றுவதற்காகவும் கூட நான் எனது உயிரைக் கொடுத்து அவர்களது முடிவை எதிர்க்க வேண்டுமென்று எனது அந்தராத்மா கட்டளையிடுகின்றது" என அவர் கூறியது, அவர் தியாக அக்னியில் குதிக்க வேண்டி ஏற்பட்டதன் அவசியத்தை நன்கு உணர்த்துகின்றது.

தேச மக்களின் தவிப்பு

மகாத்மா-ஹோர்-மாக்டனல்டு கடிதப் போக்கு வரத்தின் முழு விவரத்தையும் இந்திய சர்க்கார் ஸெப்டம்பர் மாதம் 12-ந் தேதி யன்று வெளியிட்டது. இந்தியப் பத்திரிகைகளெல்லாம் அதை 13-ந் தேதி யன்று பிரசுரித்தன.

அதைப்படித்த பின்னர் தான் தேச மக்களுக்கு விஷயங்கள் தெரிய வந்தன. 20-ந் தேதி மகாத்மாஜி தமது உண்ணு விரதத்தைத் தொடங்கி விடுவாரே என்ற ஏக்கத்தில் மக்கள் ஆழ்ந்தனர். அவரது உயிரை எப்படிக் காப்பாற்றுவது என்ற பிரச்னையே தலைவர்களின் மூளையை உடைத்தது. தேசம் பூராவும் ஒரே பரபரப்பும், புதியதோர் விழிப்பும், தவிப்பும் காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் பொதுக் கூட்டங்கள் கூட்டப்பட்டன; பிரதம மந்திரி தமது தீர்ப்பைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு வதாகவும், நீண்டகாலமாகத் தவர்கள் அனுபவித்துவரும் சகலவித மான கஷ்டங்களும், மத பூர்வமான தடைகளும் நீக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டங்கள் வற்புறுத்தின. மகாத்மா வின் அந்தச் சர்வபரித்தியாகத்தின் முன்னர் பாரதம் தன் வித்தியாசங்களனைத்தையும் மறந்து, காந்திஜியின் உயிரை எப்படியாவது காப்பதெனக் கங்கணம் பூண்டது.

தாழ்த்தப்பட்டவர்களின் தலைவரான ராவ் பகதூர் எம். ஸி. ராஜா அவர்கள் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் மாக்டனால்டின் பிரிவினைத் திட்டத்தைப் பலமாகக் கண்டித்து "ஏழைகளுக்காகவும், வருந்தி அவதி யுறுபவர்களுக்காகவும் தமது வாழ்வையே அர்ப்பித்து, உழைத்துவரும் உத்தமோத்தமரான காந்திஜி தமது வகுப்பி னரின் நன்றிக்குப் பாத்திரமாகி விட்டாரென்றும், அவரது உயிரைக் காப்பாற்ற சகல முயற்சிகளும் செய்யப்படவேண்டு மெனவும்" கூறினர். டில்லி சட்ட சபையிலும் இது சம்பந்த மாக ஒரு அவசரப் பிரேரணை கிளர்த்தப்பட்டு, பிரதம மந்திரியின் தீர்ப்பை அழுத்தமாகக் கண்டித்துப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. 13உ யன்றே, லிபரல் கக்ஷிப் பிரமுகரான ஸர் டேஜ் பஹதூர் சாப்ரு அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டு, மகாத்மாஜியை உடனே விடுதலை செய்யவேண்டு மெனக் கோரினர். "மிகவும் சிக்கலான வகுப்புப் பிரச்னை விஷயத்தை மகாத்மா ஒருவரால்தான் சரியானபடி தீர்த்து வைக்க முடியுமென்றும், ஆகவே அவரது உயிர் பற்றிய விஷ யத்தில் விவேகமுள்ள எந்த கவர்ன்மெண்டும் ஆபத்தான

நிலைமைகளை உண்டு பண்ணிக் கொள்ளாது" என்றும் அவர் கூறினார். தனித்தொகுதி வேண்டாமெனத் தீர்மானிக்கும்படி ஒவ்வொரு இடத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கேட்டுக் கொள்ளப்பட்டு, அவர்களும் அங்ஙனமே செய்தனர். "ஹிந்து சமூகமே இப்பொழுது பரீக்ஷிக்கப்படுகின்றது. ஆகவே அதற்கு உயிர் இருந்தால் அது உடனே கிளர்ந்தெழுந்து இந்தியாவின் உத்தமனைக் காக்க முன்வரவேண்டும்" என பீஹார் தலைவர், ராஜேந்திர பாபு கதறினார். காந்திஜி பிராணத் தியாகத்தில் இறங்குவதற்கு முன்னர், தாழ்த்தப்பட்டவர்களைக் கட்டியணைத்து, அவர்களுக்குக் கோயில்களைத் திறந்துவிட்டு, பள்ளிக்கூடங்களில் தாராளமாகச் சேர்த்துக் கொண்டு, பொதுக் கிணறுகளை அனுமதித்துத் தனக்கு அவர்கள் பாலுள்ள அத்யந்த விசுவாசத்தையும், சிரத்தையையும் காட்டிக் கொள்ள ஹிந்து சமூகம் தலைப்பட்டது.

நமது அரும்பெருந் தலைவரான பண்டித மதன்மோஹன் மாளவியாஜியின் யோசனையின் பேரில் 19-ந் தேதியன்று பம்பாயில் ஹிந்துத் தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மகாத்மாஜி உபவாஸத்தைத் தொடங்கும் தினமாகிய செப்டம்பர் 20-ந் தேதியன்று இந்தியாவிலுள்ள முப்பத்தைந்து கோடி மக்களும் உபவாஸமிருந்து, ஆண்டவனைக் குறித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும், அதற்கு முதல் நாளன்று மாலையில் கிராமங்கள் உள்பட எல்லா இடங்களிலும் பொதுக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, தனித்தொகுதி சம்பந்தமான தமது தீர்ப்பைப் பிரதம மந்திரி வாபீஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்றும், காந்திஜியின் உயிரைக் காப்பாற்றித் தரவேண்டுமென்றும் கடவுளைத் தியானிக்க வேண்டுமென்றும் நமது தென்னாட்டுத் தலைவர் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

காந்திஜியின் உண்ணாவிரதத் தீர்மானத்தைக் கேட்டுப் பாரதநாடு மட்டுமே துக்கத்திலாழ்ந்து கிடந்ததாக எண்ணிவிடவேண்டாம். அலைகடலுக்கப்பாலுள்ள தேசங்கள் யாவும்

அங்ஙனமே சோகக்கடலில் தோய்ந்தன. மாகாத்மா இந்தியாவுக்குமட்டுமா சொந்தம்? அவர் உலகிற்கே மணிபூஷணமாக விளங்குகிறாரல்லவா? ஆகவே அத்தகைய பொக்கிஷத்தை இழந்துவிட உலகம் சம்மதிக்குமா? "காந்தியின் உயிரைக் காப்பாற்ற எங்களாலியன்றதை நாங்கள் செய்தே தீருவோம்" எனக் கூறி சர்வ தேசங்களும் வெளிக் கிளம்பின. மகாத்மாவின் உபவாஸத்தைப் பற்றிக் கேள்வியுற்றதும், அவரது அருமைத்தோழரான திரு. ஸி. எப். ஆண்ட்ரூஸ் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு ஓடிவரப் புறப்பட்டார். ஆனால் அவர் இங்கிலாந்திலிருக்க வேண்டியதே மிகவும் அவசியம் என்று காந்திஜி தந்தி கொடுத்ததின்பேரிலேயே அவர் அங்கு நின்றார். "மகாத்மாகாந்தி உயிருடனிருப்பதை விட இறந்து விடுவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு அதிக ஆபத்தாக முடியும்" என பிரிட்டிஷ் தொழில் கக்ஷித் தலைவரான திரு. ஜார்ஜ் லான்ஸ்பரி கூறி, இந்திய மக்கள் விரும்பாத ஒரு தீர்ப்பை அவர்கள் மீது சுமத்த வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். காந்திஜி சீமைக்குச் சென்றிருக்கையில், தங்கியிருந்த இடமாகிய கிங்ஸ்லி ஹாலில் சதா பிரார்த்தனைகள் நடந்தப்பட்டன. ஞாயிற்றுக்கிழமைகளில் மாதா கோயில்களில் இந்தியாவுக்காகத் தனிப்பிரார்த்தனைகள் செய்விதென கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தீர்மானித்தனர். எகிப்து தேசத்தலைவராயிருந்த ஜாக்லூல் பாஷாவின் மனைவியான ஸாபியா ஜக்லூலினிடமிருந்தும், மாஜி பிரதம மந்திரியான முஸ்தபா நஹஸ் பாஷாவினிடமிருந்தும், காந்திஜிக்கு உருக்கமான செய்திகள் கிடைத்தன. அவரது தீர்மானத்தைக் கேட்டுத் தாங்கள் திடுக்கிடுவதாகவும், அவரது எண்ணம் நிறைவேற ஈசனைப் பிரார்த்திப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

கடிதப் போக்குவரத்துகளை உடனே வெளி யிடாமல் காலங் கடத்தி, தேசத்தின் உணர்ச்சிக்கே பங்கம் விளைவித்த அரசாங்கம் உடனே காந்திஜியை விடுவித்து, அவர் வகுப்பு ஒப்பந்தத்திற்காகப் பாடுபட அனுமதிக்குமா அல்லது எல்லா கிளர்ச்சிகளுக்கும் கைகழுவி விட்டு வாளா

கிடைக்குமா என்ற கேள்வி தேசத்தின் எந்த மூலே, முடுக்கிலும் கேட்கப்பட்டது. மற்ற விஷயங்களில் தேசிய இந்தியாவுடன் வித்தியாசம் கொண்டாடும் பல தலைவர்களும், சங்கங்களும் கூட மகாத்மாவின் விடுதலையைக் கோரின. இங்கிலாந்தில் "டோரி"க்கக்ஷியாரின் பத்திரிகையான "டைம்ஸ்" கூடக் காந்தியை சிறையிலேயே இறக்குமாறு விட்டுவிடக்கூடாது என எழுதியது. உபவாஸத்தைத் தொடங்குவதற்குமுன் காந்திஜி விடுவிக்கப் படலாமென ஸிம்லாவிலிருந்து பல பத்திரிகைகளின் நிருபர்கள் வெளியிட்டனர். ஆனால் அவரை விடுவிக்காமலிருப்பதற்காக திரை மறைவில் நின்று வேலே செய்த சூழ்ச்சியே இறுதியில் வெற்றிபெற்றது. மகாத்மாவும் விடுதலையடையவில்லே. சில நிபந்தனேகளின்பேரில் ஒரு தனி இடத்தில் காவலில் வைக்கப்படுவதற்குச் சம்மதிக்க மகாத்மா மறுத்து, தாம் சிறையிலேயே இருப்பதாகக் கவர்ன்மெண்டா ருக்கு அறிவித்தார். இதன்பேரில், தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்னே சம்பந்தமாக மட்டும் அவர் யாருடனும், எவ்விதத் திலும் கலந்து பேசவும், விவாதிக்கவும், கடிதப் போக்கு வரத்துகள் நடத்திக் கொள்ளவும் சர்க்கார் பூரணமாக அனு மதித்தனர். மரணத்திற்குத் தயார் செய்து கொள்ளும் நிலேமையிலும், பரந்த நோக்கம் கொள்ளாமல் சில நிபந்தனே களுடன் காந்திஜியை ஒரு தனி இடத்தில் வைக்க சர்க்கார் விரும்பியதிலிருந்து வெளிப்பட்ட அவர்களது அற்ப புத்தி யைக் கண்டு உலகமே எள்ளி நகையாடியது.

சமரஸ முயற்சி

தீண்டாமையைக் குழிவெட்டிப் புதைத்துவிட்டு, ஹரி ஜனங்களேத் தன்னுடன் வாரி அணேத்துக் கொள்ள ஹிந்து சமூகம் ஒரு பக்கம் ஜிரூதமாக வேலே செய்து வருகையில், மற்றொரு பக்கம் தேசத் தலேவர்கள் அதே பிரச்னேயின் சிக் கலேத் தீர்த்து, பாபுவின் உயிரையும் தாழ்த்தப்பட்டவர்களின்

ஜீவாதாரமான உரிமைகளையும் காப்பாற்ற முனைந்து பாடு படலாயினர். தாழ்த்தப்பட்டவர்கள் ஹிந்து சமூகத்தி லிருந்து பிரிக்கப்படக் கூடாது என்ற விஷயத்தில் காந்திஜி எவ்வளவு உறுதியாக விருந்தாரோ, அதே மாதிரி, அவ் வகுப்பினரின் பிரதிநிதியாகச் சர்க்காரால் தெரிந்தெடுக்கப் பட்டு, சர்வகக்ஷி மகா நாட்டிற்குச் சென்று, தனித்தொகுதி எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டு திரும்பிய டாக்டர் அம்பேத்கர் தனித் தொகுதி விஷயத்தில் பிடிவாதமாக விருந்தார். தம்முடைய நிலையிலிருந்து தாம் துளிகூட இறங்கவே முடியாதென்றும், மகாத்மாவின் உபவாசப் பய முறுத்தல்களை யெல்லாம் கண்டு தாம் அஞ்சப் போவதில்லை யென்றும் அவர் அறிக்கைகள் வெளியிட்டார். சமரஸத்திற் காக காந்திஜி தமது உறுதியில் சற்று தளர்ந்தினும் தளர்த்துவார்; ஆனால் அம்பேத்கர் விட்டுக் கொடுக்கவே மாட்டார் என்று எண்ணும்படியாகவே நிலைமை யிருந்தது. இருந்தாலும் டாக்டர் அம்பேத்கரையும், அவரது கக்ஷியின ரையும் புறக்கணித்து விட்டு எந்த முடிவையும் செய்து கொண்டு, அதற்குச் சாதகமாக தேச மக்களின் அபிப்பிரா யத்தைத் திரட்டத் தலைவர்கள் விரும்பவில்லை. ஆகவே ஏமாற்றத்தைத் தரும்படியான அறிக்கைகளையே அம்பேத் கர் அவர்கள் வெளியிட்டு வந்த போதிலும், அவரது பேரறி வைத்தட்டி யெழுப்புவதெனத் தலைவர்கள் தீர்மானித்தனர். எப்படியானாலும் ஒற்றுமையைக் காண்பதென விரதம் பூண் டிருந்த பண்டித மாளவியாஜி அவர்கள், சற்றும் காலத்தை வீணாக்காமல், உடனே டாக்டர் அம்பேத்கரைக் கலந்து பேசினார்.

இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதை மகாத்மாஜி ஏற்றுக் கொள்ளுவாரா என்ற பிரச்னையே மக்களின் மனதைக் கலக்கியது. தனித் தொகுதி ஏற்பாட்டையும், ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் யோசனையையும் தாம் ஒப்புக் கொள்ள முடியாதென லண்ட னில் காந்திஜி அறிவித்திருந்தார். ஆயினும் லண்டனில் இந் தப் பிரச்னை முடிவான தீர்ப்புக்கு வந்திருந்தால் அவர் எவ்

விரதமாவது கொஞ்சம் விட்டுக் கொடுத்து சமரஸத்தை பெற்றுக் கொண்டிருப்பார் என இப்பால் தெரிய வந்தது. கூட்டுத் தொகுதித் திட்டத்தையே, ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதுடன் அவர் ஏற்றுக் கொண்டிருப்பாரென்றும் தெரிய வந்தது. இவ்விஷயத்தில் அவரது கருத்தை யறிந்துவர பம்பாய்த் தலைவர்கள் சிலர் அடங்கிய ஒரு தூது கோஷ்டி புறப்பட்டது. மகாத்மாவைக் கண்டு பேசி, முடியுமானல் அவர் உபவாஸத்தில் இறங்காமலேயே செய்து விடவும் உத்தேசித்து ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் அவரைச் சிறையில் பேட்டி காண 18-ந் தேதியன்று சர்க்காரின் அனுமதியைக் கோரினர். இது விஷயத்தில் பம்பாய் கவர்ன்மெண்டும், இந்தியா கவர்ன்மெண்டும் கூடி ஆலோசித்து அவருக்கு மகாத்மாஜியைப் பேட்டி காணும் உரிமையை மறுத்துவிட்டன. காந்திஜிக்குச் சகல வசதிகளும் அளிக்கப்படுமென சர்க்கார் உறுதி கூறி யிருந்ததற்குப் பின்னர், இவ்விதம் அவரைப் பேட்டி காணும் உரிமையையும் மறுத்து விட்டது மகா ஜனங்களின் மனதில் பற்பல விதமான எண்ணங்கள் உதிக்க இடம் கொடுத்தது. ராஜாஜி அவர்கள் காந்திஜியைச் சந்தித்திருந்தால் பின்னல் ஏற்பட்டுள்ள கடுமையான நிலைமை ஒருக்கால் ஏற்படாமலேயே தவிர்க்கப் பட்டிருக்கலாம் என எண்ணும் தேசபக்தர்களும் உண்டு.

பம்பாய்த் தூது கோஷ்டியினர் 18-ந் தேதி, ஞாயிற்றுக் கிழமை மாலையில் எரவாடாவுக்குச் சென்று மகாத்மாவைக் கண்டனர். ஆனல் அச்சமயத்தில் மகாத்மா தமது மௌன விரதத்தைத் தொடங்கி விட்டிருந்ததால், எல்லா விவாதங்களையும் எழுத்து மூலமாகவே நடத்த வேண்டி யிருந்தது. இதை நீடித்து நடத்துவது மகாத்மாஜிக்கும் சரி, தலைவர்களுக்கும் சரி கஷ்டமா யிருந்ததால் அவர்கள், மறு தினம் பகலில் மகாத்மாவைக் காண்பதாகக் கூறிவிட்டுத் திரும்பினர்.

மறுநாள் பகல் சரியாக 1 மணிக்கு தூது கோஷ்டியினர் மீண்டும் எரவாடாவுக்குப் போயினர். அன்று சாயந்திரம் மகாத்மாஜியின் புதல்வரான ஸ்ரீயுத தேவிதாஸ் காந்தியும்

அப்பாவைப் பார்த்துப் பேசினார். ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் விஷயத்தில் அவர்கள் யாவருக்கு மிருந்த சந்தேகங் களை மகாத்மாஜி தீர்த்து வைத்தார். அவ்விஷயத்தைத் தாம் முற்றிலும் எதிர்ப்பவராக விருந்தாலும், தனித்தொகுதி கள் கைவிடப்பட்டு, கூட்டுத் தொகுதிகள் யோசனை ஏற்கப் பட்டாலே அதில் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் பிரச்னை யும் ஒருவாறு தீர்ந்து விடுகிறதென்றும், எது எப்படியாயி னும் ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதென்ற விஷயம் தமது உபவாஸத்தின் ஒரு அம்சமாக விராதென்றும் அவர் உறுதி கூறினார். 15-ந் தேதியன்று அவர், பம்பாய் கவர்ன்மெண் டாருக்கு விடுத்த கடிதத்திலும் இங்ஙனமே குறிப்பிட்டிருந் தார். ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக அந்தக் கடிதத்தின் விவரம் 21-ந் தேதியன்றே உலகத்திற்குக் கிடைத்தது. இந் தக் கடிதத்தில் தமது நிலைமையைக் காந்திஜி தெளிவுபடுத்தி யிருந்ததுபோல் வேறெதிலும் தெளிவு படுத்தவில்லை. இதை உடனேயே வெளியிடாமல் பூட்டி வைத்திருந்த பம்பாய் சர்க் காரின் செய்கையைக் கண்டு மக்களின் மனம் கொதித்தது.

ஜாதி ஹிந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக் கும் ராஜீய சம்பந்தமாக மட்டும் ஒப்பந்த மேற்பட்டு விடுவ தைக் கண்டு தாம் சந்தோஷிக்க முடியாதென்றும், தீண் டாமை பூண்டோடு அழிய வேண்டுமென்பதே தமது விருப் பம் என்றும், அதை “ ஒழிப்பதற்காக பட்டினி கிடக்கும்படி மீண்டும் தமது அந்தராத்மா கட்டளையிடுமானால் அங்ஙனமே செய்யத் தாம் சற்றும் பின்வாங்கப் போவதில்லை யென்றும், ஹிந்து மதத்தின் நற்பெயரைக் கெடுத்து வரும் இந்தத் தீய வழக்கம் ஒழியவேண்டு” மென்றும் காந்திஜி தம்மைக்கண்டு பேசிய தலைவர்களுக்கு எச்சரிக்கை செய்தார். மகாத்மா வின் இவ்வுறுதி கேட்டு, தீண்டாமைப் பேயும் சற்று நடுக் குற்றது.

அடுத்தபடியாக பொது மக்களின் கவனம் அம்பேத் கரின் பேரில் பாய்ந்தது. ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதுடன் கூடிய கூட்டுத் தொகுதியை அம்பேத்கர் ஒப்புக்கொள்ளு

வாரா? அல்லது இன்னமும் மறுப்பாரா? ஆனால் இப்பால் அவர் வெளியிட்ட சில அறிக்கைகள் அவர் மகாத்மாவின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதை சூசகமாகத் தெரிவித்தன. அவரது பழைய நண்பரான ஸ்ரீயுத அமிருதலால் தக்கர் அவர்கள் அவரை அடிக்கடி சந்தித்து, விஷயங்களை யெடுத்துரைத்து, நிலைமையின் கடுமையை விளக்கிக் காட்டி, அவரது பூர்வ எண்ணங்களை மாற்றிக் கொள்ள எவ்வளவோ உதவியா யிருந்தார். ஜாதி ஹிந்துக்களுடன் தாம் எந்த விதத்திலும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு சிறுபான்மை ஒப்பந்தம் எவ்விதத்திலும் தடைக்கல்லாக இல்லையென்று அம்பேத்கர் விளக்கிக் கூறியது நிலைமையில் முற்றிலும் மாறுதலை யுண்டு பண்ணியது.

ஹிந்துத் தலைவர்களின் முதல் கூட்டம் செப்டம்பர் மாதம் 19-ந் தேதி பம்பாயில், பண்டித மாளவியாஜியின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அலகாபாத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் ஹரி ஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட நற்செய்தியை அவர் அறிவித்ததும், சபையினர் பலத்த ஆரவாரம் செய்தனர். எப்படியாயினும் காந்திஜியின் உயிர் காப்பாற்றப்பட வேண்டு மென்பதையும், தீண்டாமையை ஒழித்தே தீரவேண்டு மென்பதையும் பண்டிதர் வற்புறுத்திப் பேசினர். உடனே தீண்டாமையை ஒழிக்கும் வேலையில் ஈடுபடுவதென யாவரும் உறுதி கொண்டனர். ராஜீயப் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட மட்டில், மகாத்மாவின் நிபந்தனைகளை இன்னதென அறியாமல் தாம் எவ்வித யோசனையும் வெளியிட முடியாதென டாக்டர் அம்பேத்கர் கூறவே இக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

எரவாடாவில் மகாத்மாஜியைக் கண்டு திரும்பிய தூது கோஷ்டியினரின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளுவதற்காக 20-ந் தேதி தலைவர்கள் மீண்டும் கூடினர். ஸ்தானங்களை ஒதுக்கி வைக்க வேண்டுமென எல்லோரும் ஏகோபித்து விரும்பினால் தாம் அதற்கெதிராக் இருக்கப் போவதில்லையென மகாத்மாஜி கூறிய கருத்து வெளியிடப்பட்டது. அம்

பேத்கரும் சமரஸ மனப் பான்மையைக் காட்டினர். அதற்கான யோசனைகளைத் தாம் ஆராய விரும்புவதாகவும் அவர் அறிவித்தார். இத்துடன் மகாநாடு மறு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தியாக அக்கினியில் குதித்தல்

உபவாஸ தினம் நெருங்குவதைக் கண்டு தேசம் பூராவும் கொந்தளிப்பில் ஆழ்ந்து கிடக்கையில், மகாத்மாஜியோ சாந்தக் கடலில் திளைத்து நின்றார். உபவாசத்தைத் தொடங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை யெல்லாம் செய்து கொண்டார். உபவாஸத்தின் தத்துவத்தை விளக்கி முக்கியமான நண்பர்களுக்கும், ஆசிரமவாசிகளுக்கும் கடிதங்கள் எழுதினார். "வழி தெரியாது இருளில் திகைத்துக் கொண்டிருக்கும் நிலையில், கண்களை மறைக்கும் காரிருளை நீக்கி, வழி காட்டுமாறு ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்யும் வழக்கம் இந்நாட்டில் பாரம்பரிகமாகக் கையாளப்பட்டு வருவதாகும். ஆத்ம சுத்திக்காக உபவாஸமிருந்து, தியானத்தி லாழ்ந்து கிடந்த சம்பவங்கள் ஹிந்து மதத்தில் எண்ணற்றுக் கிடக்கின்றன. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் கூட இம்முறையைக் கையாளலாம். ....என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவர்களைப் பொறுத்தே நான் இந்த உபவாஸத்தில் இறங்குகிறேன். அவர்கள் இந்தியராயினும் சரி, அன்னியராயினும் சரி, அது எனக்கு அக்கரையில்லை. என் மீது நம்பிக்கை யில்லாதவர்கள் எனது உபவாஸத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. எனது உபவாஸம் மூலமாக, தற்போது செத்துக் கிடக்கும் ஹிந்துமத உணர்ச்சிக்கே உயிரூட்ட நான் விரும்புகிறேன்." என பம்பாய் சர்க்காருக்கு விடுத்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டார்.

உபவாஸ மகத்துவத்தை விளக்கி அவர் நண்பர்களுக்

கெழுதிய கடிதங்களிலிருந்து பின்வரும் மணிவாக்கியங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன :—

"என் ஆத்மசுத்திக்காக நான் இதுவரையில் எண்ணிலா முயற்சிகள் செய்திருக்கிறேன். இதன் காரணமாக எனது அந்தராத்மாவின் சிறு குரலைத் தெளிவாக கேட்கும் சக்தியை யும் நான் சிறிது வளர்த்திருக்கிறேன். அந்த அந்தராத்மாவின் கட்டளைக் கிணங்கியே நான் இந்தத் தியாகத்தில் இறங்கு கிறேன்."

* * * *

"என்னுடைய அந்தராத்மாவின் ஆக்ஞை என நான் அழைப்பதும், அதற்குக் கட்டுப்பட்டு நான் உபவாஸமேற் பதும் வெறும் மாயையாகவேயிருக்குமானால், அதனை அறிந்து கொள்ளவும் நான் பட்டினிகிடந்து, பிரார்த்தனை செய்யத்தான் வேண்டும்."

* * * *

"உபவாஸமிருந்து ஒருவரது மனதை மாற்றுவது அவரைப் பலவந்தப் படுத்துவதாகாது. அன்பை அடிப்படை யாகக்கொண்டே இந்த முறை கையாளப்படுகின்றது ; ஆகை யால் இதில் பலவந்தத்துக்கே இடமில்லை."

* * * *

"எனது உபவாஸத்தை நீதித்தராசில் வைத்துப் பார்க்க நான் விரும்புகிறேன். பார்ப்பவர்களுக்கு இது சிறு பிள்ளைத் தனமாகப்படலாம். தீண்டாமை என்னும் கொடிய வழக் கத்தை ஒழித்துப் போட என்னிடமுள்ள சிறந்த வஸ்துவை யும் நான் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால் என் உயிரை விடச் சிறந்தது வேறு என்ன விருக்கிறது. ஆதலால் தீண்டாமைப் பலிபீடத்தில், என் உயிரை அர்ப்பிக் கிறேன்."

* * * *

"சத்தியாகிரக நெறியில் நின்று, உபவாஸமிருந்து உயிர் விடுவதென்பது தான் ஆசிரம லக்ஷியங்களில் உத்தம மானது. ஆனால் அந்த பாக்கியம் அபூர்வமாகத் தான்

கிடைக்கிறது; அதுவும் ஒரு சிலருக்கே கிடைக்கின்றது. ஆண்டவனருளால் அந்தப் பாக்கியம் இப்பொழுது எனக்கு வாய்த்துள்ளது. ஆகவே அதற்காக எவரும் வருத்தம் கொள்ள வேண்டாம். அத்தகைய சர்வ பரித்தியாகத்தைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதா இல்லையா என்பதை இனித் தான் கண்டு பிடிக்க வேண்டும். அந்தப் பரீக்ஷையில் நான் அழிந்து போனால் தான் என்ன? எலும்பும், சதையும் கொண்டு ஆக்கப்பட்ட இந்த உடல் அழிந்திடினும், தீண் டாமையை ஒழிக்க இந்நாட்டில் ஒருவராவது பாடுபட்டுக் கொண்டிருக்கும் வரையில் நான் உயிருடனிருப்பதாகவே யாவரும் கொள்ளலாம்."

* * * *

"அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை. அவன் விருப் பப்படியே யாவும் நடக்கின்றன. அவன் ஆட்டி வைக்கிற படித்தானே நான் ஆட முடியும்? தியாக அக்கினியில் நான் குதிக்க வேண்டுமென்பது அவனது விருப்பமானால் அதனை மீறி நான் நடக்க முடியுமா?"

* * * *

"ஆழ்ந்த நீர் நிலையில் குதித்து விடலாம்; ஆனால் அதில் அமிழ்ந்து விடாமல் மேலே வந்து நீந்துவது எவ்வளவோ கடினமானது நீந்தி விட்டாலும் கரை போய்ச் சேருவது அதைவிட எவ்வளவோ கடினமானது! இந்நிலையில் தான் நானிருக்கிறேன். ஆண்டவன் தாளினையே கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன். அதற்கு ஆண்டவனே துணை யல்லவா?"

தமது தீர்மானத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யு மாறு வேண்டிக் கொண்ட பல்லாயிரக் கணக்கானவர்களுக் கும் அவர் பதிலனுப்பினர். ஆண்டவன் பெயரால், அவரது கட்டளைக் கிணங்கி உபவாஸம் தொடங்கப் படுவதால் அதை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்த முடியாதென அவர் கூறினர். ஆண்டவன் கோரும் தியாகத்தைச் செய்தே தீரவேண்டும் என்றும் அறிவித்தார்.

இப்படியாக, நமது புருஷோத்தமனின் பிராயோபவேச தினமாகிய அந்த 20-ந் தேதியும் வந்துவிட்டது. வழக்கப் படி மகாத்மாஜி அதிகாலையில் எழுந்தார்; காலைப் பிரார்த் தனையை நடத்தினார். தமக்கு வெகு பிரியமான "வைஷ்ணவ ஜனதோ" ("யார் வைஷ்ணவன்") என்ற பாட்டை ஆனந்த மாகவும், பரவசமாகவும் பாடினார். வழக்கம் போல் பாலும், பழமும் உண்டார். 6-30 மணி முதல் 8 மணி வரையில் தமது தோழர் ஒருவரைக் கூப்பிட்டு பகவத் கீதையை வாசிக் கும்படி, கூறி, அதை உருக்கமாகக் கேட்டு, உள்ளம் உருகி னார்; உரை செய்தார்; 11-30 மணிக்கு எலுமிச்சம் பழ ரஸத்தையும், வெந்நீரில் கலந்த சிறிது தேனையும் உட்கொண் டார். தியாக அக்கினியில் குதிக்க வேண்டிய வேளையும் நெருங்கியது. அவரது உத்தம சிஷ்யர்களெல்லாம் அவரருகே போய் உட்கார்ந்து கொண்டனர். ஈசுவர நாமத்தைப் பஜித்த வண்ணமாகவே யிருந்தனர். கடைசியாக ஜெயில் மணியும் 12 அடித்தது. அப் புருஷோத்தமனும் சத்தியப் போரில் இறங்கி விட்டார். அச்சமயம் பாரதத் தாயும் தன் ஒப்பற்ற மைந்தனின் உயரிய தியாகங் கண்டு, வியந்து நின்றனள்; அவளுடன் உலகமும் வியப்புற்றது.

அன்று மாலை பல பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அவர் பேட்டி யளித்தார். "தீண்டாமையை எதிர்த்து நான் போரிடுகையில் மனித வர்க்கத்தைப் பற்றிக் கொண்டுள்ள அசுத்தத்தை அழிக்கவே நான் முற்படுகிறேன். எனது இயக்கத்திலும், எனது தர்மத்திலும், ஹிந்து சமூகத்தினிட மும், மனித சுபாவத்திலும், உலக மக்களின் ஆதரவிலும், சர்க்கார் அனுதாபத்திலும்கூட எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. எனது கூக்குரல் ஆண்டவனின் சன்னிதானத்தையும் அதிரச் செய்யும் என எண்ணுகிறேன்." என்று அவர் கூறினார்.

மகா தியாகம்

மகாத்மா மகா தியாகத்தில் இறங்கின அந்த செப்டம்பர் மாதம் 20-ந் தேதி உலக சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படு மென்பதில் ஐயமில்லை. அன்று நடந்த ஏகோபித்த இந்தியாவின் பிரார்த்தனை தேவலோகத்தின் கதவுகளையும் போய்த் தட்டியது. அன்று நாடெங்கும் காந்திஜியைப் பற்றியே பேச்சு; அவரது தியாகத்திற்குப் புகழ்; அவரது சேவைக்குப் பாராட்டு; அவரது வெற்றிக்காகத் தியானம்; அன்று லக்ஷக்கணக்கான இந்திய மக்கள் மகாத்மாவுடன் பட்டினி கிடந்தனர்; மகாத்மாவையும், ஹரிஜனங்களையும் தமது சிந்தனையி லாழ்ந்தினர்; ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களைக் கைதூக்கி விட உறுதி கொண்டனர். நாட்டு மக்களின் கண்களெல்லாம் எரவாடாவையே நோக்கின; அங்கிருந்து விரிய சக்திக் கிரணங்களை அவர்கள் ஆகர்ஷித்துப் புதிய உத்வேகங் கொண்டனர். அன்று அனைவரது உள்ளத்தையும் கவர்ந்து நின்ற மகா புருஷர் மகாத்மா தான்.

பாரத வர்ஷத்தின் பல விடங்களிலுள்ள பல கோயில்களும், கிணறுகளும் அன்று ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:—

டில்லி தயாசங்கரர் கோயில், கல்கத்தா காளி கோயில், அலகாபாத்தில் 12 கோயில்கள், ஆமதாபத் தேவிகோயில், நாகபுரியில் 2 கோயில்கள், 2 கிணறுகள், நைனிடாலி ஒரு கோயில், பாடலீபுரத்தில் பல கோயில்கள், லக்ஷ்மணபுரி கபீர்தாஸ் கோயில், மீரத்தில் பல கோயில்கள், ஜப்பல்பூரில் எல்லாக் கோயில்களும், பம்பாயில் பல கோயில்கள், கராச்சியில் ஒன்று தவிர மற்றெல்லாக் கோயில்களும், பரோடாவில் ஒரு கோயில், பங்களூரில் மாரியம்மன் கோயில், கணேசர் ஆலயம், வேணுகோபாலஸ்வாமி கோயில், கொல்லம் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில்.

சிறை வாழ்க்கை காரணமாக காந்திஜியின் தேகநிலைமை

சிர்குலைந்து கிடந்ததால் உபவாஸத்தைப் பூராவும் அவரால் தாங்கிக் கொண்டிருக்க முடியுமா என்ற பெருங் கவலையே மக்களின் மனத்தை வாட்டியது. எப்படியோ காந்திஜியும் முதல் நாளைய உபவாஸத்தைக் கழித்து விட்டார்.

21-ந் தேதியன்று, அதாவது இரண்டாவது தினம் காலையில் அவர் ஒரு பிரத்யேக வார்டுக்கு மாற்றப்பட்டார். அங்கு ஒரு பக்கத்தில் சிறிய, தாழ்ந்த, அடர்ந்த மாமரம் ஒன்றுண்டு. அதன் நிழலில் ஒரு இரும்புக் கட்டில்; அதன் மீது ஒரு ஜெயில் கம்பளி; அதன்மீது தான் மகாத்மா படுத்துக் கொண்டிருந்தார். அவரது இணை பிரியாத் தோழர்களான ஸர்தார் வல்லபாயும், ஸ்ரீயுத மகாதேவ தேசாயும் அவரருகிலேயே உட்கார்ந்திருந்தனர். மகாத்மாவைக் காண வருபவர்கள் உட்காருவதற்காக கட்டிலைச் சுற்றி பல நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அருகிலிருந்த ஒரு பெஞ்சியின் மேல் சில புத்தகங்களும், கடுதாசிகளும், தண்ணீர் நிறைந்த சீசாக்களும், ஸோடாவும், உப்பும் வைக்கப் பட்டிருந்தன. அவ்வப்பொழுது மகாத்மாஜி ஒரு டம்ளர் ஜலத்தில் கொஞ்சம் ஸோடாவையும், உப்பையும் போட்டுக் கலந்து சாப்பிடுவார். அவருக்கு உதவியாயிருப்பதற்கு ஸ்திரீக் கைதிகளின் சிறையிலிருந்து ஸ்ரீமதி ஸரோஜினி தேவி எரவாடாவுக்குக் கொண்டு வரப் பட்டிருந்தார்.

காந்திஜி உற்சாகத்துடனேயே யிருந்தார். அவரது முக விலாஸம் சற்றும் மாறவில்லை; கண்களும் ஒளியிழக்கவில்லை. ஆனால் அவரது பக்கத்திலிருந்தவர்களோ அவரது உபவாஸம் எப்பொழுது முடியும், அவரது கவலைகள் எப்பொழுது தீரும், அவரது எண்ணங்கள் என்று நிறைவேறும் என்று சிந்திப்பதிலேயே காலத்தைக் கழித்தனர். பட்டினி கிடந்தேனும், ஆண்டவனுடன் சண்டையிட்டுத் தமது கருத்தைச் சாதித்துக் கொள்ளுவதென அவர் வைராச்யமுற்றிருந்தார். தமக்கு யாதொரு விசேஷ சௌகரியங்களும் வேண்டியதில்லை என அவர் கூறிவிட்டார். 21-ந் தேதி பூராவும் தமது காரியங்கள் எல்லாவற்றையும் அவர் தாமே கவனித்

தார். ஸ்நானம் செய்யும் பொழுது கூட தமக்கு ஒருவரும் உதவி புரிய வேண்டாமெனச் சொல்லி விட்டார்.

ஆனால் 22ந்தேதியன்று அவரது சக்தி வெகுவாகக் குறைந்து விட்டது. அப்பொழுது தான் அவருக்கு மற்ற வர்கள் உதவி செய்ய வேண்டி யிருந்தது. தம்மைக் காண வந்தவர்களுடன் அவர் அடிக்கடி பேச வேண்டி யிருந்ததால் குமட்டல் அதிகரித்தது. இன்னும் நாளாக ஆக உடம்பு முழுதும் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. அப்படி யிருந் தும் எவரும் தமக்குக் கை, கால்களைப் பிடித்து விடுவதை அவர் மறுத்து விட்டார்.

இன்னும் சில தினங்களுக்குள் விடுதலையாக விருந்த ஸ்ரீமதி கஸ்தூரிபாய் 22ந்தேதி ஸபர்மதி ஜெயிலிலிருந்து எர வாடாவுக்கு மாற்றப்பட்டார். மகாத்மாவுடன் தங்கியிருந்து, அவருக்கு வேண்டிய சிஷ்ருஷைகளைச் செய்ய அவருக்குப் பூரண அனுமதி கொடுக்கப்பட்டது. தகுந்த சமயத்தில் தம் பர்த்தாவுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் தமக்குக் கிட் டியதற்காகக் கஸ்தூரிபாய் மகிழ்வெய்தினள். அவளது முகத் திலும் சற்றும் கவலையோ, வருத்தமோ காணப்படவில்லை. "சரிதான், மறுபடியும் பழைய கதையா?" (அதாவது பழைய உபவாஸக் கதையா என்று பொருள்) என்று சிரித் துக்கொண்டே அவள் மகாத்மாவை அணுகினள். "ஆமாம்" என்று பதில் சொல்லவும் அசக்தரா யிருந்ததால் காந்திஜி ஒரு சிரிப்பு சிரித்து அதன் மூலம் அப்பதிலை வெளியிட்டார்.

மணி ஆக ஆக, மகாத்மாவின் உடல் களைப்பும் அதிக மாயிற்று; குரலோசை மங்கி விட்டது; மிகவும் கடுமையான விவாதங்கள் நடக்கையில்தான் அவரது கண்கள் சற்றுத் திறந்து ஒளி வீசின; அப்பொழுதுதான் அவரது அழியா ஆன்ம உறுதியை அனைவரும் அறிய முடிந்தது.

24-ந் தேதி பம்பாயைச் சேர்ந்த டாக்டர் கில்டரும், டாக்டர் படேலும் காந்திஜியைப் பரீக்ஷித்து, அனாவசியமான பேட்டிகளும், விவாதங்களும் உடனே நிறுத்தப்படா விட் டால் மகாத்மா அபாய எல்லையில் இறங்கி விடுவாரென

எச்சரிக்கை செய்தனர். இரத்த ஓட்டத்தின் வேகம் மிகவும் அதிகமாக விருந்தது; அவரது சக்தி மிகவும் குன்றிப் போய், மோசமான நிலைமையை அடைந்து கொண்டிருந்தது. அபாய நிலைமையை அவர் அடைந்து விட்டால், பின்னர் உபவாஸம் நிறுத்தப்பட்டால் கூட அவரது உயிரைக் காப் பாற்ற முடியாதென மேற்படி டாக்டர்கள் அபிப்பிராயப் பட்டனர்.

26-ந் தேதி, மகாத்மாவின் நிலைமை மிகுந்த கவலைக் கிடங் கொடுத்தது. டாக்டர்கள் பல முறை ஊசி மூலம் அவரது தேகத்திற்குள் மருந்தேற்றினர். கல்கத்தாவிலிருந்து கவி ரவீந்திரர் அன்று வந்து சேர்ந்தார். அதிகக் கஷ்டங் களிலும் தமக்கு ஆறுதலளிக்கும் நண்பனை விளங்குவது சங்கீதம்தான் என்றும், ஆகவே கவி தாகூரிடமிருந்து சில பாட்டுக்களைப் பாடிக் கேட்க ஏற்பாடு செய்யவேண்டு மென் றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த அனுமதி உடனே அளிக்கப்பட்டது. 27, 28-ந் தேதிகளிலும் தமக்கு வெகு பிரியமான பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு, மகாத்மா மன மகிழ்ந்தார்.

எவ்வளவோ கேவலமான நிலைமையி லிருந்தும், அவர் சமது காலை, மாலைப் பிரார்த்தனைகளைத் துளிகூட விடாமல் நடத்தி வந்தார். படுக்கையில் எழுந்து உட்கார்ந்தபடியே சித்தத்தை ஈசன் பாலிறுத்தித் தியானத்தில் மூழ்கினர். நூல் நூற்பதையும் அவர் விடவில்லை. பொழுது விடிய வேண்டியதுதான்; உடனே எத்தனை விவிட்டார்கள், பேட்டிகள்? வெளியே தாழ்த்தப்பட்டவர் பிரச்னையைத் தீர்ப்பதற்காகக் கூடியிருந்த தலைவர்கள் அடிக்கடி வந்து, காந்திஜியின் யோசனைகளை அறிந்து செல்வர்; இம்மட்டோ! அன்றாடம் தபாலில் வந்து குவியும் கடிதங்கள் தந்திகள் செய்திகள், கேள்விகள் வேறு! வெளிநாடுகளிலுள்ள அவரது எண்ணற்ற நண்பர்களிட மிருந்தெல்லாம் அனுதாபச் செய்தி கள் வந்து குவிந்தன. கடுமையான உபவாஸத்திலும் இவ் வளவு காரியங்களையும் அவர் கவனித்து வந்தார்.

ஹரிஜனப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகத் தம்மிடம் யோசனைகள் கேட்க வந்த எவரையும், அவர் பார்த்துப் பேசாமல் திருப்பி அனுப்பவேயில்லை. வெளியில் நூற்றுக் கணக்கான கோயில்களும், கிணறுகளும் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டு, தீண்டாமையை ஒழிக்க மும்மரமான பிரசாரம் நடைபெற்று வந்தது நான் அவருக்குப் பெருத்த ஆறுதலளித்து வந்தது. ஜெயில் மதில்களுக்கு வெளியிலோ எப்பொழுதும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவ்வப்பொழுது அவரது தேக ஸ்திதியைப்பற்றி அறிந்துகொள்ள அவலுற்று, நின்று கொண்டேயிருந்தனர். 26-ந் தேதி, ஸ்ரீமதிகள் ஸ்வரூப ராணி நேருவும், வஸந்தா தேவியும், ஊர்மிளா தேவியும் மகாத்மாவைக் கண்டனர்.

நிற்க, காந்திஜி உயிரைக் காக்க, தலைவர்கள் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளின் விவரங்களையும், அவை எவ்வாறு முடிந்தன வென்பதையும் இனிக் கவனிப்போம்.

கரு மேகங்கள்

20-ந் தேதி கூடிய ஹிந்துத் தலைவர்களின் மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டதாக முன்னொரு அத்தியாயத்தில் கூறினோம். மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டதாயினும், பம்பாயிலுள்ள "பிர்லா ஹவுஸ்" எப்பொழுதும் தேன் கூடு மாதிரி சுறு சுறுப்புடனேயே விளங்கியது. தலைவர்கள் ஒருவரை யொருவர் கலந்து யோசித்த வண்ணமாகவே யிருந்தனர். இதற்குள் மகாத்மா உபவாஸத்தைத் தொடங்கி விட்ட செய்தியும் அவர்களுக்கு எட்டி விட்டது. வெற்றியைக் காணமல் அவர் உபவாஸத்தை நிறுத்தப் போவதில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். டாக்டர் அம்பேத்கரும், அவரது நண்பரான டாக்டர் ஸோலங்கியும், பண்டித மாளவியா, ஸர் டேஜ் பகதூர் ஸப்ரூ, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார்,

ஸர் சுனிலால் மேத்தா, ஸர் புருஷோத்தம தாஸ் தாகூர்தாஸ், ஸேத் மதுராதாஸ் வாஸன்ஜி, ஸ்ரீயுத கன்ஷியாம்தாஸ் பிர்லா, ஸ்ரீயுத ஜெயகர், பாபு ராஜேந்திர பிரசாத், ஸ்ரீயுத டி. பிரசாசம் முதலிய பல தலைவர்களைக் கண்டு பேசினர். தலைவர்கள் எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும், கூட்டுத் தொகுதிகளை ஏற்றுக் கொள்ள அம்பேத்கர் விரும்பவில்லை. இந்நிலையில் ஸர் ஸப்ரூ ஒரு யோசனையைச் சமர்ப்பித்தார். இதன்படி கூட்டுத் தொகுதிக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டது; தங்களுக்கு வேண்டிய அபேக்ஷகர்களைத் தாங்களே பொறுக்கிக் கொள்ளத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்தத் திட்டம் உரிமை யளித்தது. இந்த யோசனையை டாக்டர் அம்பேத்கர் வரவேற்றாராயினும், பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பு மூலம் தங்களுக்குக் கிடைக்கும் மொத்த ஸ்தானங்களை விட அதிகமான ஸ்தானங்கள் வேண்டுமென அவர் கோரினார். பிரதம மந்திரியின் தீர்ப்பினால் தாழ்த்தப் பட்டவர்களுக்குக் கிடைத்த ஸ்தானங்கள் 71. தனித் தொகுதி மூலம் கிடைக்கும் இந்த 71 ஸ்தானங்களுக்கும், ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் மும்மூன்று அபேட்சகர்கள் வீதம் தாழ்த்தப்பட்டவர்களால் தெரிந்தெடுப்பதென்றும், அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரால் தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களாக பொதுத் தொகுதியின் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் நிற்பதென்றும், தாம் கோரிய அதிகப்படியான ஸ்தானங்களுக்கு, கூட்டுத் தொகுதித் திட்டத்தின்படி, ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்றும், இத்தகைய யோசனைக்குத் தான் இணங்குவதாகவும் அம்பேத்கர் கூறினார். இதன்படி, பொதுத் தொகுதியில் நிற்கும் ஒவ்வொரு அபேட்சகரையும் அங்கீகரிக்கும் உரிமை தாழ்த்தப்பட்டவர்களுக்கே யிருக்கும்; பொதுத் தொகுதியினர் எந்த அபேட்சகர்களைத் தெரிந்தெடுக்கின்றனரோ அவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அங்கீகரிப்பதால் கூட்டுத் தொகுதிக் கொள்கை நிலை நாட்டப் படுகின்றது.

ஸர் ஸப்ருவின் திட்டத்தையும், இன்னும் சில விஷயங்களையும் பற்றி யோசித்துவிட்டு, இறுதியான ஒரு திட்டத்தை

வரைந்து கொண்டு திரும்பி வருவதாகக் கூறி டாக்டர் அம்பேத்கரும், டாக்டர் ஸோலங்கியும் "பிர்லா ஹவுஸை" விட்டு வெளிச் சென்றனர். ஆனால் மற்றத் தலைவர்கள் உடனே கலையவில்லை. "இந்தத் திட்டம் காந்திஜிக்குச் சம்மதமாகவிருக்குமா?" என்ற கேள்வியை ஒவ்வொரு தலைவரும் கேட்க ஆரம்பித்தனர். இக்கேள்விக்கு யாரால் பதில் சொல்ல முடியும்? "இஷ்டமிருந்தால் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் தள்ளி விடுங்கள்" என்றார் ஸப்ரூ. மகாத்மாவின் சபதப்படி இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் அவரைத் திருப்தி படுத்தும் என அவர் ஒவ்வொரு தலைவரையும் கேட்டார்.

நிற்க, ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் விஷயமாக மகாத்மாவைக் கண்டு விட்டுத் திரும்பிய தூது கோஷ்டியினர் வெளியிட்ட உறுதிகளுக்குப் பின்னரும் டாக்டர் அம்பேத்கர் சமரஸ உணர்ச்சியைக் காட்டாமல் பிடிவாதமாக விருப்பது கண்டு தலைவர்கள் வருத்தமும், வெறுப்பும் கொண்டனர். காந்திஜியின் உயிரைக் காக்கும் முயற்சி, அவரிடம் தங்களுக்குள்ள பக்திக் குகந்ததாக விருக்க வேண்டுமென்பதை தலைவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தனர். தங்கள் பக்தி பரீக்ஷிக்கப் படுவதாகவே அவர்கள் எண்ணினர். பெரும் போர்வீரனின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டியதே சத்தியாகிரகத்தின் அடிப்படையான தத்துவம் என்பதே அவர்களது கருத்து.

தீர்க்கமான ஆலோசனையின் பேரில் ஸர் ஸப்ரூவின் திட்டத்தை காந்திஜியிடம் சமர்ப்பிப்பதெனத் தலைவர்கள் முடிவு செய்தனர். இதை ஏற்றுக் கொள்ளும்படி மகாத்மாவிடம் தாங்கள் வற்புறுத்துவதாக ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார், ராஜேந்திரபாபு, பிர்லா, தேவிதாஸ் இவர்கள் உறுதி கூறியது ஸப்ருவுக்கு ஒருவாறு மன ஆறுதலளித்தது. பண்டித மாளவியாவும் இத்திட்டத்தை ஆசீர்வதித்தார். டாக்டர் மூஞ்சேயும் அதன் விவேகத்தை மெச்சினர்; கடைசியாக ஒரு குழந்தை துள்ளி விளையாடுவதுபோல், மாளவியாஜி ஏல்

லாத் தலைவர்களையும் எரவாடாவுக்கு ஓடும்படி உத்தரவிட்டார். பல தலைவர்கள் அன்று முழுதும் பட்டினிகிடந்தனர். இராச் சாப்பாட்டிற்கோ நாழிகையாய் விட்டது. விஷய விவாதங்களின் பொழுது பசியையே மறந்திருந்த தலைவர்களுக்கு, ஒருவாறு சமரஸ வழி தோன்றியதும் பசி உணர்ச்சி ஏற்பட்டது. ஆகவே எல்லோரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர்.

உடனே தலைவர்கள் தூங்கச் சென்று விடவில்லை. ஸாப்ரு, ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியார், ஜெயகர், பிர்லா, ராஜேந்திரபாபு, தேவிதாஸ் காந்தி இவர்கள் மட்டும் பாதி ராத்ரியில் பூனாவிற்குக் கிளம்பிய ரயிலிலேறி, பொழுது விடிவதற்குள் பூனா போய்ச் சேர்ந்தனர். காலை 7 மணிக்குக் காந்திஜியைக் காண்பதெனெ ஏற்பாடாகி யிருந்தது. அப்படியே ஜெயில் அறைகள் ஒன்றில் அவர்கள் காந்திஜியைக் கண்டார்கள். இடியிடித்த சிரிப்புடன் மகாத்மா அவர்களை வரவேற்றார். அப்பொழுதுதான் அவர் உபவாஸம் ஆரம்பித்து பூரா 24 மணி நேரம் ஆயிற்று. ஆயினும் அதற்குள்ளாகவே அவர் எவ்வளவோ தளர்ச்சி யடைந்து விட்டதைக் கண்டு தலைவர்கள் வருந்தினர். "என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று ஸ்ரீமதி ஸரோஜினி காந்திஜியின் காதில் விழாமல் தலைவர்களை நோக்கிக் கேட்டு, ஒரு சிரிப்பு சிரித்தாள். இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஸர் டேஜ் பகதூர் விவாதத்தைத் தொடங்கி, தமது திட்டத்தை விளக்கினர். காந்திஜி வெகு கவனத்துடன் அதைக் கேட்டார். அதை அவர் ஏற்கிறாரா அல்லவா என்பதை அவரது முகத்திலிருந்து கண்டு பிடிப்பது அசாத்தியமாக விருந்தது. மற்றவர்கள் ஸப்ருவின் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசினர்; சில விஷயங்களை அறிந்து கொள்ளுவதற்காக மட்டும் ஓரிரண்டு தடவைகளில் காந்திஜி குறுக்கிட்டார். இப்படியாக அரை மணி நேரம் விவாதம் நடந்தது. இறுதியில் அவர், "உங்கள் திட்டத்தை நான் அனுதாபமான நோக்குடன் கவனிக்கத் தயார். அபேக்ஷகர்களை நிறுத்திப் பொறுக்கிக் கொள்ளும் யோசனையைப் பற்றி நான்

கவலை கொள்ளவில்லை. எதற்கும் எல்லாவற்றையும் நீங்கள் எழுதி மூலம் என்னிடம் கொடுத்து விடுங்கள்" என்று கூறினார். இது போரில் பாதி ஜெயம். அங்கு பிரஸன்னமாயிருந்த தலைவர்களில் ஒவ்வொருவரது உள்ளத்திலும் எத்தகைய மகிழ்ச்சி துள்ளிக் குதித்ததென்பதை எம்மொழிகளால் வர்ணிக்க முடியும்? ஆனால் காந்திஜி தமது வார்த்தையை அதற்குள்ளாக முடிக்கவில்லை; "நான் முடிவு செய்வதற்குள், சாத்தியமானால் டாக்டர் அம்பேத்கரையும், ராவ் பகதூர் ராஜாவையும் பார்த்துப் பேச வேண்டும். அவர்களுடைய மனதை அறிந்தால் தான் எனது முடிவுக்கான வழியை நான் காண முடியும்" என்றார் அவர். இத்துடன் தலைவர்கள் திரும்பினர்.

இதற்கு ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் காந்திஜியும், ஸர்தார்ஜியும், மகாதேவ் தேசாயும் சிறை நுழை வாயிலுக்கருகே யிருந்த ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இங்குதான் மகாத்மாஜி, பூனாவைச் சேர்ந்த பிரபல தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவரான ஸ்ரீயுத ராஜபோஜுக்கு மாமரத்தி னடியில் முதன் முதலாகப் பேட்டி யளித்தார்.

தாங்கள் காந்திஜியைக் கண்டு பேசிய விவரத்தைப் பற்றித் தலைவர்கள் பத்திரிகைகளில் எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை. மகாத்மாவை அடிக்கடி சிறையில் கண்டு பேச வேண்டிய அவசிய மேற்பட்டதாலும், விரைவில் ஒரு முடிவை ஏற்படுத்தி மகாத்மாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டி யிருந்ததாலும் தலைவர்கள் தங்கள் மகாநாட்டைப் பூனாவிலேயே நடத்தத் தீர்மானித்தனர். தலைவர்களின் அவசர அழைப்புக்கிணங்கவும், மகாத்மாஜியின் வேண்டுகோளின் பேரிலும் அம்பேத்கரும், எம். ஸி. ராஜாவும் பம்பாயிலிருந்து பூனாவிற்கு ஓடி வந்தார்கள். இச் செய்தி தேச மக்களுக்குச் சிறிது ஆறுதலளித்தது. அம்பேத்கரும் காந்திஜியும் கலந்து, ஒருவருடன் ஒருவர் மனதை விட்டுப் பேசினால் சமரஸமேற்படுவது வெகு சுலபமாக முடிந்து விடுமென மகா ஜனங்கள் நம்பினர். இந் நம்பிக்கையுடன் புதன்கிழமை கழிந்தது.

ஆனால் வியாழன் விடிந்ததும், சமரஸ சூரியனை மீண்டும் கரு மேகங்கள் மறைக்கலாயின. உடனே தம்மை வந்து காணும்படி ஸ்ரீயுத ராஜகோபாலாச்சாரியாரையும், ராஜேந்திர பாபுவையும் மகாத்மாஜி டெலிபோன் மூலம் அழைத்தார். ஸப்ருவின் எழுத்து மூலமான திட்டத்தையும், அது சம்பந்தமான டாக்டர் அம்பேத்கரின் நகல் திட்டத்தையும் அவர் ஊன்றிக் கவனித்து விட்டார். அவை அவருக்குத் திருப்தி யளிக்கவில்லை. "இதில் ஒரு மாசு இருக்கிறது. இது எனக்குப் பிடிக்கவில்லை. இது மீண்டும் தீண்டத்தகாதவர்களை இரு பிரிவாகப் பிரித்து விடும். அபேட்சகர்களைப் பொறுக்கி யெடுப்பதன் மூலமாக சட்ட சபைக்கு வரும் ஒரு பகுதியினரும், நேரடியான தேர்தல் வழியாக வரும் மற்றொரு பகுதியினருமாக சட்டசபைகளில் எப்பொழுதும் இரண்டு பிரிவுகள் இருந்து கொண்டே யிருக்கும். இதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சி ஏற்படும். ஆகவே இதற்கு நான் இடங்கொடுக்க முடியாது" என்றார் காந்திஜி.

மேலும் ஸ்ரீயுத ராஜாஜியையும், ராஜேந்திர பாபுவையும் பார்த்து அவர் சொன்னதாவது: "பூர்வாங்கத் தேர்தல் முறை, அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் அபேக்ஷகர்களைப் பொறுக்கி யெடுத்துக் கொள்ளுவது கெடுதலானதா என்பதை நீங்கள் எனக்கு விளக்கிக் கூற வேண்டும். அது கெடுதலானதாயின், அதைப் பற்றி நாம் யோசிக்கவே கூடாது. ஆனால் ஒரு சில ஸ்தானங்களைப் பொறுத்த மட்டில் அம்முறையை நீங்கள் சகித்துக் கொள்ளத் தயாராயிருந்தால் அதை ஏன் எல்லா ஸ்தானங்கள் விஷயத்திலும் அனுஷ்டிக்கக் கூடாது? இதை உங்களுக்குச் சொல்லுவதற்காகத் தான் நான் அவசரமாக உங்களை இங்கு வரவழைத்தேன். இதைப் பற்றி நீங்கள் யோசித்து, முடிவை எனக்கு அறிவிக்க வேண்டும். எல்லா ஸ்தானங்களுக்கும் பூர்வாங்கத் தேர்தல் முறையை அனுஷ்டிக்கக் கூடாதென்றால், ஒரு சில ஸ்தானங்களுக்கும் அதை வைத்துக் கொள்ளக் கூடாதென்பதே எனதபிப்பிராயம்."

இந்தப் பேட்டி இத்துடன் முடிந்தது. ராஜாஜியும், ராஜேந்திர பாபுவும் சிறிது நேரம் ஸர்தார்ஜியுடனும், சரோஜினி தேவியுடனும் பேசிவிட்டு, பண்டிதமாளவியாவின் கிருஹத்திற்கு விரைந்தனர். அங்கு ஸர் டேஜ்-ம், ஸ்ரீயுத ஜெயகரும், பிர்லாவும் மாளவியாஜியுடன் வெகு மும்மரமாக பேசிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். முதலிருவரும் பூனாவில் ஏற்கனவே டாக்டர் அம்பேத்கரைக் கண்டு பேசியாகி விட்டது. ஸ்ரீயுத ஜெயகரின் தொனி சற்று ஏமாற்றத்தைத் தரக் கூடியதாக விருந்தது. அம்பேத்கர் கோரிய பலவிதமான விஷயங்களைத் தலைவர்கள் வெளியிட்டனர். முதல் நாள் தலைவர்களுக்குள் ஏற்பட்டிருந்த நம்பிக்கை போய் அன்று கவலையே அவர்களை மீண்டும் கவ்விக் கொண்டிருந்தது. மாமரத்தடியில் நடந்த மாறுதல்களை மற்ற தலைவர்களுக்கு வெளியிட ராஜாஜிக்கும், ராஜேந்திரருக்கும் அவகாசமில்லாமல் போய் விட்டது. மாளவியாஜியையும், ஸர் ஸப்ரூ, ஸ்ரீயுத ஜெயகர்களையும் மகாத்மா அழைத்திருந்ததால் அவர்கள் எரவாடாவுக்குச் சென்றனர். ராஜாஜியினிடமும், ராஜேந்திர பாபுவினிடமும் முதல் தினம் என்ன அறிவித்தாரோ அதையே காந்திஜி இவர்களுக்கும் எடுத்துச் சொன்னார். அதுகேட்ட தலைவர்கள் திடுக்கிட்டுத் திரும்பினர். மாலையில் தம்மை வந்து காணும்படி அம்பேத்கருக்குத் தகவலறிவிக்குமாறு மகாத்மாஜி கேட்டுக் கொண்டார். "தங்களைக் கண்டவுடனே அவரது மனம் மாறி விடும்" என்றார் ஜெயகர்.

இதற்குள்ளாக காந்திஜி, ராவ் பகதூர் எம். ஸி. ராஜாவையும், பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீயுத பி. பாலு என்பாரையும் சந்தித்துப் பேசினார். ராவ் பகதூர் ராஜா என்பவர் டில்லி சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதியாகக் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர். அம்பேத்கரைப் போன்றல்லாமல் இவர் கூட்டுத் தொகுதியை ஆதரித்து வந்தார். இத்துறையில் இவரும், டாக்டர் மூஞ்சேயும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். "ராஜா—மூஞ்சே ஒப்பந்தம்" என அதற்குப் பெயர்.

பூர்வாங்கத் தேர்தல் முறையைப் பற்றி ராவ் பகதூர் ராஜா அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள மகாத்மா அதிக ஆவல் கொண்டிருந்தார். காந்திஜிக்குத் திருப்தி யுண்டாக்கக் கூடிய எந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்துவதற்குத் தங்களாலியன்ற வரையில் தாங்கள் பாடுபடத் தயார் என்று அவர் கூறினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஜாதி ஹிந்துக்களுடன் சரிசமமான அந்தஸ்தில் வைக்கும் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துமாறு அவர்கள் காந்திஜியை வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே செய்வதாக அவர் உறுதியளித்தார். "எண்ணிக்கையுற்ற எத்தனை ராஜிய அமைப்புகள் எங்களுக்குக் கிடைத்தாலும் அவற்றால் எங்களுக்கு என்ன பிரயோஜனம்? அவற்றை விட தாங்கள் ஒருவர் உயிருடன் வாழ்ந்திருப்பதே எங்களுக்கு ஸர்வ நன்மைகளையுமளிக்கும்" என்று ஸ்ரீயுத பாலு சொன்னதைக் கேள்வியுற்று, மகாத்மா தமக்கேற்பட்டுள்ள அதிகமான பொறுப்பை உணர்ந்தார்.

மாலையில் டாக்டர் அம்பேத்கரும், டாக்டர் ஸோலங்கியும் காந்திஜியைக் கண்டனர். பூனாவிலிருந்த எல்லாத் தலைவர்களும் அவர்களுடன் எரவாடாவுக்குச் சென்றனர். அம்பேத்கரை பற்றிக் கொண்டிருந்த பிடிவாதம் இன்னமும் முற்றிலும் அவரை விட்டகலவில்லை. "மகாத்மாஜி, தாங்கள் எங்கள் விஷயத்தில் ரொம்ப அநியாயமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று அம்பேத்கர் சம்பாஷணையைத் தொடங்கினார். "நான் எது செய்தாலும் பிறருக்கு அது அநியாயமானதாகவே படுகின்றது; அது எனது துர்ப்பாக்கியம். நான் என்ன செய்வது" என்றார் காந்திஜி. அவர் எழுந்திருக்கச் சக்தியற்று, படுக்கையில் படுத்தபடியே யிருந்தார். அம்பேத்கர் சொல்லிக் கொண்டு வந்த விஷயங்களை யெல்லாம் அவர் கேட்டுக் கொண்டே யிருந்தார். "அதற்கான பரிகாரத்தைத் தாங்கள் செய்து கொண்டு எனக்கு உதவ வேண்டும்" என அம்பேத்கர் அழுத்தமாக இரண்டு மூன்று தடவைகள் சொன்னார். "என்னுடைய பூரண ஆதரவும் தங்கள் பக்கமே

இருக்கிறது. தாங்கள் சொல்லும் பல விஷயங்களையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் என் உயிரைக் காப்பாற்று வதில் தாங்கள் சிரத்தை கொண்டிருப்பதாகச் சொல்லுகிறீர் களே, அது என்ன சமாச்சாரம்?" என்றார் மகாத்மாஜி.

அம்பேத்கர்: "ஆமாம், மகாத்மாஜி, அதில் நான் பூரண அக்கரை கொண்டிருக்கிறேன். தாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்துக்காகப் பூராவும் உழைப்பீர் களானல் நாங்கள் தங்களை ஒரு பெரு வீரராகக் கொண்டாடு வோம்."

காந்திஜி: "சரி, என்னுடைய உயிரைக் காப்பாற்று வதில் தங்களுக்கு அக்கரையிருக்குமானல், அதற்காகத் தாங் கள் என்ன செய்ய வேண்டுமென்பதை தாங்கள் அறிவீர் களா? தாங்கள் சொன்னதிலிருந்து தங்களுடைய நிலைமை இதுதான் என நான் எண்ணுகிறேன். பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பினல் தங்களுக்குக் கிடைத்துள்ளதை விட்டுக் கொடுக்க ஒப்புக் கொள்ளுவதற்கு முன்பு, எங்களுடைய பரி காரத்தைக் கோருகின்றீர்கள். நீங்களாகப் பார்த்து அபேக்ஷ கர்களைப் பொறுக்கியெடுத்துக் கொள்ளுவது என்ற முறை யை என் நீங்கள் ஒரு சில ஸ்தானங்களுக்கு மட்டும் அனுஷ் டிக்க விரும்புகின்றீர்கள்? அதை ஏன் எல்லா ஸ்தானங் களுக்கும் வைத்துக் கொள்ளக் கூடாது? ஒரு சில ஸ்தானங் களுக்கு அந்த முறை நல்லதாயிருக்குமானல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பூராவுக்குமே அது நல்லதாயிருக்க வேண்டு மல்லவா? பிறப்பினல் நீங்கள் "தீண்டத்தகாதவர்"களாக இருக்கின்றீர்கள். என்னுடைய சுய இஷ்டத்தினல் நானும் என்னைத் "தீண்டத்தகாதவ"னகவே பாவித்து வருகிறேன். நாம் ஏற்படுத்தும் எந்தத் திட்டமும் தாழ்த்தப்பட்ட வகுப் பினர் பூராவுக்கும் நன்மையை யளிக்க வேண்டும். ஒரு சிலருக்கு நன்மை கிடைத்து விட்டால் அது போதாது. ஹிந்து சமூகத்திலிருந்து தங்கள் வகுப்பினர் எவ்விதத்திலும் பிரிக்கப்படக் கூடாதென்பதிலேயே நான் கவனம் செலுத்தி வருகிறேன். அந்த எண்ணமே என் மனதை வேதனையி

லாழ்த்துகின்றது. தங்களது பூர்வாங்கத் தேர்தல் முறைத் திட்டத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனல் அதை ஒரு சில ஸ்தானங்களுக்கு மட்டும் அனுஷ்டிப்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. எல்லா ஸ்தானங்களுக்கும் அந்த முறையை வைத்துக் கொள்ளுங்கள். தற்போதுள்ளபடி நான் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறேன். அது எனக்குப் பிடிக்க வில்லை. அது மீண்டும் உங்கள் வகுப்பில் பிரிவினைகளை உண்டு பண்ணும். அவ்விதம் ஏற்படுவதை நான் என் உயிரைக் கொடுத்தாகிலும் தடுத்தே தீருவேன். ஹிந்து சமூகம் பிள வுண்டு, அழிந்து போவதை நான் எப்படி தடுக்கத் தீர்மானித் திருக்கிறேனே அதே மாதிரி உங்கள் வகுப்பு விஷயத்திலும் நான் தீர்மானிக்கும்படி ஏற்படும்."

மகாத்மாவின் அந்தரங்க உணர்ச்சியை அம்பேத்கர் அறிந்து கொண்டார். காந்திஜியின் அன்பு வெள்ளத்தில் அவரும், ஸோலங்கியும் ஆழ்ந்து விட்டனர். காந்திஜியை விடத் தங்கள் நன்மைக்காக உழைக்கக் கூடியவர் வேறெவரு மில்லை என்பதையும் அவர்கள் முற்றிலும் உணர்ந்தனர். இனி அவரை எதிர்த்து நிற்பதென்பது அசாத்தியமான காரியம். தங்கள் நன்மையையே அவர் தமது ஹிருதயத்தில் கொண்டிருக்கிறார் என்ற உறுதியைக் கேட்டு அவர்கள் சந் தோஷ மடைந்தனர். காந்திஜிக்கு எவ்விதத்தில் தகுந்த வாறு பதிலளிப்பதென்று அவர்களுக்குப் புரியவில்லை. இறுதி யில், "எல்லா ஸ்தானங்களுக்கும் பூர்வாங்கத் தேர்தல் முறையை வைத்துக் கொள்ளுமாறு தாங்கள் அருளியது கண்டு ரொம்ப சந்தோஷம். நானும் எனது பிடிவாதத்தைச் சற்று விட்டுக் கொடுத்து, கூட்டுத் தொகுதிகளை ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று அம்பேத்கர் கூறினர். அவரது முகம் சந்தோஷத்தால் பூரித்தது.

"மெத்த சந்தோஷம்! ஆனல் இன்னும் எவ்வளவோ விஷயங்களை யெல்லாம் தாங்கள் இந்நண்பர்களுடன் கலந்து தீர்த்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது" என்ருர் மகாத்மாஜி.

தலைவர்கள் எரவாடாவை விட்டு வெளியேறுகையில் நன்றாக இருட்டி விட்டது.

இதற்குள் பகலில் நடந்த தலைவர்கள் மகாநாட்டில், ராஜிக்கான மார்க்கம் எதுவும் ஏற்படுவது அசாத்தியமாகத் தோன்றியதாலும், ஏற்கனவே மகாத்மாவின் தேக நிலைமை மிகவும் கவலைக் கிடமானதாக ஆய்விட்டதாலும் தங்கள் உணர்ச்சிகளைத் தந்திகள் மூலம் உடனே பிரதம மந்திரிக்குத் தெரிவிக்குமாறு பண்டித மாளவியா தேசத்திலுள்ள எல்லாத் தலைவர்களையும், பொது ஸ்தாபனங்களையும் வேண்டிக் கொண்டார். தமது வகுப்புத் தீர்ப்பை வாபீஸ் வாங்கிக் கொண்டு, தேர்தல் தொகுதிகள் சம்பந்தமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே ஓட்டுகளெடுத்து அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளுமாறும், மகாநாட்டின் சார்பில் பிரதம மந்திரிக்கு அறிவித்து விடுவதென மகாநாடு ஏகமனதாகத் தீர்மானித்தது. இக்காரியத்தைக் கவனிப்பதற்காக ஸர் சுனிலாலையும் பூனாவுக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

வெற்றி

ஆனால் மறுதினம் காலையில் சமரஸ சூரியனை மறைத்துக் கொண்டிருந்த கரு மேகங்கள் ஒவ்வொன்றாகக் கலைய ஆரம்பித்தன. மாளவியாஜியின் தலைமையின்கீழ் மீண்டும் தலைவர்கள் ஒன்று கூடினர். அம்பேத்கரின் கக்ஷிக்கு த்.தென்னிந்தியாவிலிருந்தும், வங்காளத்திலிருந்தும் பல நண்பர்கள் வந்து சேர்ந்தனர். (1) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எத்தனை ஸ்தானங்களை, எந்த முறையில் ஒதுக்கி வைப்பது; (2) தேர்தல் போர்டுக்கு எத்தனை அபேக்ஷகர்களைத் தெரிந்தெடுப்பது; (3) மத்திய சட்டசபையில் எத்தனை ஸ்தானங்களைக் கொடுப்பது; (4) ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களின் கால வரையறை என்ன; (5) உத்தியோகங்களை வழங்குதல்

முதலிய விஷயங்களையெல்லாம் விவாதித்துத் தீர்க்க வேண்டியிருந்தது. விவாதங்கள் மிகவும் ஜோராக நடைபெற்றன. டாக்டர் அம்பேத்கர் கக்ஷியில் அவர் தான் அதிகமாக வாதித்தார். பல விஷயங்களில் அவர் அதிகப் பிடிவாதம் காட்டினர். ஸர் டேஜ் பகதூர் ஸப்ரூ, ஸ்ரீயுத பிர்லா, சக்காவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், ஜெயகர் இவர்கள் மற்றொரு பக்கத்தில் முக்கியஸ்தர்களாக விளங்கினர். பூர்வாங்கத் தேர்தல் முறையை எல்லா ஸ்தானங்களுக்கும் அனுஷ்டிக்க வேண்டுமென்று காந்திஜி கூறிய யோசனை ஏக மனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இதற் கடுத்தபடியான பிரச்னை, சட்ட சபைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஸ்தானங்களின் தொகை. இது விஷயமாக ரொம்ப பேரம் நடந்தது. பிரதம மந்திரியின் தீர்ப்புப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 71 ஸ்தானங்கள் கிடைத்தன. டாக்டர் அம்பேத்கர் தாம் தயாரித்து வைத்திருந்த திட்டத்தில் தங்களுக்கு 197 ஸ்தானங்கள் வேண்டுமென்று கோரி யிருந்தார். இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமானதெனத் தலைவர்கள் கருதினர். ஹிந்துக்களின் சங்கியையில் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பாக மிருக்கின்றனரோ அதற்குத் தகுந்தவாறு அவர்களுக்கு ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் கூட 197 ஸ்தானங்கள் மிகவும் அதிகமாக விருந்தன. இது குறித்து நீண்ட நேரம், பலத்த சர்ச்சை நடந்தது. கடைசியில் 148 ஸ்தானங்கள் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

அபேட்சகர்களாக நிற்பவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுவதற்கு முன்பாக எவ்வளவு பேர்களை அபேக்ஷகர்களாகப் பொறுக்கி எடுத்து நிறுத்துவது என்ற விஷயம் அடுத்தபடியாகக் கவனிக்கப்பட்டது. ஸர் ஸப்ரூ மூன்று பேர்கள் போதுமென்று எற்கனவே சொல்லி யிருந்தார். அம்பேத்கர் இரண்டு பேர்கள் போதுமென்றார். மகாத்மாஜி ஐந்து பேர்கள் நிறுத்தப்படுவதை ஆதரித்திருந்தார். பலரும் இதையே ஆத

மித்தனர். கடைசியாக நான்கு பேர்கள் நிறுத்தப்படுவ தெனத் தீர்மானிக்கப்பட்டது.

மத்திய சட்டசபைப் பிரதிநித்துவ விஷயத்தில் உடனே தலைவர்கள் கவனஞ் செலுத்தினர். பிரிட்டிஷ் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டுள்ள மொத்த ஸ்தானங்களில் 100க்கு 18 வீதம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஒதுக்கி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

இவ்வளவு தூரம் மகாநாட்டு நடவடிக்கைகள் முன்னேற்ற மடைந்திருந்த போதிலும், தலைவர்கள் பலரிடமும் அவநம்பிக்கை குடி கொண்டிருந்தது. இந்தப் பூர்வாங்கத் தேர்தல் முறையும், ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதும் எவ்வளவு காலம் வரையில் நடைபெற வேண்டுமென்பது குறித்து உக்கிரமான விவாதம் நடந்தது. பூர்வாங்கத் தேர்தல் முறை பத்து வருஷ காலம் வரையில் அநுஷ்டிக்கப்பட வேண்டுமென்று அம்பேத்கர் வற்புறுத்தினர். ஆனால் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும் விஷயத்தை அதற்குப் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே வாக்கெடுத்து முடிவு செய்ய வேண்டுமென அவர் கூறினர். இந்த வாக்கெடுக்கும் விஷயத்தில் இரு கக்ஷியினரும் தீவிரமான அபிப்பிராயங்கள் கொண்டிருந்தனர். வருஷங்களை வேண்டுமானல் 25 லிருந்து 15 ஆகக் குறைத்துக் கொள்ளலாமே யொழிய, வாக்கெடுக்கும் யோசனையை அம்பேத்கர் விட்டு விடுவார் என எதிர் பார்ப்பது அசாத்தியமானதாக விருந்தது. இந்த வாக்கெடுக்கும் முறை யிருந்தால் தான் ஜாதி ஹிந்துக்கள் தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்ளுவர் என்று அம்பேத்கர் கக்ஷியினர் வாதித்தனர். இவ்விஷயத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் வாதித்தது அதிக அவநம்பிக்கைக்கு இடங் கொடுத்தது.

இந்நிலையில், காந்திஜி மிகவும் அபாய நிலைமைக்கு வந்து விட்டதாகத் தலைவர்களுக்குச் செய்தி கிடைத்தது. டாக்டர்களும் தைரிய மிழந்து விட்டனர் என அவர்கள் கேள்விப் பட்டனர். அப்பொழுது ஏற்கனவே இரவு ஆரம்பமாகி

விட்டது. இருந்தாலும் தலைவர்கள் விஷய விவாதங்களை முடிக்கவில்லை. வாக்கெடுப்பதை ஸர் ஸப்ரூ பலமாக ஆக்ஷே பித்தார். எரவாடாவுக்குச் சென்று, கந்தையைக்கண்டு சில வார்த்தைகள் பேசி விட்டுத் திரும்பிய ஸ்ரீயுத தேவிதாஸ் காந்தி, வாக்கெடுக்கும் விஷயத்தில் பிடிவாதமாக விருந்து, ஒப்பந்த மேற்படுவதைத் தடை செய்யாம லிருக்குமாறு அம் பேத்கரை வெகு தூரம் வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் அப்பொழுதும் அம்பேத்கர் இணங்கவில்லை. தாங்கள் ஏன் அவ்விஷயத்தில் அவ்வளவு விடாப் பிடியாக விருக்கின்றனர் என்பதை அக்கக்ஷியினர் மீண்டும் விளக்கி னர். தாங்கள் கோருவதைக் காந்திஜி கொடுத்து விடுவா ரென்பது நிச்சயமென்றும், ஆனால் தலைவர்கள் தான் அதைக் கிடைக்க வொட்டாமல் தடுக்கின்றனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர். தமது கோரிக்கைகளுக்குக் காந்திஜி இணங்குவார் என்று அம்பேத்கர் பரிபூரணமாக நம்பியதால் அவர் மகாத்மாவை போய்ப் பார்ப்பதே நல்லதென தலைவர் கள் அபிப்பிராயப்பட்டனர். உடனே எல்லோரும் எரவா டாவுக்குப் புறப்பட்டனர்.

காந்திஜி, மிகவும் களைப்புற்றுக் கிடந்தார். எனினும் அவர் தலைவர்களுடன் கலந்து பேச சம்மதித்தார். அவர் களுக் கேற்பட்டுள்ள சிக்கலான விஷயத்தைப் பற்றிக் கேள் விப்பட்டுக் கவலை கொண்டார். "மகாத்மாஜி, தாங்கள் தான் எங்கள் உதவிக்கு வர வேண்டும்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் வாக்கெடுக்கும் விஷயத்திற்கு இந் நண்பர்களில் சிலர் சம்மதிக்க மறுக்கிறார்கள். தீண்டா மையை ஒழித்துப் போட அது மிகவும் அனுகுணமாக விருக்குமென்பதை உணர்ந்தே நாங்கள் அது இருக்கவேண்டு மென வற்புறுத்துகின்றோம். எங்கள் கோரிக்கையைத் தாங் கள் ஆதரிப்பீர்கள் என நம்புகிறோம்" என்று அம்பேத்கர் பேச்சை ஆரம்பித்தார். காந்திஜி யாவற்றையும் வெகு உருக்கமாகவும், அனுதாபத்துடனும் கேட்டார். வாக்கெடுக் கப் படுவதைத் தாம் ஆட்சேபிக்காம லிருப்பது மட்டுமின்றி,

அதனைத் தாம் வரவேற்பதாகவும் மகாத்மா கூறியது அம்பேத்கருக்கு மகிழ்ச்சியை யூட்டியது. ஜாதி ஹிந்துக்கள் பரிக்ஷிக்கப்படும் யோசனையை அவர் ஆதரித்தார். ஆனால் அத்தகைய வாக்கெடுக்கும் காரியத்தை உடனேயோ அல்லது சமீப காலத்திலோ ஏன் நடத்தக்கூடாதென அவர் அம்பேத்கரைக் கேட்டார். இதற்கு ஒரு வருஷ காலம் தகுந்ததல்லவெனக் கருதப்பட்டால் ஐந்து வருஷங்களாக வைத்துக் கொள்ளுமாறு யோசனை சொன்னார். காந்திஜி தமது கருத்துக்களைப் பூராவாக வெளியிடுவதற்குள் டாக்டர்கள் ஓடிவந்து அவர் மேலும் சம்பாஷணைகளில் கலந்து கொள்ளக் கூடாதென எச்சரிக்கை செய்தனர். மகாத்மாவை அதிகமாகத் தொந்திரவு செய்ய இஷ்டப்படாமல் தலைவர்கள் அவரை மறுதினம் வந்து காண்பதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டனர்.

சனிக்கிழமை அதிகாலையில் தலைவர்களின் மகாநாடு மறுபடியும் கூடியது. பல சில்லரை விஷயங்களெல்லாம் சர்ச்சை செய்து தீர்க்கப்பட்டன. ஆனால் அம்பேத்கரின் கோரிக்கை அப்படியே முடிவு செய்யப்படாமல் கிடந்தது. அவர் மறுபடியும் காந்திஜியைச் சந்திக்க விரும்பவே, பகலில் அவரும், ஸோலங்கியும், ராஜாஜியை அழைத்துக் கொண்டு எரவாடா போய்ச் சேர்ந்தனர். பத்து வருஷங்களுக்குப் பின் வாக்கெடுப்பதை அங்கீகரிக்குமாறு டாக்டர் மகாத்மாவைக் கேட்டுக் கொண்டார். அந்தச் சமயத்தில் காந்திஜியின் தேக நிலைமை சற்று சுமாராக விருந்தது. அவர் மெதுவாகப் பேசினார்; ஆனால் தெளிவாகவும், உறுதியுடனும் பேசினார்.

பத்து வருஷங்களுக்குப் பின்னர் வாக்கெடுக்கும் யோசனையைக் காந்திஜி அங்கீகரிக்க வேண்டுமென அம்பேத்கர் விரும்பினார். மகாத்மாவின் தேக நிலை சற்று சுமாராக விருந்தது; வாய்க் குமட்டலும் அவ்வளவாகவில்லை. அவர் தாழ்ந்த குரலில்தான் பேசினாராயினும், அவரது வார்த்தைகள் ஸ்பஷ்டமாக விருந்தன. “உமது வாதத்தை எவரும் ஆட்சேபிக்க முடியாது. இருந்தாலும் வாக்கெடுப்பதை

ஐந்து வருஷங்களுக்குப் பின் வைத்துக் கொள்ளுவது நல்லது. ஹிந்துக்களின் நல்லெண்ணத்தை நிரூபிக்க ஐந்து வருஷ காலம் போதுமானது. ஆனால் வாக்கெடுப்பதை ஐந்து வருஷங்களுக்கும் அப்பால் ஒத்தி வைக்க வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்துவீர்களானால், அப்பொழுது நான் உங்கள்மீது சந்தேகம் கொள்ளுவேன்; ஜாதி ஹிந்துக்களின் நல்லெண்ணத்தைச் சோதிக்கத் தாங்கள் விரும்பவில்லையென்றும், ஜாதி ஹிந்துக்களுக்கு விரோதமாக வாக்குக் கொடுக்கும்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒன்று திரட்டுவதற்கே அவகாசம் கேட்கிறீர்கள் என்றும் தான் நான் எண்ணுவேன்.'' என்று காந்திஜி சொன்னார். ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையும், விசுவாசமும், அன்பும் காட்ட வேண்டுமென்றும் அவர் கூறினார். கடந்த ஐம்பது வருஷங்களாகத் தமது மனதில் பொங்கிக் கொண்டிருந்த எண்ணங்களையெல்லாம் வெளியிட்டார். தமது நெஞ்சத்தைக் கிழித்து அம்பேத்கருக்குக் காட்டினார். உடன் பிறந்த சகோதரன் ஒருவனைத் தீண்டத் தகாதவனாகக் கருதும் எண்ணத்தைத் தமது பன்னிரண்டாவது வயதிலிருந்தே தாம் எதிர்த்து வருவதாக அவர் அறிவித்தார். அந்தக் காலத்திலிருந்தே எங்ஙனம் தாம் இந்தக் கொடுமையை அகற்றப் பாடுபட்டு வருகிறார் என்பதையும் விளக்கினார். இதன் காரணமாகத் தாம் தமது குடும்பத்தைச் சேர்ந்த பலரை விட்டுப் பிரிய வேண்டி ஏற்பட்டதென்றும், தாமே ஜாதிப் பிரஷ்டராக ஆய்விட்டதாகவும் கூறினார். இறுதியாகத் தமது வாழ்க்கையின் லட்சியத்தை நிறைவேற்றி வைக்க உழைப்பதா அல்லது தமது மனைவியுடன் சேர்ந்து குடும்ப வாழ்க்கையை நடத்துவதா என்ற பிரச்னை ஏற்பட்ட காலையில் தாம் தமது லட்சியத்திற்காகவே உழைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டதாகவும் சொன்னார்.

"ஜாதி ஹிந்துக்களிடமிருந்து சட்ட பூர்வமான பாதுகாப்புகளைக் கோர உங்களுக்குச் சகல உரிமையுமுண்டு; ஆயினும் இந்தப் பட்டினிப் படுக்கையிலிருந்து கொண்டு நான் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன்; அந்த உரிமையை

நீங்கள் வற்புறுத்த வேண்டாம். ஜாதி ஹிந்துக்கள் விஷயத்தில் சற்று தாராளத் தன்மை காட்டும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஈசுவர கிருபையால் ஹிந்துக்களின் உணர்ச்சி இன்று தட்டி யெழுப்பப் பட்டிருக்கின்றது. இப்பொழுது அவர்கள் தம்மைத் தாமே பரிசுத்தப் படுத்திக்கொண்டு வருகின்றனர்; தங்கள் ஹிருதயத்தின் மீது படிந்துள்ள மாசைப் போக்கிக்கொள்ள முயன்று வருகின்றனர். ஆகவே இந்தச் சமயத்தில் உங்கள் கோரிக்கைகளை அதிகமாக வற்புறுத்துவது அவர்களிடையே நடந்து வரும் இவ்வேலைகளைத் தடை செய்யும். தீண்டத் தகாதவர்கள் விஷயத்திலே இழைக்கப்படும் ஒரு சில கொடுமைகளை உடனே நீக்கிவிடலாம்; ஆனால் ஹிந்து மதத்தைப் பற்றிக் கொண்டுள்ள கறை அப்படியே தானிருக்கும். துருவிப் பார்த்தால் உண்மை யென்ன? தீண்டாமை என்பது கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ள அந்தக் கறையின் ஒரு அம்சமேயாகும். ஹிந்து மதத்திலிருந்து அந்தக் கறையை நாம் அலசித் தள்ளாவிட்டால், அது அடிக்கடி பல வழிகளில் தலைகாட்டத் தொடங்கும். இந்த விஷம் நமது சமூகத்தையும், நமது ராஜீயத்தையுமே பாழ்படுத்தி விடும். ஹிந்து மதம் பல வருஷங்களாகத் தான் இழைத்து வந்த பாபத்திற்காக இப்பொழுது வருந்தி, அதனின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத் தானே முயல்கின்றது. ஆகவே அதற்குப் பூரா சந்தர்ப்பமும் அளிக்கும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஜாதி ஹிந்துக்களிடையே உங்கள் விமோசனத்திற்காக வேலை செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். அதுதான் நியாயமானது. ஆனால் நீங்கள் பத்து வருஷமோ, அல்லது பதினைந்து வருஷமோ கேட்டால் அது எனக்கு நீங்கள் சந்தர்ப்பமளிப்பதே யாகாது. ஐந்து வருஷ காலத்திற்குள்ளாக ஹிந்துக்கள் சரியான கணக்கொப்புவிக்க வேண்டும்; இல்லாவிடில் பிரயோஜனமேயில்லை. ஆதலால் ஐந்து வருஷ காலத்திற்குப் பின் வாக்கெடுக்கும் விஷயத்தில் நான் பிடிவாதமாக விருக்கிறேன். இதை நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு அறிவியுங்கள். நான் இழிவான மனிதனாக விருக்கலாம்; ஆனால் சத்தியம் என்

மூலமாகப் பேசுகையில் என்னைத் தோற்கடிக்க யாராலும் இயலாது. இப்பொழுது புரிந்ததா? இரண்டிலொன்றுக்கு நீங்கள் தயாராக விருக்க வேண்டும். ஒன்று ஐந்து வருஷ காலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும், அல்லது என்னை இழந்துவிடத் தயாராக விருக்க வேண்டும்.'' என்று சொல்லி முடித்தார் மகாத்மா.

முடித்தாரோ, இல்லையோ, உடனே அவர் சுத்தமாகக் களைத்துப் போயிருந்ததை யாவரும் கண்டனர். காதுடன் காது வைத்துப் பேசினால் நாம் எவ்வளவு மெல்லிய குர லில் பேசுவோமோ அப்படியே அவர் பேசினார். அவரைச் சுற்றி யிருந்தவர்களில் பலர் கண்ணீரும் விட்டு விட்டனர். மூன்று பகல், மூன்று இரவுகளாகப் பட்டினி கிடக்கும் அறு பது வயதுக்கு மேற்பட்ட ஒருவர் இதைவிட வேறு என்ன மாக விருக்க முடியும்? தமது பத்து வருஷக் கோரிக்கையை ஆதரித்து ஏதோ சில வார்த்தைகள் சொல்ல டாக்டர் அம் பேத்கர் முயன்றார். ஆனால் அவரது மனம் இடம் கொடுக்க வில்லை; அவரது நா எழவில்லை. அப்பொழுதுதான் அம் பேத்கர் என்ற கல்லும் கரைந்து விட்டதை அனைவரும் கண் டனர்; ஒப்பந்தத்திற்குக் குறுக்காக விருந்த தடையும் விலக ஆரம்பித்தது.

சிறையை விட்டு வெளி வந்ததும், டாக்டர் அம்பேத்கர் தமது சிநேகிதர்களைக் கலந்து ஆலோசித்தார். ஒரு மணி நேரம் ஆழ்ந்த ஆலோசனை நடைபெற்றது. கடைசியில் வெளி வந்ததும் அவர், "பத்து வருஷத்திற்குக் குறைந்த எந்தக் கால அளவையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது" என்று கூறினார். இனிமேல் என்ன செய்வது?

மறுபடியும் நாம் எரவாடாவைத்தான் நோக்கவேண்டும். அங்கு, அந்த மாமரத்தினடியில், காந்திஜி அசைவற்றுப் படுத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி அவ் வப்பொழுது அவரது கால், கைகளைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும், ஸர்தார்

வல்லபாயும், ஸ்ரீயுத மகாதேவ தேசாயும் அவருக்கருகில் வீற்றிருந்தனர். பகல் 3 மணி யிருக்கும். ஸ்ரீயுத இராஜ கோபாலாச்சாரியார் வந்திருப்பதாக மகாத்மாவுக்கு அறிவிக் கப்பட்டது. ஒப்பந்த மேற்பட்டு விட்ட செய்தியை அவர் எல்லோருக்கும் அறிவித்தார். "நீங்கள் ஒப்புக் கொண்டே தீரவேண்டும் என எண்ணி, என்னுடைய சொந்த பொறுப் பின் பேரிலேயே நான் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருக் கிறேன். வாக்கெடுக்கும் விஷயத்தைப் பிற்காலத்தில் பரஸ் பரம் இரு வகுப்பினரும் கலந்து முடிவு செய்து கொள்ளுவ தென நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம். டாக்டர் அம் பேத்கரும், அவருடைய நண்பர்களும் இந்த ஏற்பாட்டுக்கு இசைந்திருக்கின்றனர். இது எதையும் தடை செய்ய வில்லை; வாக்கெடுக்காமலேயே இருந்து விடக் கூடிய ஒரு நிலைமை யும் இந்த ஒப்பந்தத்தால் ஏற்படலாம். எல்லாம் பின்னால் நடக்கப் போகும் சம்பவங்களைப் பொறுத்திருக்கின்றது." என்றார் ராஜாஜி. அவர் சொன்ன யாவும் களைப்பு மேலிட் டுப் படுத்துக் கொண்டிருந்த மகாத்மாவின் செவிகளில் விழ வில்லை போலும்! ஆகவே அவர், "என்ன என்ன, இன் னொரு தடவை சொல்லுவீர்களா? என்று ராஜாஜியைக் கேட்டார். மேற்படி யோசனை மறுபடியும் அவருக்குச் சொல்லி விளக்கப்பட்டது. யாவற்றையும் காந்திஜி கவன மாகக் கேட்டார். கடைசியில் அவரது உதடுகளில் ஒரு புன் சிரிப்பு துள்ளி விளையாடியது. "பேஷ்!" என்று ஒரே வார்த்தையில் தமது உள்ளக் கருத்தையும், உவகையையும் வெளியிட்டார். அவருடன் கூட ஆறு ஆத்மாக்கள் ஆனந் தக் கூத்தாடின.

ராஜாஜி உடனே தலைவர்கள் மகா நாட்டிற்கு ஓடினார். ஒப்பந்தம் மகாத்மாவின் ஆசீர்வாதத்தைப் பெற்று விட்ட செய்தியைக் கேட்டதும் அம்பேத்கர் அடைந்த சந்தோஷத் திற்கு எல்லையே இல்லை.

பிறகு எரவாடா ஒப்பந்தத்தின் நகல் வரையப்பட்டது. இந்த வேலை வெகு சிக்கிரத்தில் முடிந்து விட்டது. எல்லா

ரிடமிருந்தும் கையெழுத்துக்கள் வாங்கப்பட்டன. இங்ஙனமாக உபவாஸத்தின் ஐந்தாவது தினத்தன்று பூரண ஒப்பந்தமும் ஏற்பட்டு விட்டது. மறுதினம், அதாவது செப்டம்பர் மாதம், 25-ந் தேதியன்று, பம்பாயில் கூடிய தலைவர்கள் பூரண ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தியது மட்டுமின்று சில தீர்மானங்களையும் நிறைவேற்றினர். இவ்வொப்பந்தம், தலைவர்கள் மகாநாட்டுத் தீர்மானங்கள் இவற்றின் முழு விவரங்களையும் அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

எரவாடா ஒப்பந்தம்

[சட்ட சபைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இருக்க வேண்டிய பிரதிநிதித்துவம் சம்பந்தமாகவும், அவர்களது நன்மைகளைப் பாதித்து வரும் இதர விஷயங்களைப்பற்றியும் ஜாதி ஹிந்துக்களின் தலைவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவர்களுக்கும் 1932-ம் வருஷம், செப்டம்பர் மாதம் 25-ந் தேதி யன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் முழு விவரமும் கீழே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது.]

1. பொதுத் தொகுதிகளிலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். மாகாண சட்ட சபைகளில் அவர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய ஸ்தானங்களின் தொகை பின் வருமாறு:—

சென்னை	....	....	30
சிந்துடன் கூடிய பம்பாய்		....	15
பஞ்சாப்	....	....	8
பீஹார், ஒரிஸா	....	....	18
மத்திய மாகாணம்	....	....	20
அஸ்ஸாம்	....	....	7
வங்காளம்	....	....	30
ஐக்கிய மாகாணம்	....	....	20
		மொத்தம்.	148

இந்த எண்ணிக்கைகள், பிரதம மந்திரியின் தீர்ப்பில் கண்டுள்ள மாகாண சட்ட சபைகளின் மொத்த ஸ்தானங்களைப் பொறுத்துக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

2. இந்த ஸ்தானங்களின் தேர்தல்கள் கூட்டுத் தொகுதிகள் மூலமாக நடைபெறும். ஆனல் இவ்விஷயத்தில் கீழ்க்கண்ட நடைமுறை அனுஷ்டிக்கப்படும்.

ஒரு தொகுதியின் பொது வாக்காளர் ஜாபிதாவில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பு அங்கத்தினர் யாவரும் சேர்ந்து ஒரு தேர்தல் சபையாக அமைவர்; இவர்கள் தங்கள் வகுப்பிலிருந்து மேற்படி ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒற்றை ஓட்டுகள் வீதம் நான்கு அபேட்சகர்களைத் தெரிந்தெடுப்பர்; இந்தப் பூர்வாங்கத் தேர்தலில் எந்த நால்வருக்கு அதிகமான ஓட்டுகள் கிடைக்கின்றனவோ அவர்கள் தான் பொதுத் தொகுதியால் தெரிந்தெடுக்கப் படுவதற்கான அபேட்சகர்களாக நிற்பர்.

3. மாகாண சட்ட சபைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவமும், ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதும் எவ்விதம் நடைபெறுகின்றனவோ, அதே மாதிரி அதாவது, மேற் கூறிய 2-வது ஷரத்தில் கண்டுள்ள பூர்வாங்கத் தேர்தல் முறைப்படியே மத்திய சட்ட சபையிலும் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்; ஸ்தானங்களும் ஒதுக்கி வைக்கப்படும்.

4. மத்திய சட்ட சபையில், பிரிட்டிஷ் இந்தியப் பொதுத் தொகுதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மொத்த ஸ்தானங்களில் 100க்கு 18 வீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும்.

5. மத்திய சட்ட சபை, மாகாண சட்ட சபைகள் இவைகளின் தேர்தலுக்கு அபேக்ஷகர்களாக நிற்கும் பேர்வழிக்கு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் பூர்வாங்கத் தேர்தல் முறை முதல் பத்து வருஷங்களுக்குப் பின்னர் முடிவடையும்; ஆனல், கீழ்க் கண்ட 6-வது ஷரத்தில் கண்டுள்ள

படி பரஸ்பர ஏற்பாட்டின் பேரில் இந்த முறையை மேற்குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவும் நிறுத்திக் கொள்ளலாம்.

6. இந்த ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள வகுப்புகள் தங்களுக்குள் பரஸ்பர ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு உறுதிப் படுத்தும் வரையில், மாகாண சட்ட சபைகளிலும், மத்திய சட்ட சபைகளிலும் ஸ்தானங்களை ஒதுக்கி வைத்து தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறை 1, 4-வது ஷரத்துக்களில் கண்டுள்ளபடி அளிக்கப்பட்டு வரும்.

7. மத்திய சட்ட சபையிலும், மாகாண சட்ட சபைகளிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குள்ள வாக்குரிமை லோதியன் கமிட்டி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியிருந்து வரும்.

8. ஸ்தல ஸ்தாபனங்களின் எந்தத் தேர்தல்களிலும் அல்லது பொது உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் விஷயங்களிலும் எவருக்கும், அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தைக் கொண்டு யாதொரு தடைகளும் ஏற்படுத்தப்பட மாட்டா.

பொது உத்தியோக நியமனங்களில் அபேக்ஷகர்களுக்கு இருக்க வேண்டிய கல்வி யோக்யதைகளைத் தழுவி, அவற்றில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நியாயமான பிரதிநிதித்துவ மேற்படுவதற்கான எல்லா முயற்சிகளும் செய்யப்படும்.

9. ஒவ்வொரு மாகாணத்திலும் கல்விக்காக சர்க்கார் அளிக்கும் நன்கொடையிலிருந்து தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கல்வி போதிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்த போதுமான தொகை ஒதுக்கி வைக்கப்படும்.

தலைவர்கள் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

25ந்தேதி பம்பாயில் கூடிய தலைவர்கள் மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் விவரம் :—

"இனி ஹிந்துக்களில் எவரும் பிறப்பினால் தீண்டத் தகாதவர் எனக் கருதப்படக் கூடாது. இதுவரை தீண்டத்

தகாதவர்களாகக் கருதப்பட்டு வந்தவர்களுக்கு பொதுக் கிணறுகள், பொதுப் பள்ளிக்கூடங்கள், பொது ரஸ்தாக்கள், இன்னும் இதர பொதுஸ்தாபனங்கள் இவற்றை உபயோகிப்பதில் மற்ற ஹிந்துக்களுக்குள்ள அதே உரிமைகள் உண்டு. இந்தச் சீர்திருத்தம் முன்னதாகவே ஊர்ஜிதம் பெறுவிட்டால், ஸ்வராஜ்யப் பார்லிமெண்டு ஏற்பட்டதும் சட்டங்கள் ஏற்படுத்துவதில் இதுவே முதலாவதாக விருக்கும்.

"தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் மீது ஜாதி ஹிந்துக்கள் தற்போது வழக்கம் என்ற பெயரால் சுமத்தி வரும் எல்லா சமூகத் தடைகளையும், அசௌகர்யங்களையும், கோயில்களுக்குள் அவர்களை அனுமதிக்க மறுத்து வரும் கொடுமையையும் விரைவில் நீக்க ஹிந்துத் தலைவர்கள் கிரமமான, சாந்த பூர்வமான எல்லா வழிகளையும் கைக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்படுகின்றது."

ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதாயினும், மகாத்மா உபவாஸத்தை நிறுத்துவதற்கான இன்னொரு முட்டுக் கட்டை அகலாமலேயிருந்தது. இவ்வொப்பந்த சமாசாரம் காந்திஜிக்கு எட்டியதும், அவர் உடனே லண்டனிலிருந்த பூஜ்யர் ஆண்டிரூஸுக்கு ஒரு தந்தி யடித்தார். ஒப்பந்தம் பூராவையும் பிரிட்டிஷ் மந்திரி சபை ஏற்றுக்கொண்ட செய்தியைக் கேள்வி யுற்றால்தான் தாம் தமது உபவாஸத்தை நிறுத்த முடியும் என மகாத்மாஜி அத்தந்தியில் குறிப்பிட்டிருந்தார். மகாத்மா உபவாஸத்தை நிறுத்துவதற்காக என்னென்ன நடை முறைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவை யாவையும் சற்றும் கால தாமதமின்றி உடனே எடுத்துக் கொள்ளுமாறு ஸர் ஸப்ரூ, ஸ்ரீயுத அம்பேத்கர், ராவ்பகதூர் எம். ஸி. ராஜா, பண்டித மாளவியா முதலியவர்களும் தனித்தனியே பிரதம மந்திரிக்கு அவசரத் தந்தி கொடுத்தனர்.

உபவாஸம் முடிந்தது

ஒப்பந்த மேற்பட்டு பதினறு மணி நேரமேயாயினும் அதற்குள் தேசம் பூராவையும் ஏக்கம் கவ்விக் கொண்டது,

பூனு ஒப்பந்தத்தை சர்க்கார் அங்கீகரிப்பார்களா? மகாத்மாவின் உயிர் காப்பாற்றப்படுமா என்ற கேள்விகளே எங்கும் கேட்கப்பட்டன. சர்க்கார் ஒப்பந்தத்தை ஏற்க மாட்டார்கள் என்று என்னும்படியான நிலைமையே எங்கும் வியாபித்திருந்தது. அதைக் கவர்ன்மெண்டார் ஏற்கக் கூடாது என்ற தோரணையில் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் எழுதி வந்தது மேற்படி எண்ணத்தை உறுதிப் படுத்தியது. 28ந்தேதி, புதன்கிழமை யன்று தான் பிரிட்டிஷ் மந்திரி சபை கூடுமென்றும், அதற்கு முன்னர் ஒரு முடிவும் ஏற்படா தென்றும் ராய்ட்டர் ஒரு செய்தியை உலகெங்கும் பரப்பியது. எல்லா கட்சியினரும் இவ்வொப்பந்தத்தை ஏற்கின்றனரா என்ற விஷயம் தெரிந்த பின்னர் தான் மந்திரி சபை தனது முடிவை யறிவிக்கும் என மற்றொரு செய்தி கூறியது. இது சம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்டார் எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயங்களையும் கேட்டிருப்பதாகவும் ஒரு வதந்தி உலவியது. இக் காரியம் முடிவதற்கு நான்கு தினங்கள் ஆகுமெனக் கூறப்பட்டது. பிரதம மந்திரியின் தீர்ப்புக்கு வெகு தூரம் மாறி யிருப்பதால் ஒப்பந்தத்திற்குச் சர்க்கார் தங்கள் சம்மதத்தை யளிக்க மாட்டார்கள் எனப் பல பத்திரிகைகளின் ஸிம்லா நிருபர்கள் ஒரு செய்தியைப் பரப்பினர்.

நிற்க, காந்திஜியின் நிலைமையோ மிகுந்த கவலைக் கிடங் கொடுத்தது. அவர் தமது சக்தி யனைத்தையும் இழந்து கிடந்தார். "அவர் ஆபத்து எல்லைக்குள் நுழைந்து விட்டார்" என்று அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் அறிவித்த செய்தி தேச மக்களைத் துயரத்தில் ஆழ்த்தியது. எந்த நிமிஷமும் காந்திஜிக்கு பாரிச வாயு ஏற்பட்டு விடுமென்றும், அவரது முடிவு காலத்தை அவர் நெருங்கி விட்டாரென்றும், இனிமேல் அவர் உபவாஸத்தை நிறுத்தி விட்டால் கூட ஆபத்து தான் என்றும் டாக்டர்கள் கூறினர்.

இன்ன செய்வதெனத் தெரியாது தலைவர்கள் விழித்தனர். எவ்வளவோ கஷ்டப்பட்டு, ஒப்பந்தத்தை ஏற்படுத்திய

பின்னர் மந்திரி சபையின் பிற்போக்குத் தன்மை காரணமாக காந்திஜியின் உயிர் மறைந்து விடுமோ என்று அவர்கள் ஏங்கினர். அப்படி ஏற்படுமானால், அது சரித்திரமே என்றும் காணாத பெருத்த விபத்தாகும் என்று அவர்கள் அபிப்பிராயப் பட்டனர்.

ஆனால் சிமையில், பூஜ்யர் ஆண்டிரூஸூம், இதர இந்திய நண்பர்களும் சும்மா யிருக்கவில்லை. எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமோ அவ்வளவு தூரத்திற்கு விஷயங்கள் துரிதப் படுத்தப் படுவதாக தமது 25ந் தேதிய தந்தியில் ஸ்ரீயுத ஆண்டிரூஸ் அறிவித்தார். மிஸ்டர் மாக்டனல்டின் மகனை அவர் நேரில் கண்டார். தமது நெருங்கின பந்து ஒருவரின் உத்தரக்கிரியைகளுக்கு மாக்டனல்டு செல்ல வேண்டி யிருந்ததாக அவன் அறிவித்தான் ஆயினும், எரவாடா ஒப்பந்தத்தின் பூரா விவரங்களும் தந்தி மூலமாக அவருக்குக் கிடைத்ததும் அவர் லண்டனுக்கு விரைந்து சென்றார்; அங்கு ஸர் ஸாம்யூல் ஹோரும் அவருடன் சேர்ந்து கொண்டார். லோதியன் பிரபுவும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் பரிசீலனை செய்தார். நெ. 10, டௌனிங் தெருவில் நள்ளிரவு வரையில் பலத்த ஆலோசனைகள் நடைபெற்றன. கடைசியாக எரவாடா ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுவதாக அவர்கள் முடிவு செய்தனர்.

26ந் தேதி முழுவதையும் தேசம் கவலையிலேயே கழித்தது. காந்திஜியைப் பார்ப்பதற்காகக் கல்கத்தாவிலிருந்து பூனாவிற்கு ஓடிவந்த கவி தாகூர் அன்று பகல் எரவாடாவுக்குப் போய் மகாத்மாஜியைக் கண்டார். கண்டதும் அவருக்கு மனம் தாளவில்லை. அப்படியே மகாத்மாவின் மார்பின்மீது தமது முகத்தை வைத்துக் கொண்டார்; பல நிமிஷங்களுக்கு அவர் முகத்தை உயரத் தூக்கவே யில்லை. மந்திரி சபை ஒப்பந்தத்தை அங்கிகரித்துவிட்ட செய்தியை அவர் ஏற்கனவே கேள்விப் பட்டிருந்தார். அதற்காகச் சந்தோஷப் பட்டார். தாம் மேலும் மகாத்மாவுடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பது அவருக்கு உபத்திரவத்தைக் கொடுப்பதாக விருந்ததால் கவிஞர் அவரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

எரவாடா ஒப்பந்தத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டு விட்டதாக 26-ந் தேதி காலையில் இங்கிலாந்திலும், இந்தியாவி லும் ஏககாலத்தில் அறிக்கைகள் வெளியாயின.

அப்பொழுதும் காந்திஜி தமது உபவாஸத்தை நிறுத்தச் சம்மதிக்கவில்லை. கவர்ன்மெண்டு அறிக்கை பூராவையும் தாம் படித்துப் பார்த்த பின்னர் தான் உபவாஸத்தை நிறுத்த முடியுமென அவர் தெளிவாகக் கூறி விட்டார். மாலை மணி 4 இருக்கும். சிறை இன்ஸ்பெக்டர் ஜெனரலான கர்னல் டாயில் யாவரும் எதிர் பார்த்துக் கொண்டிருந்த தஸ்தாவேஜுடன் எரவாடா வந்து சேர்ந்தார். அதை அவர் தாமே தமது கையினால் காந்திஜியிடம் சமர்ப்பித்தார். "சாவகாசமாக அதைப் படித்துப் பாருங்கள்" என்று சொன்னார். அச்சம யத்தில் ஸ்ரீயுத இராஜகோபாலாச்சாரியார், சங்கர்லால் பாங் கர், பண்டித ஹிருதய நாத குன்ஸ்ரு, ஸர்தார் வல்லபாய் படேல் முதலியவர்களும், இதர பல நண்பர்களும் மகாத்மா வின் பக்கத்திலேயே இருந்தனர். அவர் சர்க்கார் தஸ்தா வேஜியை வெகு கவனமாக வாசித்துவிட்டு, "இது உடனே தாழ்த்தப் பட்டவர்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்" என்று சொன்னார். ஆனால் அங்கு பிரசன்னமா யிருந்தவர்கள் அதனால் வீண் கால தாமத மேற்படுமென்றும், தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் எல்லோரும் பம்பாய்க் குப் புறப்பட்டுச் சென்று விட்டனர் என்றும், சர்க்காரின் அறிக்கை எல்லா அம்சங்களிலும் திருப்தி யளிப்பதாகவே யிருக்கின்றதென்றும் மகாத்மாஜிக்கு அறிவித்ததன் பேரில், அவர் அவர்களது ஏகோபித்த அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டார்.

உடனே அவர் கர்னல் டாயிலை அழைத்து, "நான் எனது உபவாஸத்தை நிறுத்தி விடத் தீர்மானித்து விட் டேன். எனக்கு எவ்வளவோ சந்தேகங்களிருந்தன; ஆயி னும் இங்கிருக்கும் எனது இத்தனை நண்பர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை மீறி நான் எனது உபவாஸத்தை மேலும் நீடிக்கும் பொறுப்பை ஏற்கத் தயாராகவில்லை. ஆனால் எனது உபவாஸத்தை நிறுத்துவதற்கு முன்னர் ஒரு விஷயத்தை மட்

டும். நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். நான் உபவாஸத்தை நிறுத்தின பின்னர் பழைய சிறை நிபந்தனைகளெல்லாம் மீண்டும் என் மீது சுமத்தப்படுமானால், இப்பொழுது நாட்டில் தோன்றி யிருக்கும் சீர்திருத்த வேலை பெரிதும் தடைப்படும். ஆகவே நான் சிறையிலேயே இருக்க வேண்டுமென்றால், எனது தீண்டாமை விலக்கு வேலையை நடத்துவதற்கு அவசியமான எல்லா வசதிகளும் அளிக்கப் படுமென நான் எதிர் பார்க்கிறேன்" என்று கூறினார். "நான் ஸர்வாதிகாரியல்ல; இருந்தாலும் தங்கள் கோரிக்கைகளை நான் இன்றிரவு கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பேன். நீங்கள் உங்கள் உபவாசத்தைச் சிக்கிரமாக நிறுத்திவிட வேண்டுமென்பதே எனது விருப்பம்" என்றார் கர்னல் டாயில். உடனே அவர் விடை பெற்றுக்கொண்டு சென்று விட்டார்.

மாலை 5-15 மணி. எந்த ஜெயிலின் சரித்திரத்திலும் அதுவரை காணப்படாத ஒரு அருமையான காக்ஷி எரவாடா மத்திய சிறையில் நடந்தது. மகாத்மா தங்கி யிருந்த இடம், நன்றாகத் தண்ணீர் தெளித்து சுத்தமாக்கப்பட்டது. காந்திஜி தமது கட்டிலின் மீது படுத்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி ரவீந்திரரும், ஸ்ரீமதிகள் ஸரோஜினி தேவி, வஸந்தா தேவி, ஸ்வரூபராணி நேரு, ஊர்மிளா தேவி, ஸ்ரீயுத அம்பாலால் சாராபாயும், அவரது குடும்பத்தினரும், ஸர்தார் வல்லபாய் படேலும், மகாதேவ தேசாயும் உட்கார்ந்திருந்தனர். தவிர சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் பலரும், இன்னும் மற்ற நண்பர்களுமாகச் சுமார் 200 பேர்களுமிருந்தனர். கீதாஞ்சலியிலிருந்து வங்காள பாஷையில் ஒரு பாட்டைப் பாடி கவிஞர் பிரார்த்தனையைத் தொடங்கினர். அதே சிறையைச் சேர்ந்த குஷ்ட ரோகக் கைதியான பரச்சூர் சாஸ்திரி என்பவர் சில ஸமஸ்கிருத கீதங்களைப் பாடினர். பிறகு மகாத்மாவிற்கு வெகு பிரியமான "வைஷ்ணவ ஜனதோ"வை எல்லோரும் சேர்ந்து பாடினர். இது முடிந்ததும், ஸ்ரீமதி கஸ்தூரிபாய் ஆரஞ்சு பழ ரஸத்தை மகாத்மாஜியிடம் கொடுத்தார். அதை உட்கொண்டு காந்திஜி தமது உபவாஸத்தை நிறுத்தினர். அங்கிருந்த யாவருக்கும் பழங்களும், தின்

பண்டங்களும் வழங்கப்பட்டன. மகாத்மாவின் உபவாஸ நிறுத்தத்தை எதிர்பார்த்து எண்ணற்ற நண்பர்கள் அனுப்பி வைத்திருந்த பழக் கூடைகள் ஏராளமாக அங்கு கிடந்தன. எல்லா ஹிருதயங்களும் ஆண்டவனுக்குத் தமது வந்தனங்களை யனுப்பின. அதற்கு முன்னர் துயரமும், ஏக்கமும் நிறைந்திருந்த இடத்தில் களிப்பும், உவகையும் நிறைந்திருந்தது.

உடனே மகாத்மா பத்திரிகைகள் மூலம் கீழ்க் கண்ட அறிக்கையை வெளியிட்டார் :—

" ஆண்டவன் பெயரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட உபவாஸம் அவரது பெயராலேயே நிறுத்தப்பட்டது. சென்ற ஏழு தினங்களாக இந்தியாவில் ஏற்பட்டுள்ள புதிய விழிப்பிலும், உத்வேகத்திலும் நாம் ஆண்டவனது அருளைக் காண்கிறோம். எனது உபவாஸத்தை மெச்சி எனக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் கிடைத்த தந்திகளே இந்த ஏழு தினங்களிலும் எனது உடலுக்கும், ஆத்மாவுக்கும் ஏற்பட்ட அவஸ்தைக்கு ஒருவாறு ஆறுதலாக விருந்து வந்தன.

"ஆனால் தீண்டாமையை பொழிக்க அத்தகைய அவஸ்தையி லிறங்குவது எவ்விதத்திலும் பிரமாத மானதல்ல. ஹிந்து மதத்தில் தீண்டாமை என்ற விஷம் துளியாவது ஒட்டிக் கொண்டிருக்கும் வரையிலும் ஒரு முறை மூட்டப் பட்ட அந்தத் தியாக அக்னி அணைக்கப்படவே மாட்டாது. என்னுடைய வாழ் நாளில் இந்தத் தீண்டாமை ஒழியவில்லை என்றால், அந்தக் கொடுமையை அகற்றி ஹிந்து மதத்தைப் பரிசுத்தப்படுத்தத் தங்கள் உயிர்களையும் பலி கொடுக்க பல்லாயிரக் கணக்கான சீர்திருத்தக்காரர்கள் தயாராக விருக்கின்றனர்.

" எல்லோரும் தயாளத்துவம் காட்டி, பரஸ்பரம் விட்டுக் கொடுத்ததினாலேயே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தில் எல்லா ஹிருதயங்களும் ஒன்றுபட்டன. ஹிந்துக்களின் சார்பாக நான், ஒரு புறம் டாக்டர் அம்பேத்கருக்கும் ராவ்பகதூர் ஸ்ரீனிவாசனுக்கும் அவர்களது கக்ஷி

பினருக்கும், மற்ெருரு புறம் ராவ்பகதூர் எம். ஸி. ராஜாவுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல நூற்றாண்டுகளாகத் தங்கள் வகுப்பினருக்கு ஜாதி ஹிந்துக்கள் இழைத்து வரும் சகிக்க முடியாத கொடுமைகளுக்காக அவர்களைத் தண்டிக்கும் பாவனையில் தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்கள் சற்றும் இணக்கம் காட்டாமலிருந்திருக்கலாம். அப்படி அவர்கள் செய்திருந்தார்களானல் அவர்களது நோக்கத்தை நான் எதிர்த்திருக்க முடியாது; அந்தக் கொடுமைகளுக்காக எனது உயிரை அவர்கள் பலி கேட்பது எவ்விதத்திலும் அதிகமானதாகாது. ஆனல் அவர்கள் இதைவிட உயரிய மார்க்கத்தைக் கடைப்பிடித்தனர். தவறு செய்பவர்களை மன்னிப்பதையே எல்லா மதங்களும் போற்றுகின்றன; அந்த வழியையே அவர்கள் பின்பற்றித் தங்களுக்குப் பெருமை சம்பாதித்துக் கொண்டனர். ஜாதி ஹிந்துக்களும் தங்கள் பெருமைக்கேற்ப நடந்து கொண்டு, ஒப்பந்தத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நிறைவேற்றி வைக்கப் பாடுபடுவார்கள் என நான் நம்புகிறேன்.

"ஒப்பந்தம் முடிவின் ஆரம்பமேயாகும். வருங்காலத்தில் ஜாதி ஹிந்துக்கள் செய்ய வேண்டிய வேலை ஏராளமாகவிருக்கின்றது; ஹிந்துக்களில் ஏராளமான பேர்கள் பல வருஷங்களாக அனுபவித்து வரும் சமூக மதக் கொடுமைகளைப் பூராவும் அகற்ற அவர்கள் பாடுபட வேண்டும். இவ் வேலைகளைக் கவனிக்குமிடத்து, ஒப்பந்தத்தின் ராஜீய அம்சம் எவ்வளவு முக்கியமானதாயினும் அது தன் முக்கியத் தன்மையை இழந்து விடுகின்றது.

"இச் சீர்திருத்த வேலை துரிதமாக நடந்து, சீக்கிரத்தில் மேற்படி கொடுமைகள் எல்லாம் அகலாமலிருக்குமானல், நான் உபவாஸத்தை மீண்டும் தொடங்க நேரிடும் என்ற உறுதியின் பேரிலேயே இப்பொழுது நான் உபவாஸத்தை நிறுத்தியிருக்கிறேன். ஆகவே இவ்விஷயத்தை நான் சீர்திருத்தக்காரர்களுக்கும், ஜாதி ஹிந்துக்களுக்கும் எடுத்துரைத்து எச்சரிக்கை செய்யாமல் போவேனேயானல்,

நான் நம்பிக்கைத் துரோகமிழைத்தவனுவேன். தீண்டாமை யொழிக்கப்படுவதற்கு நான் ஒரு கால வரையறையை நிபந்தனையாக ஏற்படுத்தலாமென எண்ணி யிருந்தேன்; ஆனல் அந்த வழியில் இன்னும் எனது அந்தராத்மா திட்டமாக ஆக்ஞை யிடவில்லை. விடுதலைச் செய்தி தீண்டத்தகாதவர்கள் வீடு தோறும் பரவ வேண்டும்; சீர்திருத்தக்காரர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று வேலை செய்ய ஆரம்பித்தால் தான் அந்தக் காரியம் கை கூடும். ஆனல் ஒரு விஷயத்தை மட்டும் அவர்கள் மறந்து விடக் கூடாது. நாடெங்கும் ஏற்பட்டுள்ள புதிய ஊக்கத்திலும், மீண்டும் நான் தியாக அக்னியில் குதிக்காமலிருக்கும்படி என்னைக் காக்க வேண்டுமென்ற ஆசையிலும் யாரும் நிர்ப்பந்த முறையில் இறங்கக் கூடாது. நாம் பொறுமையாக விருந்து, நாமே எல்லாக் கஷ்டங்களையும் அனுபவித்து, அறியாமையிலும், மூட நம்பிக்கைகளிலும் ஆழ்ந்து கிடப்பவர்களின் மனதை மாற்ற வேண்டும்.

"இறுதியாக, என்னை வெகு ஜாக்கிரதையுடன் பரிபாலித்து வந்த கவர்ன்மெண்டுக்கும், ஜெயில் சிப்பந்திகளுக்கும், வைத்தியர்களுக்கும் எனது வந்தனம் உரித்தாகுக. எவ்விதக் குறையு மில்லாமல் அவர்கள் எல்லோரும் என்னைக் கவனித்து வந்தனர். ஜெயில் சிப்பந்திகள் மும்மடங்கு கஷ்டத்தினிடையே வேலை செய்தனர்; அவர்கள் முகங் கோணமல் யாவற்றையும் பொறுமையுடன் செய்ததை நான் கண்டேன். ஆகவே அவர்கள் யாவருக்கும், பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும், கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கும் நான் வந்தன மளிக்கிறேன்.

"தங்கள் தீர்ப்பை விரைவில் வெளியிட்ட பிரிட்டிஷ் மந்திரி சபைக்கும் நான் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன். மந்திரி சபையின் வகுப்புத் தீர்ப்பு சம்பந்தமான ஒப்பந்தத்தின் பாரத்தை மட்டுமே அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என நான் எண்ணுகிறேன். இது இயற்கையே. பூரா ஒப்பந்தத்தையும் தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதாக அறிவிப்பதில் அவர்களுக்குச் சட்ட பூர்வமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்குமென நான் எதிர் பார்க்கிறேன்.

"ஆனல் அவ்வொப்பந்தம் பூராவையும் நிறைவேற்றி வைக்க நான் கட்டுப்பட்டிருக்கிறேன் என்பதை எனது ஹரிஜன நண்பர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன். இந்தத் துறையில் எனது உயிரையே பிணையாக வைக்கவும் நான் தயாராகவிருக்கிறேன் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளட்டும்."

வாழ்க காந்தீயம்!

தேச மக்களுக்கு மகாத்மாஜி தமது அறிக்கை மூலம் விடுத்த இவ் வேண்டுகோள் எதிர்பார்த்த பலனைத் தராமலில்லை. அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கம் ஏற்பட்டு, அதன் மூலமாக இன்று தீண்டாமையை ஒழிக்க நாடெங்கும் நடந்துவரும் ஜீமூதமான இயக்கம் மகாத்மாவின் உபவாஸத்தால் ஏற்பட்டதேயாகும். பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பை உடைத்தெறிய பூனா ஒப்பந்தம் ஏற்பட்டதுமன்றி, நமது ஹிந்து சமூகம் கடைத்தேறுவதற்கான சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டனவென்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளோம். அவற்றை அமுலில் கொணர்ந்து, ஹரிஜனங்களை உத்தாரணம் செய்வதற்கான மகத்தான இயக்க மொன்று நாட்டில் நடந்து வருகின்றது. கேரளத்தில் ஸ்ரீயுத கேலப்பன் என்ற வீரர் குருவாயூர் கோயிலின் முன்னே "சாகும் வரை பட்டினி" கிடக்க முற்பட்டாரென்பதை நாம் மறக்க முடியாது. ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் தந்தே யாகவேண்டு மென்ற ஆவேசம் ஹிந்து மக்களிடையே ஏற்பட்டுளது. அதன் அறிகுறியாகவே கேலப்பன் உண்ணவிரத மேற்ருர். எரவாடாவினின்று கிடைத்த உத்தரவு காரணமாகவே அவர் அதை நிறுத்த வேண்டி யேற்பட்டது. குருவாயூர் கோயிலை ஹரி ஜனங்களுக்குத் திறக்குமாறு செய்யும் முயற்சியில் தாமும் தியாகம் புரியத் தயார் என்று மகாத்மாஜி உலகிற் கறிவித்தார். ஆகவே குருவாயூரைச் சுற்றியுள்ள ஹிந்து மக்களின் அபிப்பிராயம் கோயில் பிரவேச விஷயத்தில் எவ்வாறுளது என்பதைக்

கண்டறிய, அங்கும் வாக்கு எடுக்கப்பட்டது. ஹிந்துக்களில் முக்கால் வாசிப் பேர்களுக்கு மேல் சாதகமாக ஒட்டு செய்தனர்.

இவ்வளவு செய்தும் ஹரிஜன கோயிலில் பிரவேசத்திற்குத் தடையாகச் சில சர்க்கார் சட்டங்கள் இருப்பதால் அவற்றை நீக்குவதற்காக சென்னை சட்ட சபையிலும், டில்லி சட்ட சபையிலும் அங்கத்தினர்களால் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. சென்னை சட்ட சபையில் ஆஜர் செய்ய விருந்த ஆலயப் பிரவேச மசோதாவை வைஸ்ராய் தடுத்து விட்டாராயினும், அதுவே அகில இந்திய மசோதாவாக டில்லி சட்ட சபையை நாடி விட்டது. இதுதான் இன்றைய நிலைமை.

பல்லாயிரம் ஆண்டுகளாக நாட்டைப் பற்றிக் கொண்டிருந்த தீண்டாமை என்னும் பேயை அடித்து விரட்ட வழி தெரியாது இருளில் தவித்துக் கொண்டிருந்த தேச மக்களுக்குக் காந்திஜியின் உபவாஸம் ஒளி தந்தது. அந்த உபவாஸ வெற்றியை நாடெங்கும் மக்கள் குதூகலத்துடன் கொண்டாடினர்; அச் செய்தி கேட்டு உலகமே உவகை கொண்டது; உலகின் மறத் திமிரை ஒழித்து, அற வழிக்கு அடி கோலிய அந்த அவதார மூர்த்தியின் தியாக வெற்றியை உலகம் எங்ஙனமாக மறக்க முடியும்? இருள் நிறைந்த இவ்வுலகுக்கு ஒளி தந்து கொண்டிருக்கும் அந்தக் காந்தி தீபம் அணையாமல் காத்த ஆண்டவனுக்குக் கோடானு கோடி மக்கள் தமது வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

அகலிகைக்கு இராமபிரான் சாப விமோசனம் அளித்த கதையை நாம் இராமாயணத்தில் வாசிக்கிறோம். அதே மாதிரியானதொரு சம்பவத்தை இப்பொழுது நாம் நேரில் கண்டோம். தவறான வழியில் சென்ற திரு. அம்பேத்கரைத் திருத்தி, அவரது அபிப்பிராயங்களை மாற்றி, நேரான பாதையில் நடந்து செல்லுமாறு செய்ததுதான் அச்சம்பவம். அதுதான் காந்தியத்தின் வெற்றியாகும். மலை போல் நின்று மார் தட்டி வீறுப்புப் பேசிய அம்பேத்கரை மடமடவெனக் கீழே

இழுத்துவந்து, அவரது மனதை ஆட்கொண்டது கீழ்நாட்டு ஆத்ம சக்தியின் வெற்றியாகும். பூனு ஒப்பந்தத்திற்குப் பிறகு நடந்த தலைவர்கள் மகா நாட்டில், புனர் ஜென்ம மெடுத்த அம்பேத்கர் புதிய ஞானேதயத்துடன் பேசிய பேச்சுக்களைச் சரித்திரம் என்றும் மறக்க முடியாது.

"அடடா! சில தினங்களுக்குமுன் நான் என்ன பாடு பட்டேன்? என்ன தவிப்பு தவித்தேன்? இரண்டு பிரச்னை களுக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருந்தது. ஒரு பக்கம் இந்தியாவின் சிரேஷ்ட புருஷரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதைக் காப்பாற்ற வேண்டியது ஒரு கடமை. என்னுடைய வகுப்பினரின் நலன்களைப் பாது காக்க வேண்டியது மற்றொன்று; இவ்விரண்டில் எதைச் செய்வது, எதை விடுவது என்று எண்ணி நான் அவதியுற் றேன். ஆனல் மகாத்மா என் துணைக்கு வந்தார். சிக்கச் சக்கமான நிலையிலிருந்து என்னை விடுவித்தார். அவரது உத வியால் இரு காரியங்களும் நிறைவேறி விட்டன. சர்வகக்ஷி மகா நாட்டில் எலியும், பூனையும் மாதிரி இருந்த நாங்களிரு வரும் இன்று ஒன்று சேர்ந்திருப்பது அற்புதமாகத் தானிருக் கிறது. சங்கடமான நிலைமையிலிருந்து என்னைக் காப்பாற்றி யதற்காக நான் மகாத்மாவுக்கு நன்றி செலுத்துகிறேன்."

இவையே அம்பேத்கர் வெளியிட்ட வார்த்தைகள். கலி யுக இராமபிரானைத் திகழும் மகாத்மா மூல்யமாக அவருக்குச் சாப விமோசனம் ஏற்பட்டு, அவரது சாபல்யம் நீங்கிய அற் புதம் கண்டு உலகம் இன்றும் வியந்து கொண்டிருக்கின்றது.

அன்று விருத்திரன் என்ற அவுணனைக் கொல்லுவதற் காக மகான் ததிசி "பிராயோபவேசம்" செய்து, முதுகெலும் பைத் தந்தார். பகவான் இயேசு சிலுவையிலேறி கர்த்தரின் பெருமையையும், அன்பு மதத்தையும் உலகிற்குப் போதித் தார். இப்பொழுது அத்தகைய மகா சம்பவங்களில் ஒன்று நமக்கிடையே நடந்ததை நாம் கண்டோம். பாரத நாடு ஓர் தியாக பூமி யென்பதை மகாத்மாவின் இவ்வுபவாஸம் உல கிற்கு நிதர்சனமாக்கி விட்டது!

உண்ணுத் தவம் கிடந்து மகாத்மாஜி உலகிற்கு எவ்வளவோ தடவை புத்தி புகட்டியிருக்கிறார். ஆப்பிரிக்காவில் ஒரு தடவை 14 நாள் உண்ணாவிரத மேற்றதையும், பின்னர் ஹிந்து முஸ்லிம் பிணக்குகள் ஒழிய 21 நாள் உபவாஸம் பூண்டதையும், பிறகு ஆசிரமத்தினருக்கு நற்புத்தி புகட்டுவதற்காக ஒரு வாரம் தவம் கிடந்ததையும் உலகம் இன்னும் மறக்கவில்லை.

அன்று இளையபெருமான் நாகாஸ்திரத்தினுலடிபட்டுக் கிடந்தபோது அண்ணல் இராமன் கூறினுன்: "உன்னோடு யானும் மடிகின்றேன்" எனச் சாவைக் கட்டியணைத்தான். ஆனால் திடீரென்று அனுமார் பாய்ந்து வந்தார்; சஞ்சீவி தந்தார்; இளையவன் எழுந்தான்; அண்ணலும் புத்துயிரோடு புறப்பட்டார். இதே நாடகம் தான் மறுபடியும் பாரத நாட்டில் 1932-ம் வருஷத்தின் இறுதியில் நடந்தது.

காந்திஜியின் இரத்த சகோதரன், தாழ்த்தப்பட்ட ஏழையின்மீது 'தனித் தொகுதி' அம்பு பாய்ந்தது. அம்புக்காக உயிர்விட அண்ணல் காந்தியும் துணிந்தார். கடைசியில் சஞ்சீவி வந்தது போன்று எரவாடா ஒப்பந்தமும் கிடைத்தது. நாகாஸ்திரத்தினின்று பிழைத்த ஒடுக்கப்பட்டோர் வாழ்க! புனிதருள்ளே முதன்மையான புனிதன் வாழ்க!

வாழ்க காந்தீயம்! வாழ்க ஆத்ம சக்தி!

The Lunar Printing Press, Triplicane, Madras.

சங்கு நூல்கள்

ரோமேன் ரோலண்டு எழுதிய			
மகாத்மா காந்தி (புதிய பதிப்பு)	0	4	0
வில்லியம் தர்ஸ்டன் எழுதிய			
இல்லற மகா ரகஸியம்	0	4	0
பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான			
இந்தியாவின் கடன் பொறுப்பு ...	0	4	0
க. சந்தானம் எழுதிய			
சத்திய சமாஜம்	0	4	0
வ. வே. ஸு. அய்யர் எழுதிய			
மங்கையர்க்கரசியின் காதல் கதைகள்	0	8	0

மகாத்மா காந்தி எழுதிய நூல்கள்

இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0

(சங்கு. ஸுப்ரஹ்மணியன் மொழிபெயர்த்தது.)

இல் வாழ்க்கையில் ஆடவரும் பெண்டிரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்தைப் பற்றி காந்திஜி மேற்படி நூலில் உபதேசித்திருக்கின்றார். உலகில் பிரும்மசாரிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் விவரித்திருக்கின்றார். இன்னும் கருத்தடை, சந்தான விருத்தி முதலிய விஷயங்களையும் சர்ச்சை செய்து முடிவு கூறியிருக்கிறார். அவசியம் ஒவ்வொருவரும் இந்நூலைப் படித்தே தீரவேண்டும்.

நீதி தர்மம்	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச் சங்கு புத்தகசாலை,

பைக்ராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.